தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 68

# நாடீ சக்கிரம்.

(தமிழ் மொழி பெயர்ப்புடன்)

பதிப்பாசிரியர் :

**ஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரிகள், B. A.,**
ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதி மஹால்.

**ஸ்ரீ K. S. ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரிகள்,**
ஸம்ஸ்கிருத பண்டிதர், ஸரஸ்வதி மஹால்.

ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக
கௌரவக் காரியதரிசி
**ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்களால்**
வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்
ஸ்ரீரங்கம்
**1955**

விலை ரூ. 3

# PREFACE

This publication is a rare Sanskrit work on Indian Medical Science, and it relates to "Nāḍī" or "the Science of feeling the pulse". "Feeling the pulse" is a universal practice among medical men, although the interpretations of the pulse-beats may be different in different systems. Among the allopathic medical men, the pulse-beats form an index to the heart-beats and the condition of blood-vessels. Among the Indian Medical men however, an elaborate system of diagnosis has been built upon the pulse-beats. These beats are said to reveal the excess or deficiency of Vāta, Pitta and Kapha. These are the active substances in the living body that circulate throughout the system and are mainly responsible for the proper distribution and working of the respective systems of (1) physical energy, (2) of heating, and (3) of cooling and lubrication of the machinery of the living body. The excess and deficiency of these three principles are mainly responsible for diseases; and the restoration of their proper proportions effects a cure.

This being the basis of diagnosis, classification of diseases, and treatment of diseases, the importance of an easy method of determining the excess or deficiency of the three principles cannot be over-estimated. The science of feeling the pulse has therefore been elaborately developed among Indian Practitioners. But the subject is more of a practical nature than a theo-

retical one. You can feel the pulse at one moment and identify the same kind of pulse again. But to describe it in words is next to impossible. There are numerous subtle differences in the flow of the pulse and in the crests and troughs of its wavy motion. The science has therefore been preserved by traditional practice and actual demonstration of the teacher to the pupil. The written works on the subject are necessarily very difficult of being translated into the sensations of touch involved in the feeling of pulse.

Unfortunately, however, the want of encouragement to indigenous medical practitioners during the British rule has practically wiped away the skilled line of traditional practitioners well-versed in the art of feeling the pulse. We have now to revive the Science with the help of books. Books however are very few and scrappy and their descriptions vague and seemingly contradictory. To gather all the available texts and edit and publish them is therefore our first business. A treatise in twelve chapters in Sanskrit named 'Nādīcakram' that has been preserved in the Saraswati Mahal Library has now been published, and it is hoped other texts available in other places will soon be published.

Sri K. Vasudeva sastry, our Pandit for Research and Sri K. S. Subrahmanya sastry, our Sanskrit Pandit, have spared no pains in editing the text and giving a faithful translation of the same in Tamil. The introduction which has been contributed by Sri K. Vasudeva sastri is intended to explain the

subject in all its implications and supply the missing portions of the subject from other sources.

Our thanks are due to the learned editors for their valuable services. It is hoped that this publication will be found useful to students of Indian Medicine.

We are grateful to the Government of Madras for their liberal grants that have helped us to publish this and other valuable manuscripts of this library.

Saraswati Mahal
Library, Tanjore.
9—4—1955.

S. GOPALAN,
*Honorary Secretary.*

# முகவுரை

'நாடீ சக்ரம்' என்னும் இவ்வடமொழி நூல் வாத பித்த கபங்களின் சமம், மிகை, குறைவு இவற்றையும், ஏனைய வியாதிகளையும், நாடியின் நடையைக் கொண்டு கண்டுபிடிக்கும் வழியை விளக்கும் நூல். ஓர் நோயாளியின் நோயை நிச்சயிப்பதற்கு எட்டுவகைப் பரீக்ஷை அவசியம் என்று தமிழிலும் வட மொழியிலும் உள்ள ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

அவை, 1. நாடி 2. ஸ்பரிசம் (தொட்டுப்பார்த்தல்) 3. தேகத்தின் நிறம் 4. குரல் 5. கண்கள் 6. மலம் 7. மூத்திரம் 8. நாவு.

இவற்றுள் நாடி, நாவு, மூத்திரம் இவை மூன்றும் முக்கியமானவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம் மூன்றினுளும் நாடி பார்த்தல் மிகவும் முக்கியமான தென்று நம் நாட்டிலும் மற்ற நாடுகளிலும் உள்ள எல்லா வைத்திய முறைகளிலும் கருதப்படுகிறது. அது காரணம் பற்றியே நோயாளியின் கையைப் பிடித்து நாடி பார்த்தல் என்ற பழக்கம் உலகிலுள்ள எல்லா வைத்தியர்களிடமும் இருந்து வருகிறது. ஆனால் மேல் நாட்டு முறையில் நாடியின் நடை இருதயத்தின் துடிப்பினால் ஏற்படுகிறது என்று நிச்சயிக்கப்பட்டிருப்பதால் கையில் நாடியின் நடையைக் கவனிப்பதோடு இருதயத் துடிப்பை

யும் கவனிப்பது மேல் என்று நினைத்து இருதயத்தின் துடிப்பை 'ஸ்டெதஸ்கோப்' (Stethoscope) என்னும் குழாய் வழியாய்க் காது கொண்டு அறிகிறார்கள். இதனால் இருதயத்தின் ஸ்திதி செவ்வனே அறியப்படும்.

நமது நாட்டு வைத்திய முறையில் நாடியின் நடை உடம்பிலுள்ள வாத, பித்த, கபம் என்ற மூன்று தாதுக்கள் அல்லது தோஷங்களின் மிகையினாலும், குறைவினாலும் மாறுபடும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். நமது வைத்திய நூல்களில் வாதம், பித்தம், கபம் என்பவை உடம்பு முழுவதும் பரவி உடம்பில் பல முக்கியமான வேலைகளைச் செய்கின்றன என்றும் அவை சமமாக இருக்கும்போது உடம்பு நோயற்ற நிலையில் இருக்குமென்றும் அவை அதிகப்படினும், குறையினும் நோய் உண்டாகுமென்றும், அந்தக் காரணம் பற்றி வாத, பித்த, கபங்களை சமப்படுத்தி எல்லா வியாதிகளையும் குணப்படுத்தலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் வாத, பித்த கபங்களின் சமம், மிகை, குறைவு என்ற அளவு நமது வைத்திய முறையில் மிகவும் முக்கியத்வம் வாய்ந்திருக்கிறது.

## வாதம், பித்தம், கபம் என்பவை என்ன ?

வாதம், பித்தம், கபம் என்ற மூன்றும் நாம் உண்ணும் உணவினின்றும் அது ஜீரணிக்கப்படுகையிலும் பிறகு இரத்தம், மாமிசம் முதலிய தாதுக்களாக மாறும் போதும் உண்டாகின்றன.

கபம்

நாம் உண்ணும் உணவு வயிற்றில் போய்ச் சேர்ந்தவுடன் முதலில் ஜீரணமாவது தித்திப்பான பாகமும், தித்திப்பாக மாறக்கூடிய பாகமுமே. இந்த முதற்பகுதி ஜீரணமானவுடன் அப்போது மேலே நுரையாக மிதப்பது 'கபம்'. அது வெளுப்பும், வழவழப்புமுள்ள ஓர் திரவம். அது அவ்விடத்திலிருந்து உடம்பின் பல பாகங்களுக்குச் சென்று பலவித வேலைகளைச் செய்கிறது. முக்கியமாக (1) கைப்பு (2) குளிர்ச்சி (3) வழவழப்பு (4) பசை போன்ற தன்மை (5) பலம் (6) பொறுமை (7) தைரியம் இவற்றைக் கொடுக்கிறது. மேலும் எலும்புகள் சேரும் இடத்தில் அவற்றிற்கு ஆதாரமாகவும், அசைவுக்கு உதவியாக கைப்பைக் கொடுத்தும், இருதயத்துக்கு ஆதாரமாகவும், வயிற்றில் இருந்து கொண்டு ஆகாரம் ஜீரணம் ஆவதற்குத் தகுதியாக அதை நெகிழச் செய்தும், நாக்கிற்கு ருசி பார்க்கும் சக்தியைக் கொடுத்தும், தலையில் இருந்து கொண்டு கண்களைக் குளிரச் செய்தும் உதவுகின்றது. அது அதிகமாகத் தங்கியிருக்கும் இடங்கள் தலை முதல் இருதயம் வரையில் உள்ள பாகமும், பூட்டுகளும், வயிறும், கொழுப்பும் ஆகும்.

பித்தம்

இனிப்பான பகுதியின் ஜீரணம் முடிந்தவுடன் உணவிலுள்ள புளிப்பான பகுதியும், புளிப்பாக மாறக்கூடிய பகுதியும் வயிற்றிலேயே ஜீரணமாகிறது. இந்தப்

பகுதி ஜீரணமானதும் அப்போது மேலே மீதந்துவரும் திரவத்திற்குப் பித்தம் என்று பெயர். அது பச்சை கலந்த மஞ்சள் நிறமானதும், புளிப்பும் காரமும் சேர்ந்த சுவையுள்ளதுமான திரவம். இது வயிற்றிலிருந்து உடம்பின் பல பாகங்களுக்கும் சென்று பலவிதமான வேலைகளைச் செய்கிறது. அது வயிற்றையும் குடலையும் சேர்க்கும் வளைந்த குழாயாகிய 'க்ரஹணி' என்னும் இடத்திற்கு வந்து அங்கே உஷ்ணமாக மாறி அதன் மேலே வயிற்றிலிருக்கும் அன்னத்தை பக்குவம் செய்விக்கிறது. மேலும், வயிற்றில் நடக்கவேண்டிய ஜீரணம் முடியும் வரையில் வயிற்றிலுள்ள உணவு கீழே இறங்காமல் தடுக்கிறது. வயிற்றில் ஜீரணம் முடிந்தவுடன் உணவு கீழே இறங்குவதற்கு இடம் கொடுக்கிறது. இடங்கொடுத்து உணவு குடலுக்கு இறங்கிய பிறகு குடலில் நடக்க வேண்டிய ஜீரணத்திற்கும் மேலிருந்து உஷ்ணத்தைக்கொடுத்து உதவுகிறது. உணவின் ஸாரமாகிய ரஸம் சிவப்பு வர்ணத்தை அடைந்து ரத்தமாக மாறுவதும் பித்தத்தினுலேயே. கண்ணின் பார்வைச் சக்திக்குப் பித்தமே ஆதாரம். உடம்பின் மேனிக்கும் பித்தம் காரணம். ஆகவே பித்தம் சில சமயங்களில் திரவ ரூபமாகவும் சில சமயங்களில் உஷ்ண ரூபமாகவும் வேறு சில சமயங்களில் ஜோதி வடிவமாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது.

இவ்விதம் உஷ்ணமாக மாறிய பித்தத்தின் சக்தியையே அக்னிபலம் என்று சொல்லுகிறோம். இந்த அக்னி

பலமே ஆயுளுக்கும், வர்ணத்திற்கும், பலத்திற்கும், ஆரோக்யத்திற்கும், உற்சாகத்திற்கும், தேகபுஷ்டிக்கும் காந்திக்கும், உடம்பின் எல்லா தாதுக்களின் ஸாரமாகிய ஓஜஸ் என்பதற்கும், உடம்பின் உஷ்ணத்திற்கும், ஐந்து வகை ப்ராணன்கள் என்று சொல்லப்படும் வாயுவின் சக்திக்கும் ஆதாரமாக இருக்கிறது. மேலும் பித்த மானது இருதயத்தில் இருந்து, பொருள்களை அடைய வேண்டுமெனும் ஆசை, அதற்கான முயற்சி இவற்றைத் தூண்டுகிறது. இவ்வாறாகப் பல இடங்களில் பல்வித வேலைகளைச் செய்தபோதிலும் பித்தம் அதிகமாகத் தங்கியிருக்கும் இடம் இருதயத்திற்குக் கீழே தொப்புள் வரையில் உள்ள இடங்கள்.

வாதம்

உணவு குடலுக்கு இறங்கிய பிறகு உணவில் கார மான பகுதியும், காரமாக மாறக்கூடிய பகுதியும் பக்குவ் மடைகின்றன. ஜீரணத்தின் இந்தப் பகுதியில் வாதம் உண்டாகிறது. வாதம் என்பது கண்ணால் பார்க்கக் கூடியதில்லை. காற்று எப்படி ஸ்பரிச உணர்ச்சியால் அறியப்படுகிறதோ அப்படியே சரீரத்தில் உண்டாகும் வாதமும், அது செய்யும் வேலையினாலும், மற்ற குணங் களாலும் அறியப்படும். அது பொதுவாகக் காற்றின் தன்மையை உடையது என்று சொல்லலாம். பித்தம் எப்படி உஷ்ண சக்தியாக மாறுகிறதோ அப்படியே வாதமும் சரீரத்தில் பல வேலைகளைச் செய்யும் சரீர சக்தி (Physical energy) யாகவும் மாறுகிறது.

வாதம் நமது உடம்பில் பல இடங்களுக்கும் சென்று பல முக்கியமான வேலைகளைச் செய்கிறது. அவை வருமாறு :—

(1) வாக்கு, மனது, உடம்பின் பல பாகங்கள், ஐம்புலன்கள் இவைகளின் வேலை.

(2) மூச்சுவிடுதல், உற்சாகம்

(3) ரஸம் (chyle), இரத்தம் (blood) இவைகளை உடம்பில் ஸமமாகப் பரவும்படிச் செய்தல்

(4) மல மூத்திராதிகளை வெளிப்படுத்தல்

வாதம் உடம்பு முழுவதும் சென்று பல வேலைகளைச் செய்தபோதிலும் அது அதிகமாகத்தங்கியிருக்கும் இடம் தொப்புளுக்குக் கீழே உள்ளங்கால் வரையிலுள்ள பாகங்கள். அவற்றுள் விசேஷமாகத் தங்கியிருக்கும் இடங்கள், குடல், துடை இடுக்குகள், பிற்பட்டைகள், துடை, பூட்டுக்கள், குதிகால் இவைதளே.

இவ்வாருக வாதம், பித்தம், கபம் இவை மூன்றும் நமது உடம்பில் நடக்கும் பல வேலைகளுக்கும் இன்றியமை யாதவை. ஆனால் இவைகள் இருக்க வேண்டிய அளவுக்கு மிகினும், குறையினும் இவைகளே பலவித நோய்களுக்குக் காரணமாகின்றன. இவை எல்லா அங்கங்களிலும் புகுந்து பலவித வேலைகளைச் செய்வதால் இவைகள் சம்பந்தப்படாமல் யாதொரு நோயும் ஏற்படு வதில்லை என்று சொல்லலாம். இவைகளை சமப்படுத்

தினால் அநேகமாய் எல்லா நோய்களையும் குணப்படுத்தலாம். ஆகையால் உடம்பில் வாதம், பித்தம், கபம் இவற்றின் நிலையை அறிந்து அவற்றின் மிகுதியையும், குறைவையும் சமப்படுத்துவதே ஆயுர்வேத சிகிச்சையின் முக்கிய நோக்கம்.

## வாத, பித்த, கபங்களின் குணங்கள்

வாதம், பித்தம், கபம் இம்மூன்றின் குணங்கள் வருமாறு :—

வாதத்தின் குணங்கள் :—

வறட்சி
இலேசு
குளிர்ச்சி
சுறசுறப்பு
நுட்பம்
ஸ்திரமில்லாமல் சஞ்சரிக்கும் தன்மை

பித்தத்தின் குணங்கள் :—

சிறிது நைப்பு
உஷ்ணம்
வேகம்
திரவம்
கெகிழ்ந்தோடுதல்
புளிப்பும், காரமும்

கபத்தின் குணங்கள் :—

> நைப்பு
>
> கனம்
>
> குளிர்ச்சி
>
> அசையாமை
>
> வழுவழுப்பு
>
> பசையுள்ள தன்மை

இவை மூன்றும் தத்தம் குணங்களுக்கு விரோத மான குணங்களின் சேர்க்கையால் குறையும். அதேவித மான குணங்களின் சேர்க்கையால் கூடுதல் அடையும். கூடுதல் அடைவதில் இரண்டு வகை உண்டு:—

(1) அளவு அதிகரித்தாலும் தத்தம் ஸ்தானத்தை மீருமல் இருக்கும் அதிகரிப்புக்கு 'சயம்' அல்லது கூடுதல் என்று பெயர்

(2) தத்தம் ஸ்தானத்தை மீறும்படியான அதிகரிப்புக்கு 'ப்ரகோபம்' அல்லது கடுமையான அதிகரிப்பு என்று பெயர்.

அதிகரித்தவை மறுபடியும் சரியான நிலைமைக்கு வருவதற்கு 'சமனம்' அல்லது 'அடங்குதல்' என்று பெயர்.

பொதுவாக வாத, பித்த, கபங்கள் அடியிற்கண்ட காரணங்களால் கூடிக்குறையும் :—

1 குணங்களின் சம்பந்தம் :—

(*a*) வாதம்

(i) வாதத்தின் குணங்களாகிய 'வறட்சி' முதலியவை உஷ்ணத்தோடு சேர்ந்தால் வாதத்தின் 'சயம்' அல்லது கூடுதலை உண்டாக்கும்.

(ii) ப்ரகோபம் :— வாதத்தின் குணங்களாகிய வறட்சி முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் வாதத்தின் 'ப்ரகோபம்' என்னும் கடுமையான அதிகரிப்பை உண்டாகும்.

(iii) சமனம் :— வாதத்தின் குணங்களுக்கு விரோதமான கைப்பு, முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் வாதத்தை 'சமனம்' செய்யும்.

(*b*) பித்தம் :—

(i) சயம்:—பித்தத்தின் குணங்களாகிய கடுமை, வேகம், நெகிழ்ந்தோடுதல் முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் பித்தத்தின் 'சயம்' என்னும் கூடுதலை உண்டாக்கும்.

(ii) பிரகோபம் :— பித்தத்தின் குணங்களாகிய தீக்ஷ்ணம் முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் பித்தத்தின் 'ப்ரகோபம்' என்ற கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

(iii) சமனம் :— பித்தத்தின் குணங்களுக்கு விரோதமான மந்தம், மிருது, முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் பித்தத்தை சமனம் செய்யும்.

(c) கபம்:—

(i) சயம்:— கபத்தின் குணங்களான நைப்பு முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் கபத்தின் 'சயம்' என்னும் கூடுதலை உண்டாக்கும்.

(ii) ப்ரகோபம்:— கபத்தின் குணங்களான நைப்பு முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் கபத்தின் ப்ரகோபம் என்னும் கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

(iii) சமனம்:—கபத்தின் குணங்களுக்கு விரோதமான வறட்சி முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் கபத்தை சமனம் செய்யும்.

(2) கால பேதங்கள்:—

(a) வாதம்:—

நல்ல வெயிற்காலத்தில் வாதம் சேர ஆரம்பித்து, மழை காலத்தில் ப்ரகோபம் அடைந்து மழைக்குப் பின்னும் பனி காலத்துக்கு முன்னும் சமனம் அடையும்.

(b) பித்தம்:—

மழை காலத்தில் பித்தம் சேர ஆரம்பித்து, மழைக்குப்பின்னும், பனிக்கு முன்னும் ப்ரகோப மடைந்து, முன்பனிக் காலத்தில் சமன மடையும்.

(c) கபம்:—

பின் பனிக்காலத்தில் கபம் சேர ஆரம்பித்து, இளம் வெயிற் காலத்தில் ப்ரகோபம் அடைந்து கடுங் கோடையில் சமனம் அடையும்.

3. வயதுக்குத் தகுந்த மாறுதல்:—

குழந்தைப் பருவத்தில் கபம் மிகுதியாகவும், வாலிபப் பருவத்தில் பித்தம் மிகுதியாகவும், வயோதிகப் பருவத்தில் வாதம் மிகுதியாகவும் இருக்கும்.

4. தினசரி மாறுதல்கள்:—

அதிகாலையில் கபமும், வெயில் அதிகரிக்கும்போது பித்தமும், வெயில் தணியும்போது வாதமும் மிகுதியாக இருக்கும். அவ்விதமே இரவிலும் இருக்கும்.

5. ஆகாரபரிணமத்தைப் பொறுத்த மாறுதல்:—

சாப்பிட்டவுடன் கபமும், நன்றாக ஜீரணம் நடக்கும் போது பித்தமும், ஜீரணம் முடிந்தவுடன் வாதமும் அதிகமாக இருக்கும்.

6. சுவைகளினால் (ரஸங்களினால்) ஏற்படும் மாறுதல்.—

| | ப்ரகோபம் செய்வன | சமனம் செய்வன |
|---|---|---|
| (a) வாதம் | கார்ப்பு | இனிப்பு |
| | கைப்பு | புளிப்பு |
| | துவர்ப்பு | உப்பு |
| (b) பித்தம் | கார்ப்பு | இனிப்பு |
| | புளிப்பு | கைப்பு |
| | உப்பு | துவர்ப்பு |
| (c) கபம் | இனிப்பு | கார்ப்பு |
| | புளிப்பு | கைப்பு |
| | உப்பு | துவர்ப்பு |

## 7. வாத, பித்த, கபங்களின் நிலை நாடியில் பிரதிபலிப்பது எப்படி ?

வாத, பித்த, கபங்கள், தேகத்தில் பல இடங்களுக்கும் சென்று பல முக்கியமான வேலைகளைச் செய்கின்றன என்பது இதுவரையில் சொன்னதிலிருந்து வெளிப்படை. உடம்பில் பொருள்கள் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்குச் செல்வதற்கான கால்வாய்கள் 3 வகைப்படும். அவைகள், ஸிரைகள், ஸ்ரோதஸ்ஸுகள், தமனிகள் என்பனவாம். ஸிரைகள் இரத்தம் செல்லும் குழாய்கள். அவைகளை 'blood vessels' என்று மேல் நாட்டார் அழைப்பர். தமனிகள் நமது புலன்களின் உணர்ச்சியை மனதுக்கு இட்டுச் சென்று மனதின் உத்தரவுகளை புலன்களுக்குக் கொண்டு வருவதோடு உடம்பின் பல உறுப்புக்களையும் இயங்கச் செய்பவை. இவைகளுக்கு 'nerves' என்று ஆங்கிலத்தில் பெயரிட்டிருக்கிறார்கள். ஸ்ரோதஸ்ஸுகள் என்பவை இருபுறமும் திறந்த மார்க்கங்கள். இவைகளுக்கு 'ducts' என்று பெயர்.

ஸிரைகளில் 4 வகை நமது நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வகை ஸிரையிலும் இரத்தம், வாதம், பித்தம், கபம் இவை நான்கும் கலந்தே செல்லும். ஆனால் சில ஸிரைகளில் இரத்தம் அதிகமாகவும், சில ஸிரைகளில் பித்தம் அதிகமாகவும், சில ஸிரைகளில் கபம் அதிகமாகவும் இருக்கும். இவை நான்கும் சேர்ந்தே செல்லுமாகையால் இவைகளைப் பிரித்து அறிவது சிரமம்.

எனினும் ரத்தம் மிகுந்த ஸிரைகள் நல்ல சிவப்பாகவும், வாதம் மிகுந்த ஸிரைகள் அருண உதய சூரியன் வர்ண மாகவும் பித்தம் மிகுந்த ஸிரைகள் நீல நிறமாகவும், கபம் மிகுந்த ஸிரைகள் மஞ்சள் கலந்த வெண்மை நிறமாகவும் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தமனிகள் இரட்டைகளாகவே வேலை செய்கின்றன. சில தமனிகள் ஐம்புலன்களின் வேலை களுக்கு உபயோகப்படுகின்றன. சில மூச்சு விடுதல், பேசுதல் முதலிய காரியங்களைச் செய்விக்கின்றன, வேறு சில ஆகாரம் ஜீரணமானவுடன் அதன் ரஸத்தை எடுத்துச் செல்லும் குழாய்களின் வழியே அதைச் செலுத்துகின்றன. இன்னும் சில 4 வித ஸிரைகளிலும் உள்ள திரவத்தைச் செலுத்துகின்றன. இவைகளுள் ஸிரைகளின் வழியே வாத, பித்த, கப, ரத்தங்களைச் செலுத்தும் நாடிகளே நமக்கு உடம்பில் வாத, பித்த, கபங்களின் மிகுதி குறைகளைத் தெரிவிக்கும். நாடிகள் ஸிரைகளிலுள்ள திரவத்தை இயக்கும்போது வாத, பித்த, கபங்களின் மிகுதி, குறைவுக்குத் தகுந்தபடி பலமாகவும், பலமில்லாமலும் இயக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகையால் வாதஸிரை, பித்தஸிரை, கப ஸிரைகளில் உள்ள இயக்கங்களைக் கொண்டு வாத, பித்த, கபங்களின் நிலைமையை அறிவது எளிதாக இருக்கிறது. ஆகையால் வைத்தியர்கள் கையைப் பிடித்துப்பார்க்கும் போது ஸிரைகளில் ரத்தத்தோடு கலந்து செல்லும் வாத, பித்த, கபங்களின் ஸமம், மிகுதி, குறைவு முதலியவை

களை அந்த ஸிரைகளை இயக்கும் நாடிகளின் வேகத்தைக் கொண்டு அறிகிறார்கள்.

## நாடி நடை — பொதுவான விபரம்.

ஸிரைகளின் மூலம் இரத்தம் பல உறுப்புக்களுக்குச் செல்லும்போது அலையலையாகச் செல்லுகிறதென்பது யாவரும் கையில் நாடியைத் தொட்டுப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு தடவையும் இந்த அலை மூன்று எழுச்சியுள்ள ஓர் தொகுதியாகச் செல்லுகிறதென்பதே நமது நாட்டு வைத்ய நூல் ஆசிரியர்கள் வெகு காலத்திற்கு முன் கண்டுபிடித்த உண்மை. அந்த உண்மையை மேல் நாட்டு ஆராய்ச்சியாளரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று எழுச்சிகளும் அவற்றின் நடையும் முறையே வாத, பித்த, கபங்களின் சம்பந்தமுள்ளவை என்பதே நாடி சாஸ்திரத்தின் துணிபு.

இவ்விதம் நாடி பார்க்கும் இடங்களும், வாத, பித்த, கபங்களின் நடைகளும் நமது நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. நூல்களில் எவ்வளவு விவரித்தாலும் நாடியின் நடை அனுபவத்தினால் அல்லது அறியக்கூடியதில்லை. பலருடைய நாடியை ஆரோக்கிய நிலையிலும் வியாதி வந்திருக்கும் நிலைமையிலும் நாடியைப் பார்த்துப் பார்த்து அனுபவம் முற்றினாலொழிய வாத, பித்த, கபங்களின் மிகுதியும், குறைவும் வியாதிகளைக் கண்டறியும் மார்க்கமும் விளங்க மாட்டாது.

உதாரணமாக, ஆரோக்கியமாக இருக்கும் ஒருவருடைய கை நாடி நடை யாவரும் எளிதில் பார்த்தறியக் கூடியது. ஆனால் அதை வார்த்தைகளால் விவரிப்பது எப்படி ? மூன்று அலையெழுச்சிகள் நாடி பார்ப்பவருடைய கை விரல்களால் உணரப்படுவது தெளிவு. இந்த மூன்று அலையெழுச்சிகளில் முதலில் செல்வது வாதத்தின் நிலையை அறிவிப்பது, அதன் பின் தொடருபவை முறையே பித்த, கபம் இவற்றின் நிலையை அறிவிப்பது என்று நமது நூல்கள் கூறுகின்றன. ஆனால் ஆரோக்கியமான ஸ்திதியில் இந்த எழுச்சிகளின் வலிமையின் தாரதம்மியத்தைப் பற்றி நூல்களில் சொல்லியிருப்பதை அனுபவத்திற்குக் கொண்டு வருவது மிகவும் கடினமாக இருக்கிறது. நூல்களில் உள்ள விவரங்கள் பல இடங்களில் முரணாகவும் இருக்கிறது. முதலில் இந்த நூலையே எடுத்துக் கொள்வோம் இதில் சொல்லப்பட்டிருப்பது பின் வருமாறு:-

a. வாத நாடி — சர்ப்பத்தின் நடை
பித்த நாடி — தவளையின் நடை
கப நாடி — அன்னத்தின் நடை
பக்கம், சுலோகம் 51.

b. வாத நாடி — வக்கிரமாக — தவளை, அட்டை, ஆமை போலவும்
— ஸ்திரமாக — மான், மீன், அட்டை, மூஞ்சூறு போலவும்

பித்த நாடி — ஸ்திரமில்லாமல் காகம், கிளி, தவளை, போலவும்

— ஸ்திரமாக — புரு, அன்னம், ஊர்க்குருவி, குதிரை போலவும்

கப நாடி — ஸ்திரமில்லாமல் புரு, ஊர் குருவி, கோழி, குதிரை, போலவும்

— ஸ்திரமாக — எருமை, பெண் கிட்டு, யானை, போலவும் நடக்கும்.

இதில் வாதம், பித்தம், கபம் இவை ஒவ்வொன்றுக்கும் மூன்று வகை நடை கொடுக்கப்பட்டிருக்கிறது. இயற்கையான நடை ஒன்று, ஸ்திரமில்லாமல் இருக்கும்போது நடை ஒன்று, ஸ்திரமாக இருக்கும் போது நடை ஒன்று சொல்லப்பட்டிருக்கின்றன. இயற்கை, ஸ்திரமில்லாமை, ஸ்திரமான தன்மை இவை மூன்றும் என்ன என்பது தெளிவாக விளங்க வில்லை.

வாத, பித்த, கப நாடிகளின் நடையைப் பற்றிப் பெரும்பாலான நூல்களில் கூறப்பட்டிருக்கும் நடைகள் வாத பித்த கபங்கள் சமமாக உள்ள போது உள்ள நடைகளா அல்லது வாத, பித்த, கபங்கள் அதிகரிக்கும் போது உள்ள நடைகள் என்பது சந்தேகமாக இருக்கும்படி நூல்களில் வாக்கியங்கள் அமைந்திருக்கின்றன.

ஒரு நூலிலேயே இவ்வளவு முரண்பாடுகளும் சந்தேகங்களும் காணப்படுகின்றன. இன்னும் மற்ற நூல்களில் காணப்படும் விவரங்களையும் பார்ப்போம்:

I கணாத மகரிஷி எழுதிய நாடி விஜ்ஞானம் என்னும் நூலில் (சௌகாம்பா பதிப்பு-காசி)

1. ஆரோக்கியமுள்ளவர் கைநாடி :—

भूलताभुजगप्राया स्वच्छा स्वास्थ्यमयी शिरा ।
सुखितस्य स्थिरा ज्ञेया तथा बलवती मता ॥ १९ ॥

ஆரோக்கியமான ஒருவருடைய நாடி நடை மண்ணுண்ணிப் பாம்பின் கதியைப் போலவும், தெளிவாகவும், அழுத்தமாகவும், நிலையான நடையை உடையதாகவும் இருக்கும்.

2. ஆரோக்கியமுள்ள ஒருவருக்கு காலை மாலை நாடி :—

प्रातः स्निग्धमयी नाडी मध्याह्नेऽप्युष्णतान्विता ।
सायाह्ने धावमाना च चिराद्रोगविवर्जिता ॥ २० ॥

காலையில் நைப்புள்ளதாகவும் நடுப்பகலில் உஷ்ணமுள்ளதாகவும் மாலையில் பாய்ச்சல் வேகமுள்ளதாகவும் இருக்கும்.

3. வாத, பித்த, கப, நாடிகளின் நடை:—

वाताद्वक्रगता नाडी चपला पित्तवाहिनी ।
स्थिरा श्लेष्मवती ज्ञेया मिश्रिते मिश्रिता भवेत् ॥

நாடியானது வாதத்தால் வளைந்த நடையும், பித்தத்தினால் ஒரே இடத்தில் நிலையாக இல்லாத நடையும், கபத்தினால் ஒரே இடத்தில் நிலையாக உள்ள கதியும், தோஷங்களின் கலப்பினால் கலந்த நடையும் உள்ளதாக இருக்கும்.

सर्पजलौकादिगतिं वदन्ति विबुधाः प्रभञ्जने नाडीं ।
पित्तेन काकलावकभेकादिगतिं विदुः सुधियः ॥ २१ ॥

राजहंसमयूराणां पारावतकपोतयोः ।
कुक्कुटस्य गतिं धत्ते धमनी कफसंभृता ॥ २२ ॥

நாடியானது வாதத்தில் ஸர்ப்பம் அட்டை முதலியவற்றின் நடையையும், பித்தத்தினால் காகம், சிட்டு, தவளை முதலியவற்றின் நடையையும், கபத்தினால் உயர்ந்த ஜாதி அன்னம், மயில், புரு, மாடப்புரு, கோழி, முதலியவற்றின் நடையையும் உடையதாக அறிவாளிகள் கூறுகிறார்கள்.

II. ராவணனால் எழுதப்பட்ட 'நாடி விஜ்ஞானம்' (சௌகாம்பா பதிப்பு, காசி) என்னும் நூலில் :—

१. आदौ वातवहा नाडी मध्ये वहति पित्तला ।
अन्ते श्लेष्मविकारेण नाडिकेति त्रिधा मता ॥ ११ ॥

२. वातेऽधिके भवेन्नाडी प्रव्यक्ता तर्जनीतले ।
पित्ते व्यक्ताऽथ मध्यायां तृतीयांगुलिगा कफे ॥

३. तर्जनीमध्यमामध्ये वातपित्ताधिके स्फुटा ।
तर्जन्यनामिकामध्ये व्यक्ता वातकफे भवेत् ॥

४. मध्यमानामिकामध्ये स्फुटा पित्तकफे भवेत् ।
अंगुलित्रितयेऽपि स्यात् प्रव्यक्ता सन्निपाततः ॥ १४ ॥

५. वाते वक्रगतिर्नाडी चपला पित्तवाहिनी ।
स्थिरा श्लेष्मवती प्रोक्ता सर्वलिंगा च सर्वगा ॥ १५ ॥

६. श्लेष्मणा स्तिमिता स्तब्धा मिश्रा मिश्रैस्तु लक्षयेत् ।
वातोद्रेके गतिं कुर्यात् जलौकासर्पयोरिव ॥ १६ ॥

७. पित्तोद्रेके तु सा नाडी काकमण्डूकयोर्गतिम् ।
हंसस्येव कफोद्रेके गतिं पारावतस्य वा ॥ १७ ॥

८. नाडी धत्ते त्रिदोषे तु गतिं तित्तिरिलावयोः ।
कदाचिन्मन्दगा नाडी कदाचिद्वेगवाहिनी ॥ १८ ॥

९. दोषद्वयोद्भवे रोगे विज्ञेया सा भिषग्वरैः ॥ १९ ॥

இதன் பொருள் :—

1. முதலில் வாத நாடியும், மத்தியில் பித்த நாடியும், கடைசியில் கப நாடியும் பேசும்.

2. வாதம் மிகுந்திருந்தால் ஆள்காட்டி விரலிலும் பித்தம் மிகுந்திருந்தால் நடுவிரலிலும், கபம் மிகுந்திருந்தால் மூன்றாவது விரலிலும் நாடி நன்றாகப் பேசும்.

3. வாதமும், பித்தமும் மிகுதியானால் ஆள்காட்டிவிரலுக்கும் நடுவிரலுக்கும் மத்தியிலும், வாதமும் கபமும் மிகுதியானால் ஆள்காட்டி விரலுக்கும் மோதிர விரலுக்கும் இடையிலும், பித்தமும் கபமும் மிகுதியானால்

நடுவிரலுக்கும், மோதிர விரலுக்கும் நடுவிலும் நாடி நன்ருகப் பேசும்.

4. வாதத்தில் வளைந்த கதியோடும், பித்தத்தில் ஓரே இடத்தில் ஸ்திரமில்லாமலும், கபத்தில் ஓரே இடத்தில் ஸ்திரமாகவும் நாடி நடக்கும்.

5. மூன்றின் கலப்பும் இருந்தால் மூன்று வித நடையும் கலந்திருக்கும்.

6. வாதம் மிகுதியானல் அட்டை, சர்ப்பம் இவற்றின் கதியும், பித்தம் மிகுதியானல் காகம், தவளை இவற்றின் கதியும், கபம் மிகுதியானல் அன்னத்தின் கதியும் நாடியில் காணப்படும்.

7. வாதம், பித்தம், கபம் இவை மூன்றும் மிகுந்திருந்தால், தித்திரிப் பக்ஷி (சிச்சிலவு), சிட்டு இவற்றின் கதி காணப்படும். இவற்றின் கதியோடு ஒரு சமயம் மெதுவாகவும் ஒரு சமயம் வேகமாகவும் நாடி நடக்கும்.

8. இவ்விதமே இரண்டு தோஷ மிகுதியினல் ஏற்படும் நடையை யூகித்துக் கொள்ளவும்.

III. தமிழ் நூல்களில் நாடி நடையைப் பற்றிப் பேசாத வைத்திய நூல் இல்லை. ஆனல் அவைகளிலும் பல முரண்களும், சந்தேகங்களும் இருக்கின்றன. அவ்வித சந்தேகங்களுக்கிடையே நமக்குக் கிடைக்கும் தெளிவான சில பகுதிகளை மட்டும் இங்கு சொல்லுவோம்:—

## நாடி நடை

1. ஆகிய நாடி மூன்றும் படபடென்றோடிற்சன்னி
வாகினிலன்னங்கோழிமயிலென நடக்கும் வாதம்
ஏகிய வாமை யட்டையிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு போலவாஞ் சேத்துமந்தானே.

(அகத்தியர் இரத்தினச் சுருக்கம். 31).

2. மருவிடுநோயின் நாடி மதித்திடில் வலக்கைமாந்தர்க்
கரிவையர்க்கிடக்கை தன்னிலழுத்திய சுட்டிக்காட்டும்
விரலதில் வாதமாகும் மிகு நடுவிரலிற் பித்தந்
திருமணி விரலில் ஐயந்தானியல் பறிந்து பாரே.

(குணவாகடம் நோயின் சாரம் 5.)

3. வழங்கிய வாதம் மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தந் தன்னிலரைவாசி
அழுங்கிங்கபந்தா னடங்கியே காலோடில்
பிரங்கிய சீவர்க்குப் பிசகொன்றுமில்லையே.

(திருமூலர் நாடி 9)

4. பித்த மடங்கிற் பேசாதே போய்விடு
எத்திய ஐயம் எழும்பிடிற் கிட்டாதே
எத்திய வாதம் எழும்பில் மருந்துசெய்
எத்தியிம் மூன்றின் இயல்பை யறிந்திடே.

(திருமூலர் நாடி 36)

இதுவரையில் நாடி சாதாரணமாக நோயற்ற ஒரு வரது கையில் எப்படி ஓடுகிறது என்பதைப்பற்றி நமது நூல்களில் கூறப்பட்டிருக்கும் விதம் விவரிக்கப்பட்டது.

இவற்றை உதவிக்கு வைத்துக் கொண்டு நாம் நம்முடைய கை நாடியையும் இன்னும் அநேகருடைய நாடியையும் நோயற்ற ஸ்திதியிலும், நோயுற்ற போதும் பார்த்துப் பார்த்து அதன் நடையை அனுபவத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

ஆனால் நாடி நடையை கோழி, அன்னம், தவளை, பாம்பு முதலியவைகளின் நடைக்கு ஒப்பிட்டு விவரித்திருப்பது சாதாரணமாக நோயற்றவர் கையில் உள்ள நடையா அல்லது வாத, பித்த, கபங்களின் மிகுதியால் நோயுற்றவர்களின் கை நாடி நடையா என்பது தெளிவாக விளங்கவில்லை. பல நூல்களையும் சேர்த்துப் பார்க்கும் போது நாம் அடியில் கண்டபடி ஓர் முடிவுக்கு வரலாம் என்று தோன்றுகிறது :—

1. நோயற்ற ஸ்திதியில் வாத, பித்த, கபங்களைக் குறிக்கும் நாடி நடை முறையே ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல்களில் தோன்றும்.

2. வாத நாடியின் எழுச்சி ஒரு பங்கென்றால், பித்த நாடியின் எழுச்சி அரைப் பங்காகவும், கப நாடியின் எழுச்சி கால் பங்காகவும் நோயற்றவர் கையில் சாதாரணமாகக் காணப்படும்.

3. நோயற்றவர் கையில் வாத நாடி வளைவாகவும், பித்த நாடியின் கதி சலனமுடையதாகவும், கப நாடியின் கதி ஓரே இடத்தில் ஸ்திரமாகவும் பேசும்.

4. நோயுற்றவர் கையில் வாதம் மட்டில் மிகுந்தால் மற்ற நாடிகளின் கதிகள் தெளிவில்லாமலும், வாத நாடியின் கதி மிகவும் தெளிவாகவும் தெரியும். அதேவிதமாகப் பித்தத்தின் மிகுதியிலும், கபத்தின் மிகுதியிலும் அதற்குரிய நடை தெளிவாகக் காணப்படும்.

5. வாதம், பித்தம் இரண்டும் மிகுந்திடில் இரண்டுக்கும் இடையே எழுச்சி அதிகமாகத் தோன்றும். அதே விதமாக வாத கபம், பித்த கபம் இவைகள் மிகுந்திடில் இவைகளுக்கிடையேயுள்ள இடத்தில் எழுச்சி அதிகமாகத் தோன்றும்.

6. வாத, பித்த, கப நாடிகளின் நடைகளை பக்ஷிகள் பிராணிகளின் நடைகளுக்கு ஒப்பிட்டிருக்கும் பலவகை நூற்பகுதிகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ளவைகளாக இருப்பதால் அவைகளைக் கொண்டு ஒரு தெளிவான முடிவுக்கு வருவதற்கு ஆழ்ந்ததோர் ஆராய்ச்சி தேவை. இவ்வித ஆராய்ச்சிக்குத் தற்கால மேல் நாட்டு நுணுக்க உபகரணங்கள் பெரிதும் பயன்படும்.

## நோய்களில் நாடி நடை

'நாடீ சக்கிரம்' என்னும் இந்த நூலில் நாடிகளின் பொதுவான லக்ஷணங்களுக்குப் பிறகு வியாதிகளின் வகைகளைப் பற்றிய விரிவான குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. அதன் பிறகு அவ்வித வியாதிகளுள்ளவர்களின் நாடி நடையைப் பற்றிய பகுதி ஆரம்பிக்கப்படவேண்டும். ஆனால் அப்பகுதி இங்குள்ள சுவடியில் காணப்படவில்லை.

ஆகையால் இப்போது நமக்குக் கிடைக்கிற மற்ற நூல்களில் நோயுற்றவர்களின் நாடி நடையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் குறிப்புகளுள் முரண்பாடு இல்லாத பகுதிகள் இங்கு எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன.

1. ஜ்வரம்-முற்குறிகள் :—

अङ्गग्रहेण नाडीनां जायते मन्थरा गतिः ।
प्लवः प्रबलतां याति ज्वरदाहाभिभूतये ॥ ६० ॥

—कणादः ।

i. ஜ்வரத்தின் முற்குறியாவன :— *உடம்பின் பல பாகங்களில் பிடிப்பது போன்ற வலி உண்டாகும். நாடி மெதுவாகவே சென்றாலும் தத்திக் குதிப்பது போன்ற கதியுடன் கூடியிருக்கும். ஜ்வரமும் கொதிப்பும் அதிகரிக்க அதிகரிக்கத் தத்திக் குதிக்கும் நடை பலமடையும்.*

ii. சன்னிபாத ஜ்வரத்தின் (*மூன்று தோஷங்களும் மாறுபாடு அடைந்ததால் ஏற்பட்டது-சன்னி என வழங்கப்படுவது*) முற்குறி :—

सन्निपातकरूपेण भवन्ति सर्ववेदनाः ॥ ४१ ॥

*சந்நிபாத ஜ்வரத்தில் வாத பித்த கபங்களுக்குள்ள எல்லாவித நடைகளும் மாறி மாறி வருவதோடு பலவித வேதனைகளும் ஏற்படும்.*

2. ஜ்வரம் வந்த பிறகு உள்ள நாடி நடையும் மற்ற அடையாளங்களும் :—

ज्वरकोपे तु धमनी सोष्मा वेगवती भवेत् ॥ ४२ ॥

*ஜ்வரம் வந்த பிறகு நாடி உஷ்ணமாகவும் வேகமான நடையுடையதாகவும் இருக்கும்.*

3. வாத ஜ்வரம், பித்த ஜ்வரம், கப ஜ்வரம் இவைகளின் நாடி நடை :—

वक्रा च चपला शीतस्पर्शा वातज्वरे भवेत् ॥ ५२ ॥
द्रुता च सरला दीर्घा शीघ्रा पित्तज्वरे भवेत् ॥ ५३ ॥
मन्दा च सुस्थिरा शीता पिच्छिला श्लेष्मके भवेत् ॥

—रावणः ।

வாதஜ்வர நாடி வளைவாகவும், நாடியின் நடை ஸ்திரமாக நிலைத்து நிற்காமலும், குளிர்ந்தும் இருக்கும்.

பித்தஜ்வர நாடி துரிதமாகவும், தடையின்றிச்செல்லுவதாகவும், நீண்டதாகவும், வேகமுள்ளதாகவும் இருக்கும்.

கபஜ்வர நாடி மெதுவான நடையுள்ளதாகவும், ஒரே இடத்தில் நிலையாக நிற்பதாகவும், குளிர்ச்சியுள்ளதாகவும் வழுவழுப்புள்ளதாகவும் இருக்கும்.

4. வாத பித்த ஜ்வரம், வாத கப ஜ்வரம், பித்த கப ஜ்வரம் இவைகளின் நாடி நடை:—

चञ्चला तरला स्थूला कठिना वातपित्तजा ॥ ८५ ॥
ईषच्च दृश्यते तुष्णा मन्दा स्याच्छ्लेष्मवातजा ।
निरन्तरं खरं रूक्षं मन्दश्लेष्माऽतिवातला ॥ ८९ ॥
सूक्ष्मा शीता स्थिरा नाडी पित्तश्लेष्मसमुद्भवा ॥ ९१ ॥

வாத பித்த ஜ்வரத்தில் நாடி ஒரே இடத்தில் நிலையாக நிற்காமலும், அலை போன்ற நடையுள்ளதாகவும், பருமனுள்ளதாகவும் கெட்டியாகவும் இருக்கும்.

வாத கப ஜ்வரத்தில் நாடி சிறிதே உஷ்ணமாகவும், மெதுவாகவும் இருக்கும். கபம் குறைவாகவும், வாதம் அதிகமாகவும் இருந்தால் கைக்கு சுறசுறப்பாகவும், வறட்சியுள்ளதாகவும் இருக்கும்.

பித்த கப ஜ்வரத்தில் நாடி மெல்லியதாகவும், குளிர்ச்சியாகவும் ஒரே இடத்தில் நிலையுள்ளதாகவும் இருக்கும்.

5. பூதஜ்வரம் என்னும் சங்காதோஷஜ்வரத்தில் நாடி :—

भूतज्वरे सेक इवातिवेगा धावन्ति नाड्यो हि यथाब्धिगामाः ॥

பூத ஜ்வரத்தில் நாடி ஆற்று ஜலம் வேகமாக ஸமுத்திரத்திற்குச் செல்வதுபோல் வேகமாக இருக்கும்.

6. முறை ஜ்வரத்தில் நாடி :—

ऐकाहिकेन क्वचन प्रदूरे क्षणान्तगामा विषमज्वरेण ।
द्वितीयके वाऽथ तृतीयतुर्ये गच्छन्ति तप्ता भ्रमिवत् क्रमेण ॥

ஒவ்வொரு நாள் விட்டு வரும் முறை ஜ்வரத்தில் நாடியானது தன் இடத்தை விட்டுச்சிறிது தூரம் சென்று சிறிது நேரத்திற்குப் பிறகு தன் இடத்திற்குத் திரும்பி வரும். இரண்டு நாள், மூன்று நாள், நான்கு நாட்களுக்கு ஒரு முறையாக வரும் ஜ்வரத்தில் நாடி உஷ்ணத்தோடு தன் இடத்தை விட்டுச் சிறிது அகன்று சுழித்துக் கொண்டு பிறகு தன் இடத்துக்கு வரும்.

7. கோபம் அல்லது காமத்தினல் ஏற்பட்ட ஜ்வரத்தில் நாடி நடை :—

क्रोधजे सङ्कलग्नाङ्गा ससङ्गा कामजे ज्वरे ।
उष्णा वेगवरा नाडी ज्वरकोपे प्रजायते ॥ १६ ॥

இதில் நாடிகள் ஒன்ருேடொன்று பின்னிக்கொண் டும், உஷ்ணமாகவும் அதிக வேகமாகவும் இருக்கும்.

8. i. அஜீர்ணத்தில் நாடி:—

अजीर्णे तु भवेन्नाडी कठिना परितो जडा ।
प्रसन्ना तु द्रुता शुद्धा त्वरिता च प्रवर्तते ॥ १०२ ॥
पक्काऽजीर्णे पुष्टिहीना मन्दं मन्दं वहेच्छिरा ।
असृक्पूर्णा भवेत् कोष्णा गुर्वी सामा गरीयसी ॥ १०३ ॥

ஆமாசயம் என்னும் வயிற்றில் அஜீர்ணம் ஏற்பட்டி ருந்தால், நாடி கல்லுப் போலவும், மெதுவாக நகர்ந்து கொண்டும் இருக்கும்.

பக்வாசயத்தில் (குடலில்) அஜீர்ணம் இருந்தால் நாடி மெலிந்தும் மெதுவாக நகர்ந்தும் செல்லும்.

அஜீர்ணத்தோடு ரத்தப்ரகோபமும் இருந்தால் நாடி உஷ்ணமாகவும் கனமாகவும் இருக்கும். ஆமம் அல்லது சரியாகப் பக்குவமாகாத ரஸமும் (chyle) சேர்ந்திருந்தால் இன்னும் சற்று அதிகக்கனமாகவும் இருக்கும்.

ii. அக்னி பலம் அதிகமாக இருப்பவர்களின் நாடி நடை:—

लघ्वी भवति दीप्ताग्नेः तथा वेगवती स्मृता ॥ १०६ ॥

அக்னி பலம் நன்ருக அமைந்திருப்பவர் நாடி இலே சாகவும் வேகமுள்ளதாகவும் இருக்கும்.

9. க்ரஹணி (கிராணி என்னும் வயிற்றுப் போக்கு—அக்னி ஆசயமாகிய க்ரஹணி (duode-

num) யின் பலம் குறைவதால் ஏற்படுவது) யில் நாடி நடை.

**पादे च हंसगमना करे मण्डूकसंप्लुता ।**
**तस्याग्निर्मन्दता देहे त्वथवा ग्रहणीगदः ॥ १०७ ॥**

காலில் உள்ள நாடியில் அன்னத்தின் நடையும் கையிலுள்ள நாடியில் தவளை தத்திக் குதிப்பது போன்ற நடையும் இருந்தால் ஒன்று அக்கினி மந்தம் அல்லது க்ரஹணி என்று அறிந்து கொள்ளவும்.

10. [1]க்ரஹணி, அதிஸாரம் (வாத, பித்த, சிலேஷ்மங்கள் மலத்தை இளக்குவதனால் ஏற்

---

1 வயிற்றுப்போக்குள்ள வியாதிகளாவன:—

(1) க்ரஹணி (2) அதிஸாரம் (3) ப்ரவாஹிகா (4) விஷூசிகா.

இவற்றுள்,

(1) க்ரஹணி என்னும் கிராணி அக்னி பலக்குறைவாலும்,

(2) a. பித்த, கப அதிஸாரம் பித்த கபங்களால் மலம் இளகுவதாலும்,

b. வாத அதிஸாரமும், ஆம அதிஸாரமும் வாதத்தினால் த்ரவ மார்க்கங்கள் தடைபட்டு வயிற்றில் த்ரவங்கள் சேருவதினாலும்,

c. ஸந்நிபாத அதிஸாரம் அதிக அழற்சியோடும், ரத்தத்தோடும்,

(3) ப்ரவாஹிகா என்னும் வயிற்றுளைவு வாதம் குடலில் தங்குவதாலும,

(4) விஷூசிகா அல்லது வாந்திபேதியும் ஊசியால் குத்துவது போன்ற உணர்ச்சியும், சேர்ந்து ஏற்படும் விஷபேதி ஆம தோஷம் (பக்குவமாகாத ரஸத்தின் சேர்க்கை), அஜீர்ணம், வாத கபங்களின் ப்ரகோபங்கள் இவை சேர்ந்தும் உண்டாகும்,

படும் வயிற்றுப் போக்கு), விளம்பிகா (அஜீர்ண மும் தோஷங்களும் சேர்ந்து மல முதலியன கீழ் நோக்குவதையும், ஆகாரம் வாந்தியாவதையும் தடுத்து வயிற்றில் வேதனை செய்யும் வியாதி), ஆமாதி ஸாரம் (வயிற்றிலேயே அஜீர்ணம் ஏற் பட்டு வாதத்தினுல் த்ரவங்களின் மார்க்கங்கள் தடைபட்டு வயிற்றில் த்ரவங்கள் சேர்ந்து உண் டாகும் வயிற்றுப்போக்கு) இவைகளில் நாடி நடை :—

**भेदेन शान्ता ग्रहणीगदेन निर्वीर्यरूपा त्वतिसारभेदे ।**
**विलंबिकायां प्लवगा कदाचित् आमातिसारे पृथुला जडा च ॥**

*க்ரஹணியில் வயிற்றுப்போக்கு ஏற்பட்டபிறகு (ஏற் கெனவே குதிப்பது போன்று இருந்த நாடி) சாந்தத்தை அடையும். அதிஸாரப்போக்கு ஏற்பட்ட பிறகு நாடி பல மற்றுப் போகும். விளம்பிகாவில் சில சமயம் குதித்துச் செல்வது போன்ற நடை இருக்கும். ஆமாதிஸாரத்தில் நாடி பெருத்தும் மெதுவாகவும் நடக்கும்.*

11. ஆநாஹம் (பொருமல்) மூத்திரக்ருச்சிரம் இவற்றில் நாடிநடை :—

**आनाहे मूत्रकृच्छ्रे च भवेन्नाडीगरिष्ठता ।**

*பொருமலிலும், மூத்திர அடைப்பிலும் நாடி பருத்து நடக்கும்.*

12. சூலரோகத்தில் நாடி நடை.

**वातेन शूलेन मरुत्प्लवेन सदाऽतिवक्रा हि शिरा वहन्ति ।**
**ज्वालामयी पित्तविचेष्टितेन साध्मानशूलेन च पुष्टिरूपा ॥**

வாதசூலத்தில் அதிக வளைவுள்ளதாகவும், பித்த சூலத்தில் அதிக உஷ்ணமாகவும், பொருமலுடன் கூடிய சூலத்தில் நல்ல புஷ்டியுள்ளதாகவும் நாடி நடக்கும்.

13. பிரமேக (நீரிழிவு) ரோகத்தில் நாடி நடை.

प्रमेहे ग्रन्थिरूपा सा प्रतप्ता त्वामदूषणे ॥ ११२ ॥

நீரிழிவில் நாடி முடிச்சுள்ளதாகவும் ஆமதோஷம் (பக்குவமாகாத ரஸம்) சேர்ந்திருந்தால் அதிக உஷ்ணமாகவும் நாடி நடக்கும்.

14. விஷத்திலும், மலபந்தம், குல்மம், மித மிஞ்சிய வாதம் இவைகளிலும் நாடி.

उत्पित्सुरूपा विषविष्टिकाले विष्टंभगुल्मेन च वक्ररूपा ।
अत्यर्थवातेन अधःस्फुरन्ती उत्तानभेदिन्यसमाप्तिकाले ॥

விஷம் பரவும்போது நாடியானது மேலே கிளம்புவது போல நடக்கும். மலபந்தத்திலும், குல்மத்திலும் நாடி வளைந்து நடக்கும். வாதம் மிதமிஞ்சியிருக்கும் போது கீழே நோக்குவது போல் ஆரம்பித்துத்திடீரென்று மேலே கிளம்பும்.

15. ரக்த பித்தம் (ரத்தம் மேல் நோக்கியோ, கீழ்நோக்கியோ வெளிவருதல்), காசம் (இருமல்), சுவாஸம் (மூச்சுத் திணறல்) இவைகளில் நாடி நடை.

रक्तपित्ते वहेन्नाडी मन्दा च कठिना ऋजुः ।
श्लेष्मकासे स्थिरा मन्दा श्वासे तीव्रगतिर्भवेत् ॥ ५६ ॥

— रावणः ।

ரத்த பித்தத்தில் மெதுவாகவும், கெட்டியாகவும், நேராகவும் நாடி நடக்கும். கபத்தினுல் ஏற்படும் இருமலில் மெதுவாகவும், ஒரே நிலையான இடத்திலும் நாடி நடக்கும். சுவாஸ ரோகம் என்னும் மூச்சுத் திணறல் ரோகத்தில் நாடி கடுமையாக நடக்கும்.

16. யக்ஷ்மா என்னும் டி. பி.; மதாத்யயம் என்னும் மதுமயக்கம் இவைகளில் நாடி நடை.

नाडी नागगतिश्चैव रोगराजे प्रकीर्तिता ।
मदात्यये च सूक्ष्मा स्यात् कठिना परितो जडा ॥

நோய்களுக்கெல்லாம் அரசனுன யக்ஷ்மா என்னும் T. B யில் நாடியானது யானையைப் போல் அசைந்து நடக்கும். மதாத்யயம் என்னும் மதுமயக்கத்தில் மெல்லியதாகவும், கெட்டியாகவும், மிகவும் மெதுவாகவும் நடக்கும்.

17. மூலரோகம், அதிஸாரம் இவைகளில் நாடி நடை.

अर्शोरोगे स्थिरा मन्दा क्वचिद्वक्रा क्वचिदृजुः ।
अतिसारे तु मन्दा स्याद्धिमकाले जलौकवत् ॥ ६१ ॥

மூலரோகத்தில் நாடி ஒரே இடத்தில் நிலையாகவும், சில சமயம் வளைந்தும் சில சமயம் நேராகவும் செல்லும். அதிஸாரத்தில் மெதுவாகவும், குளிர் காலத்தில் அட்டையைப் போலும் நடக்கும்.

18. பாண்டு, குஷ்டம் இவைகளில் நாடி.

पाण्डुरोगे चला तीव्रा दृष्टादृष्टविहारिणी ।
कुष्ठे तु कठिना नाडी स्थिरा स्यादप्रवर्तिका ॥

பாண்டு ரோகத்தில் ஒரே இடத்தில் நிலையில்லாமலும், கடுமையாகவும், சில சமயம் மறைந்தும் சில சமயம் வெளிப்பட்டும் நடக்கும். குஷ்ட ரோகத்தில் நாடி கெட்டியாகவும், ஒரே இடத்தில் நிலையுள்ளதாகவும், முன்செல்லாதது போன்றும் நடக்கும்.

19. வாத ரோகங்களிலும் கப ரோகங்களிலும் நாடி நடை.

वातरोगे स्थिरा च स्यादावृते सर्वलक्षणा ।
बलासे स्फुरणोपेता सूक्ष्मा द्रुतगतिर्भवेत् ॥ ६५ ॥

வாத ரோகங்களில் நாடி ஒரே இடத்தில் நிலையாக இருக்கும். பித்த கபங்களும் சேர்ந்திருந்தால் அவைகளின் அறிகுறிகளும் நாடியில் காணப்படும். கப ரோகங்களில் துடிப்புடன் மெல்லியதாகவும், வேகமான நடையுடையதாகவும் காணப்படும்.

20. சிரோ ரோகங்களில் நாடி நடை.

ऊर्ध्वजत्रुविकारेषु यथा दोषबलेषु च ।
विज्ञाय लक्षणं तेषां भिषग्ब्रूयाद्धरागतिम् ॥ ६६ ॥

கழுத்துக்கு மேல் உள்ள ரோகங்களில் வாத பித்த கபங்களில் எதன் ப்ரகோபத்தினால் நோய் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவற்றின் லக்ஷணங்களைக் கொண்டு ஊகித்து, கைநாடியையும் பார்த்து நாடியின் நிதானத்தை கண்டு கொள்ள வேண்டும்.

21. ரத்த சம்பந்தமான வியாதிகளில் நாடி நடை.

अर्केन्दुकठिना सोष्णा सरोगा शोणिताश्रितः ॥ ६७ ॥

*வலது கையிலும் இடது கையிலும் நாடி கெட்டியாகவும் உஷ்ணமாகவும் இருக்குமானால் அது ரத்த சம்பந்தமான வியாதியைக் குறிக்கும்.*

22. உள் ஜ்வரத்தைக்காட்டும் நாடி

शरीरं शीतलं नाडी नूनं चोष्णतरा भवेत् ।
ज्वरमन्तर्गतं तस्य जानीयाद्भिषगुत्तमः ॥ ९८ ॥

*உடம்பு சீதமாயும், நாடி உஷ்ணமாகவும் இருந்தால் உள்ளே ஜ்வரம இருக்கிறதென்பதை அறிந்து கொள்ள வேண்டும்.*

23. நோயில்லாமல் வாத, பித்த, கபம் பிரகோபித்திருப்பது போன்ற நாடியுள்ள சந்தர்ப்பங்கள் (46,47)

रिरंसोरुज्झितरतेश्चलतोऽपि च वातवत् ।
रुद्धवेगस्य बालस्य शल्यविद्धस्य पित्तवत् ॥ ४६ ॥
निद्रालोर्मेदुरस्यापि कफवत्तृप्तदम्पयोः ॥ ४७ ॥

*ஸங்கத்தில் அதிக விருப்பம் இருக்கும் காலத்திலும் ஸங்கத்திற்குப்பிறகும், வழி நடந்த பிறகும், வாதம் பிரகோபமடைந்ததாகக் காட்டும்.*

*மலம், மூத்திரம் முதலியவைகளின் வேகத்தை அடக்கியவர்களுக்கும், குழந்தைக்கும், உடம்பில் முள் முதலிய சல்லியங்கள் ஏறியவர்களுக்கும் பித்தம் பிரகோபம் அடைந்ததாகக் காட்டும்.*

*தூக்க மயக்கமுள்ளவர்களுக்கும், உடம்பில் கொழுப்பு அதிகம் உள்ளவர்களுக்கும், திருப்தியாக சாப்பிட்டவர்*

களுக்கும், கர்வம் மிகுந்தவர்களுக்கும், கபம் பிரகோபம் அடைந்ததாகக் காட்டும்.

24. நாடி மிகத்தளர்ந்து அசைவற்றது போன்ற நிலையிலிருந்தாலும் மறுபடியும் நல்ல ஸ்திதிக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள்.

भारप्रहारमूर्च्छाभयशोकाग्निषूचिकानाडी ।
संमूर्च्छिताऽपि गाढं पुनरपि सा जीवितं भजते ॥ ५० ॥

பாரம் தூக்கினவர்கள், அடிவாங்கியவர்கள், மூர்ச்சை யடைந்தவர்கள், பயத்தாலோ துக்கத்தாலோ தாக்கப் பட்டவர்கள், பேதியானவர்கள், இவர்களுடைய நாடி மிகவும் தளர்ந்து அசைவற்றது போல் தோன்றினாலும் மறுபடியும் உயிர்ப்பித்து வலுவடையும்.

पतितः सन्धितो भेदी नष्टशुक्रश्च यो भवेत् ।
शाम्यते विस्मयस्तस्य न किञ्चिन्मृत्युकारणम् ॥

கீழே விழுந்தவன், எலும்பு முறிந்து ஒன்றின்மேல் ஒன்று ஏறியவன், பேதியானவன், அதிகமாக சுக்கிலம் நஷ்டமானவன் இவர்களுக்கு நாடி மிகத்தளர்ந்திருந் தாலும் பயப்படவேண்டியதில்லை. மறுபடியும் நாடி நல்ல ஸ்திதிக்கு வந்துவிடக்கூடும்.

तथाभूताभिषङ्गे च त्रिदोषवदुपस्थिता ।
यद्यकस्मात्तथा नाडी न तदा मृत्युकारणम् ॥

அப்படியே சங்காதோஷம் ஏற்பட்டிருந்தாலும் திரி தோஷங்களும் (வாத, பித்த சிலேஷ்மம் மூன்றும்) ப்ரகோபமடைந்ததுபோல் திடீரென்று காண்பிக்கும். அதைக்கண்டு பயப்பட வேண்டியதில்லை.

स्वस्थानहीने शोके च हिमाक्रान्ते च निर्गदाः ।
भवन्ति निश्चला नाड्यो न किञ्चित्तत्र दूषणम् ॥

ஸ்திரமாக இருந்த இடத்தை இழந்த போதும், துக்கம் அதிகரித்தபோதும், குளிர் மிகுதியினுலும், நோயில்லாமலே நாடி அசைவற்றுப்போகும். ஆனல் அதனல் கெடுதியொன்றும் ஏற்படாது.

25. அசாத்தியம் போல் தோன்றினுலும் பயமில்லை என்று சொல்லக்கூடிய நாடி நடை.

स्वस्थानच्यवनं यावत् धमन्या नोपजायते ।
तदा तच्चिह्नसत्त्वेऽपि नासाध्यत्वं इति स्थितिः ॥ ५६ ॥

வாத பித்த, கபங்களுக்குரிய நாடி அதனதன் இடத்தைவிட்டு விலகாமல் இருந்தால் அசாத்தியக்குறிகள் இருந்தாலும் அசாத்தியமில்லை.

न विमुञ्चति स्वस्थानं नाडी सूक्ष्मा विभाव्यते ।
तस्य मृत्युभयं नास्ति व्याधिरप्युपशाम्यति ॥ ५७ ॥

நாடி மிகவும் மெலிந்திருந்தாலும், இடத்தை விட்டு விலகாமல் இருந்தால் மரணபயமில்லை. வியாதியும் ஸ்வஸ்தமாகிவிடும்.

सुव्यक्तता निर्मलत्वं स्वस्थानस्थितिरेव च ।
अचाञ्चल्यममन्दत्वं सर्वासां शुभलक्षणम् ॥ ५८ ॥

தெளிவாகப் பிரிந்து பேசும் நடை, சுத்தமான போக்கு, தன் தன் இடத்தைவிட்டு விலகாமை, இங்குமங்கும் அலையாமலிருத்தல், அதிக மெதுத் தன்மையையடையாதிருத்தல் இவை நல்ல நாடியின் லக்ஷணம்.

26. நாடி நடை நிற்கும் சமயங்கள்

दोष्पीडावक्रतायां च प्रहारे त्रसनेन च ।
व्यायामेऽट्टाट्टहासे च नैति स्फुरणतां धरा ॥ ३५ ॥

புஜங்களுக்குக் கெடுதி ஏற்பட்ட போதும், புஜங்கள் வளைந்து விட்டபோதும், அடிபட்ட போதும், பய முறுத்தப்பட்ட போதும், தேகப் பயிற்சியின் போதும் அட்டகாசம் செய்து சிரிக்கும்போதும், நாடித் துடிப்பு பிரகாசத்தை அடையாது.

27. நாடி மென்மையடையும் சமயமும், பல மடையும் சமயமும்

शीतार्तस्यार्द्रगात्रस्य चिरात्सूक्ष्माऽथ मन्थरा ।
शयानस्य बलोपेता नाडी स्फुरणमश्नुति ॥

குளிரினால் வாதைப்படுவோனுக்கும், உடம்பு நனைந்த ஸ்திதியில் உள்ளவனுக்கும் நாடி மென்மையடையும். தூங்கின பிறகு நாடி பலமுள்ளதாக இருக்கும்.

28. ப்ராண பயமில்லையென்பதைக் காட்டும் நாடி நடை.

स्पन्दते चैकमानेन त्रिंशद्वारं यदा धरा ।
स्वस्थाऽपि तदा नूनं रोगी जीवति नान्यथा ॥ ९४ ॥

நாடி நடை அதனதன் ஸாதனத்தில் மாறாமல் ஒரே கால அளவுள்ளதாகக் குறைந்தது 30 தடவையாவது நடக்குமானால் ப்ராணபயமில்லை.

॥ श्रीः ॥

# ॥ नाडीचक्रम् ॥

श्रीगणेशाय नमः ॥

प्रणम्य शिरसा देवं शंकरं लोकशंकरम् ।
प्रवक्ष्यामि समासेन नाडीतन्त्रं परीक्ष्य च ॥ १ ॥

एकस्मिन् दिवसे रम्ये कैलासे रत्नमण्टपे ।
पार्वती शंकरं दृष्ट्वा पप्रच्छ भिषजां हितम् ॥ २ ॥

---

உ

ஸ்ரீ:

# நாடி சக்கிரம்.

(1) உலகிற்கு க்ஷேமத்தைச் செய்யும் ஸ்ரீ மஹா தேவனை நமஸ்கரித்து, நாடிகளைப் பற்றிய நூலை ஆராய்ச்சி செய்து சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

(2) மனோகரமான ஒருநாள் கயிலையங்கிரியில் மணி மண்டபத்தில் வீற்றிருக்கும் பரமனைப் பார்த்துப் பார்வதி

पार्वत्युवाच—

**नाडीशास्त्रं महागोप्यं देवानामपि दुर्लभम् ।
किं पुनर्मानुषाणां तु धमनीं वद मे प्रभो ॥ ३ ॥**

---

தேவியார் மருத்துவர்களுக்கு நன்மை பயக்கும் அடியிற் கண்ட விஷயத்தைப்பற்றி வினவினர்.

(3) "[1]நாடிகளைப் பற்றிய விஞ்ஞானம் தேவர்களும் அறியாத ரகசியமாயிற்றே. அதை மானிடர் அறிவதெப்படி? 'தமனி' என்னும் நாடியின் தன்மையை விளக்குவீர்களாக" என்றனர்.

---

1. 'நாளீ' என்ற சொல்லே 'நாடீ' என்றாயிற்று. 'நாளம் உடையது நாளீ'. 'ஓட்டையுள்ளது' என்று பொருள்படும். இதற்கு 'தமநீ' என்றும் பெயர் உண்டு. 'நரம்பு' என்பது இதன் தமிழ் மொழிபெயர்ப்பு. 'Nerves' என்பது ஆங்கிலப் பெயர். 'தமநீ' என்றால் 'ஊதுவதற்கேற்றது' என்று பொருள். 'தம்' = ஊதுதல் என்ற பகுதியிடமாகப் பிறந்த பெயர்ச்சொல். ஆகவே நாடிகளில் வாயு சஞ்சாரம் செய்கிறதென்பதே நமது மகரிஷிகளின் துணிபு.

நமது தேகத்திலுள்ள குழாய்களையும் கால்வாய்களையும் 'ஸிரை', 'தமநீ', 'ஸ்ரோதஸ்' என்று மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். இம்மூன்றும் செய்யும் வேலைகளும், தோற்றமும் வெவ்வேறு.

'ஸிரை' என்பது ரத்தம் செல்லும் குழாய். இக்குழாய்களின் வழியே ரத்தம், பித்தம், வாதம், கபம் என்ற நான்கும் செல்லுகின்றன. சிலவற்றில் ரத்தம் மிகுந்தும், சிலவற்றில் பித்தம் மிகுந்தும், சிலவற்றில் வாதம் மிகுந்தும், சிலவற்றில் கபம் மிகுந்தும் இருக்கும். ரத்தம் மிகுந்த 'ஸிரை' சிவப்பாக

श्रीशिव उवाच —

नाडीचक्रं महादेवि सूक्ष्मात्सूक्ष्मतरं शृणु ।
हिताहितपरिज्ञानं कटुतिक्तादिसेवनम् ॥ ४ ॥

---

(4-5) பரமன் அதற்குப் பதில் உரைத்தது வருமாறு :—

நாடிகளைப்பற்றிய நூல் நுட்பத்திலும் நுட்பமானது. அதையறிந்த விஞ்ஞான வல்லவர்கள்,

i. ஒருவனுக்கு நன்மை தீமைகளைச் செய்யும் ஆகாரம் முதலியவற்றையும்,

ii. ஒருவன் உடம்புக்குத் தக்கவாறு ஏற்றுக் கொள்ள வேண்டிய உப்பு, காரம், புளிப்பு, கைப்பு, துவர்ப்பு, இனிப்பு இவ்வாறு ரஸங்களின் அளவு, சேர்க்கை முதலியவற்றையும்,

---

வும், வாதம் மிகுந்தது காலை சூரியன் வர்ணமாகவும், கபம் மிகுந்தது மஞ்சள் கலந்த வெள்ளை நிறமாகவும், பித்தம் மிகுந்தது நீல நிறமாகவும் இருக்கும். இவை சேர்ந்தே செல்லும். இவற்றைத் தனியாகப் பிரித்தறிவது இலகுவல்ல.

'ஸ்ரோதஸ்' என்பது இருபக்கமும் திறந்திருக்கும் வாய்க்கால்கள். இவை 13 வகை. இவற்றின் வழியே 13 வகைப் பொருள்கள் செல்லுகின்றன. இவற்றுள் மூன்று பிராணவாயுவையும், நீரையும், அன்னத்தையும் எடுத்துச் செல்லுகின்றன. மற்ற ஆறு (4) ரஸத்தை ரத்தமாக மாறும் இடத்திற்கும், (5) ரத்தத்தை மாம்சமாக மாறும் இடத்திற்கும், (6)மாம்சத்தை மேதஸ்ஸாக(கொழுப்பாக)மாறும் இடத்திற்கும், (7) மேதஸ்ஸை எலும்பாக மாறும் இடத்திற்கும், (8) எலும்பை மஜ்ஜையாக மாறும் இடத்திற்கும், (9) மஜ்ஜையை சுக்கிலமாக மாறும் இடத்

**व्यायामं च व्यवायं च ह्युल्बणानुल्बणौ तथा ।**
**दोषधातुप्रकोपं च द्वन्द्वजातामयांस्तथा ॥ ५ ॥**

---

iii. ஒருவன் தேகாப்பியாசம், ஸ்திரீபோகம் இவற்றில் ஈடுபடவேண்டிய அளவையும்,

iv. நோய்கள் ஏற்பட்டால் அவற்றின் கடுமை, கடுமைக் குறைவையும்,

v. தோஷங்கள் என்று கூறப்படும் வாதம், பித்தம், கபம் இவைகள் இருக்கவேண்டிய அளவு மீறுவதையும்,

---

திற்கும் எடுத்துச் செல்லுகின்றன. பாக்கி உள்ள நான்கின் வழியே (10) சுக்கிலமும், (11) மூத்திரமும், (12) மலமும், (13) வியர்வையும் வெளிப்படுகின்றன.

'தமநீ' என்பது வாயு சஞ்சரிக்கும் குழாய்கள். இவை உடம்பில் பல பாகங்களுக்கும் பலவகை தாதுக்களையும், வாத பித்த கபங்களையும் அவைகளுக்கேற்பட்ட ஸிரை, ஸ்ரோதஸ் முதலிய மார்க்கங்களின் வழியே இழுத்துச் செல்லும் சக்தியுடையவை. புலன்களின் உணர்ச்சிகளை புத்திக்கு எடுத்துச் செல்லுவதும், உடம்பின் பல அங்கங்களை இயக்குவதும் இவைகளே. இவை இரட்டைகளாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில, ரத்த ஸிரையிலுள்ள ரத்தத்தையும், சில, வாத ஸிரையிலுள்ள வாதத்தையும், சில, பித்த ஸிரையிலுள்ள பித்தத்தையும், சில, கப ஸிரையிலுள்ள கபத்தையும், சில, ஸ்ரோதஸ்ஸுகளின் வழியே செல்லும் ரஸம் முதலிய தாதுக்களையும், சில, சப்தம், ஸ்பர்சம், ரூபம், உருசி, வாசனை இவற்றையும் இட்டுச் செல்கின்றன. 'ஸிரை' என்பதை blood vessel என்றும், தமநீ அல்லது நாடி என்பதை nerves என்றும், ஸ்ரோதஸ் என்பதை ducts என்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கலாம்.

विदन्ति तद्विदो धीराः नाडीशास्त्रविचक्षणाः ।

नाडीमाह —

द्विसप्ततिसहस्राणि नाड्यः प्रोक्ता महर्षिभिः ॥ ६ ॥

---

அதனால் நோய்கள் ஏற்படுவதையும்,

vi. உடம்புக்கு ஆதாரமான [2]தாதுக்களாகிய ரஸம் (ஆகாரத்தின் ஸாரமான பகுதி), ரத்தம், மாம்ஸம், மேதஸ் (கொழுப்பு) அஸ்தி (எலும்பு) மஜ்ஜை (எலும்பிற்குள் உள்ள பசை) சுக்கிலம் முதலியவை அளவு கூடிக் குறைந்திருப்பதையும்,

vii. வாதம், பித்தம், கபம் இவை தனித்தனியே கூடிக் குறைவதனால் ஏற்படும் நோய்களன்றி இவைகளில் இரண்டின் அளவு மாறுபட்டாலும், மூன்றும் அளவு மாறுபடுவதினாலும் ஏற்படும் நோய்களின் நிலைமைகளையும் அறிவார்கள்.

---

2. நாம் உண்ணும் உணவு ஜீரணமாகும்போது அதிலிருந்து முதலில் கபமும், பிறகு பித்தமும், பிறகு வாதமும் உண்டாகிப் பிரிக்கப்படுகிறது. உணவின் சாரமான அம்சம் ரஸதாதுவாகப் பிரிகிறது. உபயோகமற்ற பகுதி மல மூத்திரங்களாக வெளிப்படுகிறது. ரஸம் ரத்தமாகவும், ரத்தம் மாம்ஸமாகவும், மாம்ஸம் மேதஸ்ஸாகவும், மேதஸ் எலும்பாகவும், எலும்பிலிருந்து மஜ்ஜையும், மஜ்ஜையிலிருந்து சுக்கிலமும் உண்டாகின்றன. இதன் விவரத்தை 'சரபேந்திரர் வைத்திய

भेळे चरकशास्त्रे च सुश्रुते तन्त्रविस्तरे ।
कर्णिकोक्ते याज्ञवल्क्ये योगताराचळीयके ॥ ७ ॥

उक्तिप्रत्युक्तयस्सर्वाः निरीक्ष्याभिहिता मया ।
ग्रन्थविस्तरभीत्यात्र प्रकृते नैव विस्तृतम् ॥ ८ ॥

हिताय वैद्यपुत्राणां नाडीचक्रं नृणां हितम् ।
शुभाशुभपरिज्ञानं येन स्याद्धरणीतले ॥ ९ ॥

---

## நாடிகளின் விவரம்.

(6–9) பேளஸம்ஹிதை, சரகஸம்ஹிதை, ஸுச்ருதஸம்ஹிதை, கர்ணிகஸம்ஹிதை, யோகயாக்ஞவல்கிய உபநிஷத், யோகதாராவளி முதலிய க்ரந்தங்களில் நாடிகளின் எண்ணிக்கையை நன்ருக ஆராய்ந்து 72000 நாடிகள் நமது உடம்பில் உள்ளன என்று தெளிவாகக் கூறியிருக்கிருர்கள். அந்நூல்களில் கூறப்பட்டிருக்கும் ஆக்ஷேபணை சமாதானங்கள் நூலின் விரிவஞ்சி இங்கு கூறப்படவில்லை. நாடி சக்கிரம் என்ற இச்சிறு நூல் பரம்பரையாக வைத்தியம் கற்கும் மாணவர்களுக்காகவென்றே சொல்லப்படுகிறது. இந்நூலைக் கொண்டு இவ்வுலகில் ஒருவனுக்கேற்படும் நன்மை தீமைகளைச் செவ்வனே அறிந்துகொள்ளலாம்.

---

முறை, குன்ம ரோக சிகித்ஸை' முகவுரையில் 37, 38, 39 பக்கங்களில் விரிவாகக் காண்க.

नाडीज्ञानं विना वैद्यो भवेद्धास्यस्य भाजनम् ।
यथा ब्रह्मपरिज्ञानं नृणां भवति दुर्लभम् ॥ १० ॥

तथा नाडीपरिज्ञानमतिदुर्लभमीरितम् ।
स्वयं स्वस्थतरो भूत्वा परस्य परिशोधयेत् ॥ ११ ॥

अन्यथा ह्यगदंकारो हास्यहेतुर्न संशयः ।
तस्मान्नाडीपरिज्ञानं दुर्लभं च जगुर्बुधाः ॥ १२ ॥

उपायैश्च विजानीयाद्विना नाड्याथ केवलम् ।
उपायानपि वक्ष्यामि स्पर्शनप्रश्नदर्शनैः ॥ १३ ॥

---

### நாடி அறிவின் அவசியம்.

(10-12) *நாடி தெரியாத வைத்தியனை யாவரும் பரிகசிப்பார்கள். ஆனால் நாடியை ஒருவன் அறிவதென்பது ப்ரம்மத்தை அறிவதுபோல அவ்வளவு துர்லபமானது. ஒருவன் பிறருடைய நாடியைப் பார்க்குமுன் தன்னுடைய மனதையும் உடம்பையும் ஸ்வஸ்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் நாடி அவனுக்குச் சரியாக விளங்காது. பரிகாசத்திற்கு இலக்காவான்.*

### சரீர ஸ்திதியை அறியும் உபாயங்கள்.

(13-25) *ஒருவனுடைய சரீர ஸ்திதியை மூன்றுவித உபாயங்களால் அறியலாம். (1) ஸ்பர்சனம்*

स्पर्शनं दुर्लभं मन्ये सुगमावितरावुभौ ।
स्पर्शनावगतान्सर्वान्रोगान् प्रथमतः शृणु ॥ १४ ॥

अथ स्पर्शरोगाः —

ज्वरप्रकोपं मान्द्यं च दोषराहित्यमुल्बणम् ।
अग्निमान्द्यं तथा साम्यं उपवासं च जागरम् ॥ १५ ॥

अत्यग्निं हीनवीर्यत्वं भयशोकभ्रमानपि ।
कटुतिक्तोष्णलवणमधुराम्लादिभोजनम् ॥ १६ ॥

---

அல்லது நாடி பார்த்தல். (2) கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்வது. (3) பார்த்துத்தெரிந்துகொள்வது. இம் மூன்று முறைகளில் நாடியைக் கொண்டு தெரிந்துகொள் வது மிகவும் சிரமமானது. மற்ற இரண்டு உபாயங்க ளாலும் அறிந்துகொள்வது சுலபம்.

தொட்டுப்பார்ப்பது அல்லது நாடிபார்ப்பதினல்
அறியப்படும் நோய்கள் வருமாறு:—

1. ஜ்வரத்தின் ஆரம்பம், தோஷங்கள் சமனம் அடைந்து ஜ்வரம் விட்டிருப்பது, கடுமையான ஜ்வரம்.

2. அக்கினி மந்தம், அக்கினி சமமாயிருத்தல்.

3. ஆகாரக் குறைவு அல்லது ஆகாரமின்மை.

4. கண் விழித்திருத்தல்.

व्यायाममैथुनरतीरजीर्णकृतवेदनाम् ।
वदन्ति तज्ज्ञाः संस्पृश्य धमनीं हस्तमूलगाम् ॥ १७ ॥

पादमूलस्थया वान्ये जानन्ति विबुधाः क्वचित् ।
अतिप्रशस्तमुभयं हस्तपादसमाश्रितम् ॥ १८ ॥

---

5. கடுமையான அக்னி.

6. பலக் குறைவு.

7. பயம்.

8. துக்கம்.

9. மனத்தடுமாற்றம்.

10. கார்ப்பு, கைப்பு, உஷ்ணம், உப்பு, இனிப்பு, புளிப்பு முதலிய ஆகார வகைகளை உட்கொண்டிருத்தல்.

11. தேகப் பயிற்சி, ஸ்திரீ சங்கம்.

12. அஜீரணத்தினால் ஏற்படும் வேதனை.

ஆகிய இவைகளையும் இவைகளைப்போன்ற ஏனைய நிலைமைகளையும் கையின் அடிப்பக்கத்திலுள்ள நாடியைத் தொட்டுப் பார்த்து அனுபவ அறிவுள்ளவர்கள் சொல்லி விடுவார்கள். இன்னும் சிலர் காலின் அடிப்பக்கத்தி லுள்ள நாடியைக்கொண்டு சொல்லுவார்கள். கை, கால் இந்த இரண்டு நாடிகளையும் பார்த்துச் சொல்லுவது மிகவும் நல்லது.

एते चान्ये च बहवः स्पर्शनैकविनिश्चयाः ।

अथ प्रश्नरोगाः ॥

कुक्षिशूलो गु(ह्य)दावर्तः पार्श्वशूलो भगंदरः ॥ १९ ॥

संधिवातस्तथार्शांसि मूत्ररोगाश्च विंशतिः ।

स्खलद्वीर्यं शिरोरोगो विषसेवान्त्रनिःसृतिः ॥ २० ॥

---

கேள்விகேட்டுக் கண்டறியும் நோய்கள்:—

1. வயிற்றில் சூலம் அல்லது குத்துவதுபோன்ற வலி.
2. தொப்புளுக்குக் கீழே சஞ்சரிக்கும் வாயு கீழ் நோக்கி யிருக்கவேண்டியது மேல் நோக்குதல்.
3. பக்கசூலை.
4. பௌத்திரம் என்று அழைக்கப்படும் பகந்திரம்.
5. மூட்டுக்களில் வாதம் அல்லது கீல்வாயு.
6. மூலம்.
7. இருபது வகை மூத்திர ரோகங்கள்.
8. வீரியம் நழுவுதல்.
9. தலைவலி முதலிய தலை ரோகங்கள்.
10. விஷம் அருந்தியதால் உண்டாகும் விளைவுகள்.
11. குடல் வெளிவருதல்.

हस्तपादादिदाहश्च वस्तिमेढ्रगुदामयाः ।
प्रदराण्यप्रकाशानि रक्तस्रावं भगोत्थितम् ॥ २१ ॥
एते चान्ये च बहवः प्रश्नरोगाः प्रकीर्तिताः ।

अथ दर्शनरोगाः ॥

कासश्वासौ नेत्ररोगाः पिटका व्रणसंचयाः ॥ २२ ॥
अण्डवातश्च शोफश्च पाण्डुकामिलपीनसाः ।
अस्थिभंगोरुभंगाद्या नाडीभेदो गळग्रहः ॥ २३ ॥

---

12. *கைகால் எரிச்சல்.*

13. *மூத்திராசயம், மர்மஸ்தானம், ஆஸனம் இவற்றில் உண்டாகும் ரோகங்கள்.*

14. *வெளியில் நன்ருகத் தெரியாத பெரும்பாடு.*

15. *மர்மத்திலிருந்து ரத்தக்கசிவு.*
*முதலிய அநேக நோய்கள் கேள்விகேட்டு அறிய வேண்டியவை.*

பார்த்து அறியவேண்டிய நோய்கள்:—

1. *காசம் என்னும் இருமல்*
2. *ச்வாஸம் என்னும் மூச்சுத்திணறல்*
3. *கண்ணைப்பற்றிய நோய்கள்*
4. *பிளவைகள்*

कर्णार्बुदं च मूर्च्छार्शःप्लीहानाहोदराणि च ।
सक्थिशोफो गळग्रंथिरुपजिह्वा मसूरिका ॥ २४ ॥

---

5. பல வ்ரணங்களின் சேர்க்கை
6. அண்டவாதம்
7. வீக்கம்
8. பாண்டுரோகம்
9. காமாலை
10. பீனஸம் என்னும் மூக்கிலிருந்து நீர் அல்லது ரத்தம் விழுதல்.
11. எலும்பு முறிவு.
12. தொடை எலும்பு முறிவு.
13. நரம்பு பிசகுதல்.
14. கழுத்துப் பிடிப்பு.
15. காதில் எழுச்சி.
16. மூர்ச்சை.
17. மூலம்
18. பீலிகை என்று வழங்கும் மண்ணீரல் ரோகம் (ப்ளீஹ உதரம்)
19. வயிற்றுப் பொருமல்.
20. மகோதரம், ஜலோதரம் முதலிய உதாரோகங்கள்.

कुष्ठान्यष्टादश तथा डमरुर्गण्डमालिका ।
एते चान्ये स्मृता रोगा दर्शनैकविनिश्चयाः ॥ २५ ॥

वीणासाम्यम् ॥

शिरा शरीरवीणायां तन्त्रीवत्समधिष्ठिता ।
यथा वीणागता तन्त्री सर्वान् रागान्प्रभाषते ॥ २६ ॥
तथा हस्तगता नाडी सर्वान् रोगान्प्रकाशयेत् ।

---

21. தொடையிடுக்கில் வீக்கம்.
22. கழுத்தில் கிரந்திக் கட்டி.
23. நாக்கின் அடிப்புறத்தில் வீக்கம்.
24. வைசூரி.
25. பதினெட்டு வகை குஷ்டங்கள்.
26. தமர் வாயு.
27. கண்டமாலை.

இவைகளும், இவைபோன்ற மற்ற ரோகங்களும் பார்ப்பதைக்கொண்டே நிச்சயிக்கக்கூடியவை.

### வீணையின் உதாஹரணம்.

(26-28) உடம்பென்னும் வீணையில் ஸிரை தமநீ[1] முதலியவைகள் வீணைத் தந்திகளைப்போல் அமைக்கப்

---

1. நாடிபார்க்கும்போது ஒன்றன்பின் ஒன்றாக மூன்று எழுச்சிகள் (presoure) மூன்று விரல்களிலும் அறியப்படும். அந்த எழுச்சிகள் சுத்தரத்தம் ஓடுகிற 'arteries' என்று வழங்கப்

एवं बहुविधैर्ज्ञेयं रोगज्ञानैकसाधनम् ॥ २७ ॥

नाडीशास्त्रं स्वतन्त्रं स्याद्भिषजां प्राणजीवनम् ।

इति नाडीविज्ञानीये प्रथमपटलः ॥

---

பட்டிருக்கின்றன. வீணைத் தந்திகளில் பலவித ராகங்கள் எவ்வாறு பேசுகின்றனவோ, அதைப்போலவே கையி லுள்ள நாடியும் எல்லா நோய்களையும் தெரிவிக்கும். இவ் விதமாக நோய்களைக் கண்டறிவதற்கு முக்கிய சாதனமாகிய

---

பட்ட குழாய்களின் வழியே செல்லும் ரத்தத்தின் வேகமே என்றும் இருதயத்திலிருந்து ரத்தமானது அமுக்கப்பட்டுப் பல பாகங்களுக்குச் செல்லுகையில் அதன் வேகமே இவ்வெழுச்சி களுக்குக்காரணம் என்பதும் மேல்நாட்டு விஞ்ஞானத்தின் துணிபு. முன் அடிக்குறிப்பில் சொல்லியபடி "ரத்தத்தோடு வாத பித்தகபங்களும் சேர்ந்து 'ஸிரைகள்' நான்கு நான்காகச் செல்லு கின்றன என்றும், ஒவ்வொரு குழாயிலும் செல்லும் ரத்தம் முத லியவைகளை நடத்திச்செல்லுவதற்கு சக்திவாய்ந்த 'தமநி' என் னும் நாம்பு கூடவே செல்லுகிறதென்றும், தமனிகளின் சக்தியே பித்தஸிரை, வாதஸிரை, கபஸிரைகளில்பிரதிபலிக்கிறதென்றும், ஆரோக்கியமான உடம்பில் வாதஸிரையில் அதிகமான சக்தியும் பித்தஸிரையில் அதற்குக்குறைந்த சக்தியும், கபஸிரையில் இன்னும் குறைந்த சக்தியும் ப்ரயோகிக்கப்படுகின்றன என்றும் அதனாலேயே மூன்றுவித எழுச்சிகள் ஏற்படுகின்றன என்றும், வாதம், பித்தம், கபம் இவைகளில் ஏதாவது அதிகப்படுமாயின் அவற்றைச் செலுத்துவதற்கு தமனிகளின் சக்தி அதிகமாகப் பிரயோகிக்கப்படுகின்றன என்றும் ஆகையால் இவ்வெழுச்சி களின் பலத்தைக்கொண்டு வாத பித்த கபங்களின் அளவுகளைக் கண்டறியக்கூடும்" என்றும் நமது நூல்களின் முடிவாகத்தெரி கிறது.

# द्वितीयः पटलः ॥

अथ नाड्युत्पत्तिमाह —

**पंचभूतात्मको देहः षण्णवत्यङ्गुलात्मकः ॥ २८ ॥**

**आधारस्सर्वनाडीनां हंसवत्समधिष्ठितः ।**

**चतुरंगुलमायामं द्व्यंगुलोत्सेधसंयुतम् ॥ २९ ॥**

**नाभेरधस्ताद्यत्कन्दं प्रवाळाङ्कुरसन्निभम् ।**

**द्विसप्ततिसहस्राणि नाड्यस्तत्र विनिर्गताः ॥ ३० ॥**

---

நாடியைப் பற்றிய பல விஷயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். நாடியின் அறிவானது வைத்தியக் கலைக்கு உயிரைப்போன்று தனிப்பெருமை வாய்ந்தது.

முதல் படலம் முற்றிற்று.

---

## இரண்டாவது படலம்

### நாடியின் உற்பத்தி

(28-32) ஆகாசம், வாயு, தேஜஸ் அப்பு, ப்ருதிவி என்ற ஐந்து ஆதார பூதங்களால் ஆகிய இவ்வுடம்பு அவரவருடைய கட்டைவிரல் ரேகையளவாகிய அங்குல ப்ரமாணத்தினால் 96 அங்குலம் அளவுள்ளது. எல்லா நாடிகளுக்கும் ஜீவாத்மா ஆதாரமாக இருப்பதுபோல் இந்த சரீரமும் ஆதாரமாக அமைந்துள்ளது.

पत्ररेखानिभा भिन्नास्सूक्ष्मा वपुरुपाश्रिताः ।
वर्णैश्च विविधैर्दिग्धाः सप्तधातुषु संस्थिताः ।
दोषास्पदक्रियाधाराश्चलाश्रयलता इव ॥ ३१ ॥

स्थूला वृत्ता ग्रन्थिलाः स्थूलमूलाः
संकीर्णाश्चाकीर्णवक्त्रास्सरंध्राः ।
सूक्ष्माग्राधस्तिर्यगूर्ध्वं प्रपाताः
सर्वाङ्गे तास्सर्वसंध्युद्गताश्च ॥ ३२ ॥

---

தொப்புளுக்குக் கீழே 4 அங்குல விஸ்தாரமும் 2 அங்குல உயரமும் பவழத்தாலாகிய முளைபோன்ற தோற்றமும் உடைய ஓர் இடமே நாடிகளுக்கு மூல ஸ்தானம். அதிலிருந்தே 72000 நாடிகளும் வெளிக் கிளம்பி இலையின் நரம்புகள்போல் பல கிளைகளாகப் பிரிந்து மிகவும் ஸூக்ஷ்மமாகி தேகத்தின் எல்லாப் பாகங் களிலும் செல்லுகின்றன. இந்த நாடிகள் ஏழுவகை தாதுக்களிலும் ஊடே செல்லுகின்றன. அப்போது அவைகளின் வர்ணங்களையும் அடைகின்றன. வாத பித்த கபங்களின் காரணங்களால் ஏற்படும் சகல வேலை களுக்கும் இவைகளே ஆதாரமாகி எப்போதும் அசை வோடுகூடிய கொடிகள்போல் அமைந்திருப்பவை. இவற் றுள் சில பருமனாகவும், சில திரண்ட வடிவம் உள்ளவை களாகவும், சில முடிச்சுள்ளவைகளாகவும், சிலவற்றிற்கு அடிப்பக்கம் பருத்தும் வரவர மெல்லியதாயும், பல நாடிகள் ஒன்றுசேர்ந்தும் பல திசைகளில் தனித்தனி

अथ स्त्रीपुन्नपुंसकभेदाः ॥

त्रिंशत्सहस्रं स्त्रीनाड्यः पुंनाड्योऽपि तथैव च ।
सहस्रं द्वाद्वश सिराः क्लीबाः स्युस्त्रिविधा मताः ॥ ३३ ॥

वामभागे स्त्रियः प्रोक्ताः पुंनाड्यो दक्षिणे तथा ।
मध्ये क्लीबसिरा ह्येताः द्विसप्ततिसहस्रकम् ॥ ३४ ॥

तासामेकोत्तरशतं वरं तासां त्रयोदश ।

---

யாகப் பிரிந்த நுனிகளை உடையவைகளாகவும், எல்லாம் ஓட்டை உள்ளவைகளாகவும், மிகவும் ஸூக்ஷ்மமான நுனிகளை உடையனவாகவும், மேலும் கீழும் குறுக்காகவும் உடம்பு முழுவதும் எல்லா கணுக்களிலும் செல்லுகின்றன.

## ஸ்த்ரீபுருஷ நபும்ஸக நாடிகள்.

(33-35) மேலே சொல்லப்பட்ட 72000 நாடிகளுக்குள் 30000 நாடிகள் ஸ்த்ரீ நாடிகள் என்றும், 30000 நாடிகள் புருஷ நாடிகள் என்றும் 12000 நாடிகள் நபும்ஸக நாடிகள் (அலி நாடிகள்) என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்த்ரீநாடிகள் இடதுபக்கத்திலும், புருஷ நாடிகள் வலதுபக்கத்திலும், இவ்விரண்டுக்கும் மத்தியில் நபும்ஸக நாடிகளும் அமைந்திருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை 101. அவைகளில் மிகவும் முக்கியமானவை 13.

अथ प्राणवायुक्रमः ॥

नाडीरन्ध्रेषु सर्वेषु संचरन्प्राणमारुतः ॥ ३५ ॥
दोषैरयुक्तस्सुखकृद्दोषयुक्तो गदावहः ।

सूत्रपञ्चकम् ॥

तत्र प्रधाननाड्यस्तु पंचैतास्संस्थितास्तनौ ॥ ३६ ॥
मुख्यास्त्रयस्त्रिदोषोत्थदोषज्ञानप्रबोधकाः ।
एताश्चोर्ध्वमुखाः सूत्रपंचकं मणिबन्धयुक् ॥ ३७ ॥

---

### பிராணவாயு செல்லும் மார்க்கம்.

(35-36) நாடியின் துவாரங்களின் வழியாகப் பிராணவாயு சஞ்சரிக்கிறது. தோஷங்கள்[1] சேரா திருக்கும்போது உடம்பிற்குச் சுகத்தையும், தோஷங் களோடு சேர்ந்திருக்கும் காலத்தில் வியாதியையும் உண்டு பண்ணக்கூடியது.

### ஸூத்ர பஞ்சகம்

(36-37) நாடிகளில் முக்கியமானவை ஐந்து. இந்த ஐந்து முக்கிய நாடிகளுக்கும் 'ஸூத்ரபஞ்சகம்' (ஐந்து

---

1 'தோஷம்' என்பது சரீரத்தின் தாதுக்கள் முதலிய பகுதிகளைத் தூஷிப்பித்து (கெடுத்து) வியாதியை உண்டு பண்ணக்கூடிய வாத பித்த கபங்களின் அளவு மீறுதலைக் குறிக்கும். அளவு மீறி வியாதியை உண்டுபண்ணும் சக்தி வாய்ந்தவைகளாதலால் பொதுவாகவே வாத பித்த கபங்க ளுக்கு 'தோஷங்கள்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

நூல்களின் தொகுதி) என்று பெயர்[2]. இவைகளுள் முக்கியமான மூன்று நாடிகள் மேல்நோக்கிச் செல்லுகின்றன. இவைகளே வாத பித்த கபங்களின் நிலைமைகளை உணர்த்தும் இயல்புடையவை[3].

---

2. மூல சுலோகத்தில் இவை ஐந்தும் மணிக்கட்டில் சேர்ந்திருப்பதாகக் கண்டிருக்கிறது. இது சர்ச்சைக்குரியது.

3. நாடிபார்க்கையில் தமனிகளின் வழியே வரும் 'இயக்கும் சக்தி' ஸிரைகளிலுள்ள வாத பித்த கபங்களோடு சேர்ந்த ரத்தத்தில் பிரதிபலிப்பதால் ஸிரைகள் (ரத்தக்குழாய்கள்), தமனிகள் இவற்றின் உற்பத்தி அமைப்பு இவற்றைத் தெளிவாக அறிய வேண்டியது அவசியம். அக்காரணம்பற்றி சஸ்திர சிகித்ஸைக்காக ஏற்பட்ட 'ஸுச்ருதஸம்ஹிதை'யில் 'ஸிரை' 'தமனி' களைப் பற்றிய குறிப்புகள் இங்கு எடுத்து எழுதப்படுகின்றன.

ஸிரைகள்:— நமது உடம்பில் ஸிரைகள் அல்லது ரத்தம் ஓடும் குழாய்கள் 700. இவை நாபி(தொப்புள்)யிலிருந்து முதலில் 40 பெரிய ஸிரைகளாகப் பிரிந்து கிளம்புகின்றன. அவை ஒவ்வொன்றிலும் ரத்தம், வாதம், பித்தம், கபம் இந்த நான்கும் சேர்ந்தே செல்லுகின்றன. ஆனால் இவைகளுள் பத்தில் வாதம் அதிகமாகவும், பத்தில் பித்தம் அதிகமாகவும், பத்தில் கபம் அதிகமாகவும், பத்தில் ரத்தம் அதிகமாகவும் செல்லுகின்றன. இந்நான்குவகை ஸிரைகளும் அநேகமாக ஒன்றுசேர்ந்தே செல்லுவதால் இவைகளைப்பிரித்து அறிவது சிரமமாக இருந்தபோதிலும் இவைகள் நான்கும் நான்குவித வர்ணங்களுடன் அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வாதஸிரைகள் அருண வர்ணமாகவும், அதாவது அருணோதயகால சூரியன் வர்ணமாகவும் வாயு நிறைந்தும் இருக்கும். பித்தஸிரைகள் உஷ்ணமாகவும், நீல நிறமாகவும் இருக்கும். கபஸிரைகள் சீதமாகவும், மஞ்சள் கலந்த வெண்மை நிறமாகவும் இருக்கும். ரத்தஸிரைகள் நல்ல சிவப்பாக இருக்கும்.

பித்தஸிரைகளை மேல் நாட்டார் (Veins) அசுத்த ரத்தக் குழாய்கள் என்றும், ரத்த ஸிரைகளை (arteries) சுத்த ரத்தக் குழாய்கள் என்றும் பெயரிட்டிருப்பதாகத் தெரிகிறது. (வாத ஸிரைகள், கபஸிரைகள் இவ்விரண்டும் தனியாகப் பிரிக்கப் பட்டுப் பெயரிடப்படவில்லை என்றும் தெரிகிறது.) நாபியி லிருந்து கிளம்பிய பிறகு ஒவ்வொரு 10 ஸிரைகளும் 175 ஸிரை களாகப்பிரிந்து சரீரம் முழுவதும் வியாபிக்கின்றன. இந்த 175ல் கால் கைகளில் 100ம், உடம்பில் 34ம், கழுத்துக்குமேல் 41மாகப் பாவி நிற்கின்றன. ஆகையால் ஒவ்வொரு அங்கத்திலும் நான்கு வித ஸிரைகளும் சமமான எண்ணிக்கையுள்ளவைகளாகவே செல் லுகின்றன. இதில் பித்தஸிரையின் கிளைகளில் ஒரு விசேஷம் உண்டு. கழுத்துக்குமேல் செல்லுகிற பித்த ஸிரைகளில் கண் களில் பத்தும், காதுகளில் இரண்டும், செல்லுகின்றன. மற்ற வகை ஸிரைகள் கண்களில் எட்டும், காதுகளில் நான்கும் செல் லுகின்றன. இதற்குக் காரணம் கண்களின் ப்ரகாசம் பித்தத் தின் சக்தியால் ஏற்படுகிறது என்பதேயாகும்.

தமநிகள்:— நமது உடம்பில் தமநிகள் அல்லது வாயுவி னால் நிரப்பப்படக்கூடியவை 200. இவைகளும் நாபியிலிருந்து 24 மூல தமநிகளாகக் கிளம்பி 10 மேல்நோக்கியும், 10 கீழ் நோக்கியும், 4 குறுக்காகவும் செல்லுகின்றன. மேலேசெல்லும் 10 தமநிகளும் இருதய ஸ்தானத்திற்குச் சென்றதும் ஒவ்வொன் றும் மூன்றாகப் பிரிந்து 30 ஆகின்றன. இந்த 30 கிளைகளுள் 8 கிளைகள் சத்தம், ரூபம், ரஸம் கந்தம் இவைகளை எடுத்துச் சென்று அவைகளை அறியும் சக்தியினிடம் உதவுகின்றன. 12 கிளைகள் மூச்சு விடுதல், மூச்சை உள்ளிழுத்தல், பேசுதல், கத்து தல், தூக்கம், விழித்தல், கொட்டாவி விடுதல், தும்மல், சிரித் தல், கண்ணீர் விடுதல், ஸ்திரீகளுக்குப் பால் சுரத்தல், புருஷர் களுக்குச் சுக்கிரம் சுரத்தல் முதலிய வேலைகளைச் செய்விக்கின் றன. பாககிப் பத்து கிளைகள் தொப்புளுக்கு மேலே உள்ள இடங்களில் வாதம், பித்தம், கபம், ரத்தம், ரஸம் இவைகளை அவைகளின் மார்க்கங்களில் செல்லும்படிச் செய்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

## इडा च पिङ्गला चैव सुषुम्ना सुबला बला ।

### இடை, பிங்கலை, ஸுஷும்னை

*(38-43)* மேலே சொன்ன 5 நாடிகளின் பெயர்கள்

கீழே செல்லும் 10 தமனிகளும் வயிற்றுக்கும் குடலுக்கும் இடையே ஒவ்வொன்றும் மூன்ருகப் பிரிந்து 30 ஆகின்றன. இவை பித்தாசயத்தை அடையும்போது அங்குள்ள அன்ன பான ரஸத்தை நன்ருகப் பக்குவம் செய்வித்து ரஸத்தை அதன் ஸ்தானத்துக்கு அனுப்புகின்றன. மேலே சொல்லப்பட்ட 30 பிரிவுகளில் 2 பிரிவுகள் குடலில் அன்னபாஞதிகளை நகரும்படிச் செய்கின்றன. 2 பிரிவுகள் அங்கிருந்து திரவமான கழிவுப் பொருளை மூத்திராசயத்துக்குச் செலுத்துகின்றன. சுக்கி ரத்தை 2 பிரிவுகள் சேர்க்கின்றன. 2 பிரிவுகள் சுக்கிரத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த 4 பிரிவுகளே ஸ்திரீகள் சரீரத் தில் ருதுவை உண்டாக்கி வெளிப்படுத்துகின்றன. 2 பிரிவுகள் மலத்தை வெளிப்படுத்துகின்றன. 2 பிரிவுகள் மூத்திரத்தை வெளிப்படுத்துகின்றன. இப்படி வேலைசெய்யும் 12 பிரிவுகள் போக பாக்கி 18 பிரிவுகளில் 8 பிரிவுகள் குறுக்கே செல்லும் 4 மூலதமனிகளிடத்தில் வியர்வையைச் சேர்ப்பிக்கின்றன. பாக்கி 10 பிரிவுகளும் தொப்புளுக்குக் கீழே உள்ள பாகங்களில் வாதம், பித்தம், கபம், ரத்தம், ரஸம் இவைகளை அவைகளின் மார்க்கங் களில் செலுத்துகின்றன.

குறுக்காகச் செல்லும் 4 மூலதமனிகள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பிரிந்து சரீரத்தில் வியாபிக்கின்றன. அவற்றின் நுனிகள் மயிர்க்காம்புகளோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சரீரத்தின் உள்ளும் புறமும் ரஸம் பரவுவதற்கு உதவுகின்றன. முக்கியமாக சரீரத் திலிருந்து வியர்வையை வெளிப்படுத்துகின்றன. இவைகளின் உதவியிஞலேயே உடம்பின்மேலே தேய்க்கப்படும் எண்ணை முதலிய பசையுள்ள பொருள்கள் உடம்பிற்குள் செல்லுகின் றன, ஸ்பர்ச உணர்ச்சியை எடுத்துச் செல்வனவும் இவைகளே.

एतत्पंचकसंयुक्तं सूत्रं रज्ज्वात्मकं महत् ॥ ३८ ॥

अधोभागे द्विस्त्रिरूर्ध्वं सर्वस्थानेषु तिष्ठति ।
इडादित्रयमूर्ध्वस्थं द्वयमन्यदधोगतम् ॥ ३९ ॥

इडा च वामभागस्था पिंगळा दक्षिणे मता ।
सुषुम्ना मध्यगा प्रोक्ता नाड्यस्तिस्रो मुनीश्वरैः ॥

स्त्रीणामिडागतिर्नाडी दोषत्रयविशेषतः ।
पुरुषाणां विशेषेण संचरेत्पिङ्गळागतिः ॥ ४१ ॥

सुषुम्ना ब्रह्मणः स्थानं तत्स्थानं मारुतस्य च ।

---

இடை, பிங்களை, ஸுஷும்னை, பலை, ஸுபலை என்பன. இவை ஐந்தும் சேர்ந்து ஓர் கயிறுபோல் அமைந்திருக்கின்றன. இவ்வைந்து நாடிகளும் கீழே இரண்டும் மேலே மூன்றுமாகச் சரீரம் முழுமையும் பரவியிருக்கின்றன. இடை, பிங்களை, ஸுஷும்னை, என்ற மூன்று நாடிகளும் மேல் நோக்கியிருக்கின்றன. ஸுபலை, பலை என்ற இரு நாடிகளும் கீழ் நோக்கிச் செல்லுகின்றன. 'இடை' இடதுபுறத்திலும், 'பிங்களை' வலதுபுறத்திலும், 'ஸுஷும்னை' மத்தியிலும் செல்லுகின்றன. ஸ்த்ரீகளுக்கு 'இடை' என்ற இடதுபுறத்துநாடி வாத, பித்த, கபங்களின் நிலைமையைச் செவ்வனே உணர்த்தும். ஆண்பாலர்களுக்கு வலதுபக்கத்தில் சஞ்சரிக்கும் 'பிங்களை நாடி' தோஷங்களின் நிலைமைகளைத் தெளிவாகத் தெரிவிக்கும். 'ஸுஷும்னை' என்னும் நாடியே ஆத்மா

वायोस्सकाशादुद्भूतः श्वासस्सर्वशरीरगः ॥ ४२ ॥
चेतनाचेतनज्ञानं ज्ञातव्यं तेन धीमता ।

अथ श्वासप्रकारः ॥

षट्शताभ्यधिका एव ह्येकविंशत्सहस्रकम् ॥ ४३ ॥
अहोरात्रं नृणां श्वासाश्चन्द्रमण्डलरेचनात् ।
चन्द्रगत्या चिरायुष्यं भानुगत्या च मध्यमम् ॥ ४४ ॥
वह्निगत्या गतायुष्यं मण्डलाद्गतिरीरिता ।

---

வின் இருப்பிடம். அதுவே வாயுவுக்கும் நிலையான ஸ்தானம். அந்த வாயுவிலிருந்து உண்டாகும் ச்வாஸம் சரீரம் முழுவதும் செல்லுகின்றது. அந்த ச்வாஸத்தைக் கொண்டே ஒருவன் உயிருடன் இருப்பதையும், இறந்ததையும் அறியவேண்டும்.

### மூச்சின் முறை.

(43-46) இராப்பகல் கொண்ட ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் விடும் மூச்சு 21600. ச்வாசம் மூன்று வித மார்க்கங்களில் செல்லக்கூடும். அவைகளுக்கு சந்திர கதி, சூரிய கதி, அக்கினி கதி என்று பெயர். இவைகளுக்கு முறையே சந்திர மண்டலம், சூரியமண்டலம், அக்கினிமண்டலம் என்றும் பெயர். சந்திர கதியினால் ஒருவன் ஆயுள் வளருகிறது. சூரிய கதியினால் அதிகமாக வளராமலும், குறையாமலும் மத்யம நிலை உண்டா

तन्मण्डले ब्रह्मनाड्यां धन्वन्तरिकराच्च्युतम् ॥ ४५ ॥
अमृतं प्राणिनां देहे ह्यायुस्तेजो बलं वहेत् ।
तद्भानुवह्निसंसृष्टं हन्याद्वीर्यं बलाधिकम् ॥
तस्मादबाधितं नित्यं मण्डलं तु विचारयेत् ॥ ४६ ॥

इति नाडीविज्ञानीये द्वितीयः पटलः ॥

---

கிறது. அக்கினி கதியினுல் ஆயுள் அழிந்துவிடுகிறது. இம்மண்டலத்தில் ப்ரம்ம நாடியில் தன்வந்திரி பகவானுடைய கையிலுள்ள அமிர்த கலசத்திலிருந்து விழும் அமிர்தம் ஆயுளேயும், காந்தியையும் விருத்தி செய்கிறது.[1] சூரிய மண்டல அக்கினி மண்டலங்களின் சம்பந்தத்திஞல் உடம்பின் பல சக்திகளும் பலமும் குறைகிறது. ஆகையால் யோகிகளேக் கொண்டு இம்மூன்று மண்டலங்

---

1. நமது உடம்பில் பலவித சக்திகளேத் தந்து உதவும் பல தேவர்கள் எப்பொழுதும் வசித்துவருகிருர்கள். உதாரணமாகக் கண்ணுக்கு ஒளியைக் கொடுப்பவர் சூரிய பகவான். ஸ்பர்ச உணர்ச்சியைக் கொடுப்பவர் வாயு பகவான். வாக்கின் சக்தியைக் கொடுப்பவர் அக்கினி. இவ்விதமாகவே ஒருவீரது உடம்பை சதா எரித்துக்கொண்டிருக்கும் சூரிய மண்டல அக்னி மண்டல ச்வாஸங்களிஞல் ஏற்படும் ஆயுள், பலம் இவற்றின் குறைவை தன்வந்திரி பகவான் அமிர்த ப்ரவாகத்திஞல் விருத்தி செய்வித்துவருகிருர். உள்நாக்கின் அடிப்பாகத்திலிருந்து உச்சி வரையில் செல்லும் 'ப்ரும்ம ரந்த்ரம்' என்ற த்வாரத்தின் வழியே அமிர்தம் பெருகுகிறது என்பது யோக நூல்களில் கண்ட உண்மை.

## ॥ तृतीयः पटलः ॥

अथातस्सर्वनाडीनां स्थितिक्रममनाकुलम् ।
वक्ष्येऽहं वैद्यलाभाय शास्त्रोक्तं चायुरादिकम् ॥ ४७ ॥

अथायुःक्रमः ॥

दिग्भानुनाडी दिनमेव सम्यक्
त्रिंशत्सहस्रं ऋतुपूर्वकं स्यात् ।
स्वरेण सद्रूपशिरादिकानां
द्वैगुण्यतः स्यात् पुरुषः शतायुः ॥ ४८ ॥

---

களையும் தனித்தனியே விசாரித்து அறியவேண்டும்.[1]

இரண்டாம் படலம் முற்றிற்று.

### மூன்றும் படலம்.

(47) நாடிகளின் நிலைமைகளையும் அவைகளுக்கும் ஆயுள் முதலியவைகளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் வைத்தியர்கள் அறியும்படிச் சொல்லுகிறேன் .

---

1. இடை நாடி வழியே சஞ்சாரமே சந்திர மண்டலம். பிங்களை நாடி சஞ்சாரமே சூரியமண்டலம். ஸுஷும்ன நாடி சஞ்சாரமே அக்கினி மண்டலம். வலது பக்கத்திலுள்ள பிங்களை நாடி வழியாக ச்வாசத்தை உள்ளே இழுத்து, இடது பக்கத்திலுள்ள 'இடை' நாடி வழியாக வெளியே விடவேண்டும். இதனால் ஆயுள், பலம் இவை விருத்தியாகும்.

अथ वर्षनियमाः ॥

श्लेष्मणोऽब्दास्त्रयस्त्रिंशच्चतुरुत्तरमासयुक् ।
तथैव पित्तवाय्वोस्तु स्फूर्तिस्समलयक्रमात् ॥ ४९ ॥
सर्वेषामेव जन्तूनां लोके श्रेष्ठाश्च मानुषाः ।

अथ प्राणिगतनाडीभेदः ॥

सर्वजन्तुगता नाडी पृथगेव हि तिष्ठति ॥ ५० ॥

---

ஆயுள்

(48) இதன் பொருள் விளங்கவில்லை.

ஆயுட்காலத்தில் கப, பித்த, வாதங்கள் மிகுந்திருக்கும் வருஷங்கள்.

(49) உலகில் எல்லா ஜந்துக்களுக்கும் மேலான மனிதனுடைய ஆயுட்காலமாகிய 100 வருஷங்களுக்குள் முதல் 33 வருஷம் 4 மாதம் கபம் மிகுந்திருக்கும். அடுத்த 33 வருஷம் 4 மாதம் பித்தம் மிகுந்திருக்கும். அடுத்த 33 வருஷம் 4 மாதம் வாதம் மிகுந்திருக்கும்[2].

மனிதன், பசு, குதிரை, யானை இவைகளுக்கு நாடி பார்க்கும் விதம்.

(50-53½) நாடிபார்க்கும் இடங்கள் எல்லா ஜந்துக்

---

2. பொதுவாகத் தற்காலம் ஆயுளின் அளவு குறைந்திருப்பதால் இம்மூன்று பகுதிகளையும் தற்காலத்தில் குறைத்துக் கொள்ளவேண்டும்.

तत्परीक्षाविधिं वक्ष्ये नृगवाश्वगजादिषु ।
नराणां दक्षिणे भागे नारीणां वामभागतः ॥ ५१ ॥

गवां नासापुटयुगे वाजिनां श्रवणे गजे ।
मुखनासाग्रनेत्रेषु युक्ता पुच्छकपोलयोः ॥ ५२ ॥

इतरेषां तु या नाडी तां वेत्ति च महेश्वरः ।
तत्तद्देहानुसारेण स्थाने स्थाने वसन्ति याः ॥ ५३ ॥

ताश्च सर्वशरीरेषु दोषभेदैः प्रकोपिताः ।

अथ दोषभेदानाह —

वातपित्तश्लेष्मभेदान्नाड्याश्च चलनं त्रिधा ॥ ५४ ॥

---

களுக்கும் ஒரே மாதிரியாக அமைக்கப்படவில்லை. மனிதர்களில் ஆண்களுக்கு வலதுபுறத்திலும், ஸ்திரீகளுக்கு இடதுபுறத்திலும், பசுக்களுக்கு மூக்கு ஓட்டைகள் இரண்டும் சேருமிடத்திலும், குதிரைகளுக்குக் காதிலும், யானைக்கு வாய், துதிக்கை நுனி, கண்கள், வால், கன்னங்கள் இந்த இடங்களிலும் நாடி பார்க்க வேண்டும். ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொரு இடத்தில் பித்த வாத கபங்களினால் நாடியின் மாறுதல் தெளிவாகத் தெரியும். இவையெல்லாவற்றையும் பரமனே அறிவர்.

### நாடிகளைக்கொண்டு தோஷங்களையும் வியாதிகளையும் அறிதல்

(54-55) மனிதனுக்கு ஆயுள்காலம் முழுவதும்

सा च नाडी मनुष्याणां यावत्प्राणावधि स्थिरा ।
तस्याः प्रकोपाज्जायन्ते नानारोगाः पृथग्विधाः ॥ ५५ ॥

इति नाडीविज्ञानीये तृतीयः पटलः ॥

---

## ॥ चतुर्थः पटलः ॥

अथ दोषशोधनमाह —

यथाक्रमं चक्रगतिं वातपित्तकफात्मिकाम् ।
अंगुळीत्रितयेनैव परकायविहारिणीम् ॥ ५६ ॥

---

நாடியானது வாத, பித்த, சிலேஷ்மங்களைச் சேர்ந்த மூன்றுவகை நடையுடன் கூடியதாகவே இருக்கும். அவைகளின் வேகம் மாறுபாடடையும் விதத்தைக் கொண்டு வியாதிகளின் வகையை அறிந்துகொள்ளலாம்.

மூன்றும் படலம் முற்றிற்று.

---

### நான்காம் படலம்

### நாடி பார்க்கும் விதம்

(56-57½) வாழைப்பூ அல்லது தாமரை மொட்டுப் போல் அமைந்திருக்கும் ரோகியின் முன்னங்கையை

अंगुष्ठमूले संपीड्य पाणिभ्यां च भिषग्वरः ।
कदलीमुकुलाकारमथवा पङ्कजोपमम् ॥ ५७ ॥

पाणिमालंब्य चार्तस्य नाडीं सम्यग्विलोकयेत् ।

॥ नाडीस्थानानि ॥

नाड्योऽष्टौ पाणिपात्कण्ठनासोपान्तसमाश्रिताः ॥५८॥
पादयोर्नाडिकास्थानं हस्तयोश्चाङ्गुलित्रयम् ।

---

*வைத்தியன் தன் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு கட்டைவிரலின் அடிப்பாகத்தில் தனது மூன்றுவிரல்களை வைத்து அழுத்தி வாதம், பித்தம், கபம் என்ற வரிசையில் சக்கரம் சுழலுவதுபோல் நடந்துகொண்டிருக்கும் நாடிகளின் நடையைக் கவனிக்கவேண்டும்.*

## நாடியின் ஸ்தானங்கள் அல்லது நாடியின் நடை தெளிவாய்த் தெரியும் இடங்கள்.

*(58-59) அடியிற்கண்ட எட்டு இடங்களில் மனிதனுடைய நாடியைப் பார்த்து உடம்பின் நிலையைக் கண்டு கொள்ளலாம் :—*

1. *இரண்டு கைகள்*
2. *இரண்டு கால்கள்*
3. *கழுத்தின் முன்பக்கத்தில் இருபுறங்கள்*
4. *மூக்கின் அடியில் இருபுறங்கள்*

कण्ठमूलेऽङ्गुलिद्वन्द्वं नासामूलेऽङ्गुलार्धकम् ।
स्थानान्येतानि नाडीनां तेषु प्राणा व्यवस्थिताः ॥ ५९ ॥

॥ हस्तनाडी ॥

अजीर्णमामदोषं च ज्वरस्यागमनं क्षुधम् ।
वातपित्तकफोद्रेकं हस्तनाड्या विदर्शयेत् ॥ ६० ॥

---

இவைகளுள் கைகளிலும், கால்களிலும் நாடியின் ஸ்தானம் மூன்று விரல்களால் அறியத்தக்க அளவுள்ளது. கழுத்தில் இரண்டு விரல் அளவுள்ளது. மூக்கின் அடியில் அரைவிரல் அளவுள்ளது. இந்த எட்டு ஸ்தானங்களும் பிராண சக்தி நன்றாக நிலைத்திருக்கும் இடங்கள்.

கை நாடியைக்கொண்டு அறியப்படும் வியாதிகள்.

(60) 1. அஜீர்ணம்

2. ஆமதோஷம் (அதாவது நன்றாகப் பக்குவமடையாத அன்னரஸம் அதற்கேற்பட்ட சரியான மாறுதலை யடைந்து சரீரத்தில் சேராமல் தங்கி நின்று அதனால் ஓர்வகை விஷம் ஏற்பட்டுக் கீல்வாயு (Rheumatism) முதலிய வியாதிகளை உண்டாக்கும் தோஷம்)

3. ஜ்வரம் வந்திருப்பது

4. பசி

5. வாதம், பித்தம், கபம் இவைகளில் எது அதிகப்பட்டிருக்கிறது என்பது.

॥ पादनाडी ॥

जीवितं लाघवं स्वास्थ्यं ज्वरस्य च विमोचनम् ।
स्वस्थानमविमुञ्चन्त्या पादनाड्या विदर्शयेत् ॥ ६१ ॥

॥ कण्ठनाडी ॥

आगन्तुकज्वरं तृष्णामायासं मैथुनं भ्रमम् ।
भयं शोकं च कोपं च कण्ठनाड्या विदर्शयेत् ॥ ६२ ॥

---

தன் ஸ்தானத்தை விடாதிருக்கும் கால் நாடியைக் கொண்டு அறியப்படும் நிலைமைகள்.

(61) 1. *உயிருடன் இருப்பது*

2. *உடம்பு இலேசாக இருப்பது*

3. *யாதொரு வியாதியுமின்றி ஆரோக்யமாய் இருத்தல்.*

4. *ஜ்வரம் விட்டிருக்கிறதா என்பது*

கழுத்து நாடியைக்கொண்டு அறியப்படுவன.

(62) 1. *திடீரென்று ஏற்படும் ஜ்வரம்*

2. *நீர் வேட்கை*

3. *களைப்பு*

4. *ஸ்த்ரீ சங்கம்*

5. *மயக்கம்*

6. *பயம்*

॥ नासानाडी ॥

मरणं जीवितं कामं नेत्ररोगं शिरोव्यथाम् ।
कर्णाननगतान् रोगान्नासानाड्या विदर्शयेत् ॥ ६३ ॥

॥ वयोभेदनाडी ॥

मूर्ध्नि बाल्ये वहेन्नाडी कौमारे भ्रूयुगान्तरे ।
सदा कण्ठे च हृद्देशे कुक्षौ पार्श्वद्वये तथा ॥ ६४ ॥

---

7. துக்கம்
8. கோபம்

மூக்கின் அடியிலுள்ள நாடியைக்கொண்டு அறிவது.

(63) 1. மரணம் அல்லது உயிருடனிருத்தல்
2. பெண்ணாசை
3. கண்ணைப்பற்றிய வியாதிகள்
4. தலைவலி
5. காது, வாய் இவைகளில் ஏற்படும் வியாதிகள்

வயதுக்குத் தகுந்தபடி வியாதியின் சாத்திய அசாத்தியத்தை அறிவதற்கான நாடிகள்.

(64-65) 1. பாலப் பருவத்தில் தலையிலுள்ள நாடியைக் கொண்டும்,

2. குமாரப்பருவத்தில் புருவங்களின் இடையிலும்,

बाह्वोर्वृषणयोर्मध्ये मध्ये वयसि दृश्यते ।
स्पन्दनं स्पर्शनाज्ज्ञात्वा साध्यासाध्यं वदेदनु ॥ ६५ ॥

इति नाडीविज्ञानीये चतुर्थः पटलः ॥

---

## ॥ पञ्चमः पटलः ॥

### ॥ कालभेदनाडी ॥

पूर्वाह्णे श्लेष्मनाडी सुमसमयगुणा शीतमन्दा कषाया
मध्याह्ने पित्तनाडी पटुमधुर(कटुलवण)रसा शारदा
सोष्णतीव्रा ।

---

3. மத்திய வயதில் கழுத்திலும், ஹிருதயத்திலும், வயிற்றிலும், இரு விலாப்புறங்களிலும், இரு கைகளிலும், விரைகளின் மத்தியிலும் நாடிபார்த்து நோயின் சாத்திய அசாத்தியத்தை அறியவேண்டும்.

நான்காம் படலம் முற்றிற்று.

---

### ஐந்தாம் படலம்.

#### காலநிலைக்குத் தகுந்தபடி நாடி மாறும் வகை.

(66) கபநாடி முற்பகலிலும், வஸந்த ருதுவிலும்,

**सायाह्ने वातनाडी हिमगुणमधुरा (कटुभाक्) प्राप्त-
शीतोष्णवक्त्रा (रूक्षा च सूक्ष्मा)
चैवं पूर्वार्धरात्र्योरुषसि च शिशिरग्रीष्मवर्षाक्रमात्स्युः ॥**

**॥ ऋतुभेदनाडी ॥**

**जलूकगजयोर्यानं शिशिरे धमनी वहेत् ।**

---

சீதத்திலும், சுறுசுறுப்பின்மையினாலும், துவர்ப்பிஞ லும் அதிகரிக்கும்.

நடுப்பகலிலும், மழைகாலத்திற்குப்பிந்திய கூதிர்ப்பருவத்திலும், உறைப்பு, உப்பு முதலிய சுவைகளினாலும், உஷ்ணத்தினாலும் கடுமையான வேகத்தினாலும் பித்தநாடி அதிகரிக்கும்.

சாயங்காலத்தில், குளிர்ச்சியினாலும், உறைப்பினாலும், வரட்சியினாலும், நுட்பத்தினாலும் வாதநாடி அதிகரிக்கும்.

இவ்விதமே கப, பித்த, வாத நாடிகள் முறையே முன்னிரவு, நள்ளிருள், உஷக்காலம் என்ற இராக்காலப் பகுதிகளிலும், பனிகாலம், கோடைகாலம், மாரிகாலம் என்ற பருவங்களிலும் மிகுந்திருக்கும்.

## பருவங்களில் நாடிகளின் நடை மாறும் விதம்.

(67-68½) பின்பனிக் காலத்தில் அட்டை, யானை இவற்றின் நடைகளைப்போல் (அதாவது மிகவும் மெது

हेमन्ते च वहेयानं मण्डूकजलकाकयोः ॥ ६७ ॥

हंसव्याळगतिं धत्ते ग्रीष्मे तु धमनी कृशा।
राजहंसगतिं धत्ते धमनी शरदि स्थिता ॥ ६८ ॥

वर्षाकाले तु धमनी शशमत्स्यगतिर्भवेत्।

॥ षड्रससेवनानाडी ॥

मधुरे महती मंदा मण्डूकस्य गतिं धरा ॥ ६९ ॥

---

வாகவும், ஜாக்கிரதையாகவும் நடந்து ஸ்திரமாக அடியை ஊன்றும் நடை) நாடி நடக்கும்.

முன்பனிக் காலத்தில் தவளை, நீர்க்காக்கை இவைகளின் நடையோடு (அதாவது தத்தித்தத்தி) நாடி நடக்கும்.

முதுவேனிற் (கடுங்கோடை) காலத்தில் அன்னம், பாம்பு இவைகளின் நடையைப்போல் (அதாவது பக்கத்துக்குப் பக்கம் அசைந்துகொண்டு) நாடி நடக்கும்.

மழைக்குப் பின்னர் உள்ள கூதிர் பருவத்தில் ராஜ ஹம்ஸத்தைப்போல் உல்லாஸமாக நாடி நடக்கும்.

மாரிகாலத்தில் முயல், மீன் இவைகளைப்போல் துள்ளிக்குதித்து நாடி நடக்கும்.

### ஆறு சுவைகளாலும் நாடி மாறும் விதம்.

(69-71½) நாடியானது தித்திப்புச் சுவையுள்ள

आम्ले स्निग्धा सवेगा च ह्यश्वस्य गतिमावहेत् ।
क्षारे स्वेदा महावेगा चोष्णा चंचूगतिंधरा ॥ ७० ॥
तिक्ते तु शीतला मन्दा मातंगगतिमावहेत् ।
कटुके सोष्णवेगा च जलूकादिगतिंधरा ॥ ७१ ॥
कषाये तु महारूक्षा राजहंसगतिर्भवेत् ।

॥ द्वन्द्वरससेवनानाडी ॥

मधुराम्लरसासेव्या नाडी श्लेष्मगतिर्भवेत् ॥ ७२ ॥

---

ஆகாரத்தால் மந்தமாய், மண்டூக (தவளை) கதியுடையதா யிருக்கும்.

புளிப்புச்சுவை ஆகாரத்தால் நாடி நைப்புள்ளதாயும், வேகமுடையதாயும், குதிரையின் கதியுடையதாகவும் இருக்கும்.

உப்புச்சுவை ஆகாரத்தால் வியர்வையுள்ளதாயும், உஷ்ணமாயும், மிகவும் வேகமாய், மானின் கதியுடையதாக வும் இருக்கும்.

கைப்புச்சுவை ஆகாரத்தால், குளிர்ந்தும், யானை யைப்போல் மந்த கதியுடையதாயுமிருக்கும்.

உறைப்புச்சுவையுள்ள ஆகாரத்தால் உஷ்ணமாயும், வேகமாகவும், அட்டை முதலியவைகளின் கதியுடைய தாகவும் இருக்கும்.

துவர்ப்புச்சுவையுள்ள ஆகாரத்தால் மிகவும் வறண் டும் ராஜ ஹம்ஸ கதியுடையதாகவும் இருக்கும்,

कटुसैन्धवसंसेव्या नाडी पित्तगतिर्भवेत् ।
विपरीतरसासेव्या नाडी मोहगतिर्भवेत् ॥ ७३ ॥
विकृतामिषसंसेव्या नाडी नानागतिर्भवेत् ।
आयासासवसंसेव्या नाडी चित्रगतिर्भवेत् ॥ ७४ ॥

---

## இரண்டு சுவை கலந்து உட்கொள்வதால் நாடி மாறும் விதம்.

(72-74) தித்திப்பு, புளிப்பு இரண்டும் கலந்த ஆகாரத்தால் நாடி கபநாடியின் கதியுடையதாக இருக்கும்.

உறைப்பும், உப்பும் கலந்த ஆகாரத்தால் நாடியானது பித்த நாடியின் கதியுடையதாயிருக்கும்.

ஒன்றுக்கொன்று விரோதமான சுவைகளைக்[1] கலந்து புசிப்பதால் நாடி ஒன்றும் நிதானம் செய்ய முடியாததாக இருக்கும்.

அசுத்தமான மாமிசங்களைப் புசிப்பதால் நாடியானது அடிக்கடி மாறுகின்ற கதியுடையதாயிருக்கும்.

போதையுள்ள வஸ்துக்களைச் சாப்பிடுவதினாலும்,

---

1. ஒன்றுக்கொன்று விரோதமான சுவைகள்:—
தித்திப்பு—உறைப்பு
புளிப்பு—கைப்பு, துவர்ப்பு
உப்பு—கைப்பு, துவர்ப்பு
உறைப்பு—தித்திப்பு
கைப்பு—புளிப்பு, உப்பு
துவர்ப்பு—புளிப்பு, உப்பு

॥ षड्रससेवाकालः ॥

[1]शिशिरे तिक्तकं ज्ञेयं हेमन्ते मधुरो रसः ।
ग्रीष्मे रसः स्यात्कटुको वसन्ते च कषायकः ॥ ७५ ॥
शरत्सु सेव्यं लवणं वर्षासु स्वादुरसः स्मृतः ।

॥ दोषप्रकोपकालः ॥

ग्रीष्मे संचीयते वायुः प्रावृट्काले प्रकुप्यति ॥ ७६ ॥

---

களேப்பினும் நாடி பல்வகைக் கலப்பு நடை யுடையதா யிருக்கும்.

அறுசுவை யருந்தக் காலம்.

(75-76) பின்பனிக்காலத்தில் தித்திப்பும்,
முன்பனிக்காலத்தில் கைப்பும்,
முதுவேனிற் காலத்தில் தித்திப்பும்,
இளவேனிற் காலத்தில் உறைப்பும்,
மழைக்குப் பிந்திய கூதிர்ப் பருவத்தில் துவர்ப்பும்,
மாரிகாலத்தில் உப்பும், அதிகமாக உள்ள ஆகாரங்களைப் புசித்தல் தகும்.

---

1. श्लोका एवं स्युः इति भाति ।

'शिशिरे मधुरः सेव्यः हेमन्ते तिक्तको रसः ।
ग्रीष्मे रसः स्यान्मधुरः वसन्ते कटुकः स्मृतः ॥
शरत्सु च कषायः स्यात् वर्षासु लवणः स्मृतः ।'

वर्षासु चीयते पित्तं शरत्काले प्रकुप्यति।
हेमन्ते चीयते श्लेष्मा वसन्ते च प्रकुप्यति ॥ ७७ ॥

॥ दोषप्रशमनकालः ॥

प्रायेण प्रशमं याति स्वयमेव समीरणः।
शरत्काले वसन्ते च [1] पित्तं प्रावृडृतौ [2] कफः ॥ ७८ ॥

---

## தோஷங்கள் (பித்த, வாத, கபங்கள்) அதிகரிக்கும் [3]காலங்கள்.

(77) வாதம் முதுவேனிற் காலத்தில் சேர ஆரம்பித்து மழைகாலத்தில் ப்ரகோபம் அடையும்.

பித்தம் மழைகாலத்தில் சேர ஆரம்பித்து மழைக்குப் பிந்திய கூதிர்ப் பருவத்தில் ப்ரகோபம் அடையும்.

கபம் பின்பனிகாலத்தில் சேர ஆரம்பித்து இளவேனிற்காலத்தில் ப்ரகோபம் அடையும்.

## வாத பித்த, கபங்கள் சரியான நிலைக்கு வரும் காலங்கள்.

(78-79) கூதிர்ப் பருவத்தில் வாதமும்,

---

1. 'च हेमन्ते' इति स्यात् 2. 'ग्रीष्मे ऋतौ कफः' इति स्यात्

3. வாத, பித்த, கபங்கள் அதிகரிப்பதில் இரண்டு வகையுண்டு (1) சயம் அல்லது சேருதல் (2) ப்ரகோபம் அல்லது கடுமையாக அதிகரித்தல், முதல் வகையில் அளவு அதிகரித்தாலும் தத்தம் ஸ்தானத்தை மீறாமல் இருக்கும். ப்ரகோபத்தில் அவை தத்தம் ஸ்தானத்தை மீறும்படியான அதிகரிப்பு ஏற்படும்.

चयकोपशमानेवं विजानीयाद्भिषग्वरः ।

॥ भूतप्रकाशकऋतवः ॥

वसन्ते तु पृथिव्याश्च ह्यपां हैमन्तिके तथा ॥ ७९ ॥

---

*முன்பனி காலத்தில் பித்தமும்,*

*முதுவேனிற் காலத்தில் கபமும்,*

*சமனமடையும்.*

## பஞ்சபூதங்கள் [1]ப்ரகாசிக்கும் காலங்கள்.

(80) *இளவேனிற் காலத்தில் பிருதிவியும்,*

*முன்பனிக்காலத்தில் அப்பும்,*

---

1. நமது ஆயுர்வேதத்திலும் மஹரிஷிகளால் இயற்றப் பட்ட மற்ற நம் புராதன சாஸ்திரங்களிலும் இந்த உலகத்தை ஆராய்ந்திருக்கும் விதம் பின்வருமாறு:-

இந்த உலகம் நமது புலன்களால் அறியப்படுகிறது. நமது புலன்கள் ஐந்து. அவையாவன: —

(1) சத்தத்தை அறிதல், (2) ஸ்பர்ச உணர்ச்சி, (3) ஒளியறிதல், (4) சுவையறிதல், (5) நாற்றமறிதல்.

இவ்வைந்து புலன்களாலும் அறியப்படும் பொருள்களுக்கு ஐந்து பெயர்களைக் கொடுத்தார்கள்:—

(1) செவிப் புலனால் அறியப்படும் பொருளுக்கு 'ஆகாசம்' என்று பெயர். அதன் குணம் சத்தம். (2) ஸ்பர்ச உணர்வினால் உணரப்படும் பொருளுக்கு 'வாயு' என்று பெயர். அதன் குணம் சத்தம், ஸ்பரிசம் என்பன. (3) கட்புலனால் அறியப்படும் பொருளுக்குத் 'தேயு' என்று பெயர். அதன் குணம் சத்தம், ஸ்பரிசம், ரூபம் என்பன. (4) சுவையினால் அறியப்படும் பொருளுக்கு 'அப்பு' என்று பெயர். அதன்

वह्नेः शरदि वर्षासु वायोर्ग्रीष्मे तथा भवेत् ।
शिशिरे गगनस्यैवं प्रकाशः पांचभौतिकः ॥ ८० ॥

इति नाडीविज्ञानीये पंचमः पटलः ॥

## ॥ षष्ठः पटलः ॥

अथ जीवनाडीमाह—

अथ सर्वशरीरेषु वातपित्तकफात्मिकाम् ।

---

கூதிர்ப் பருவத்தில் அக்னியும்,

மாரிகாலத்திலும்
முதுவேனிற் காலத்திலும் } வாயுவும்

பின்பனிக் காலத்தில் ஆகாயமும்

ப்ரகாசிக்கும்.

ஐந்தாம் படலம் முற்றிற்று.

---

குணம் சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் என்பன. (5) மூக்கினால் அறியப்படும் பொருளுக்கு 'ப்ருதிவி' என்று பெயர். அதன் குணம் சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்பன.

இவ்விதமாக உலகத்தை ஐந்துவிதங்களாகப் பிரித்து இவற்றிற்கு மூலப்பொருள்கள் அல்லது பூதங்கள் என்று பெயர் இட்டனர். இவ்வுலகத்தில் புலன்களால் அறியப்படும் பொருள்கள் யாவும் இந்த ஐந்து பூதங்களாலேயே உண்டாக்கப்பட்டிருக்கின்றன என்பது அடிப்படையான கொள்கை.

नानागतियुतां सम्यग्यवमात्रां सुसूक्ष्मगाम् ॥ ८१ ॥
सर्वाङ्गे संस्थितां नित्यं स्वास्थ्यास्वास्थ्यप्रकाशिनीम् ।
प्रकोष्ठे वर्तमानां च जीवनाडीं सुदुस्तराम् ॥
सदाभ्यासबलाद्धीरस्तर्जन्यग्रेण शोधयेत् ॥ ८२ ॥

---

## ஆரும் படலம்

### ஜீவநாடி.

(81-82) எல்லா சரீரங்களிலும் ஸூக்ஷ்மமாகச் செல்லுகிற 'ஜீவநாடி' என்ற ஓர் நாடி இருக்கிறது. அது 'யவை' என்னும் நெல்லின் அளவாகவே இருந்த போதிலும் தெளிவாகப் புலனாகக்கூடியது. வாதம், பித்தம், கபம் இம்மூன்றின் தன்மைகளையும் உடையது. அவற்றின் நிலைமையைப் பொறுத்துப் பலவித கதியை உடையதாக இருக்கும். இது எப்பொழுதும் எல்லா அங்கங்களிலும் செல்லும் நாடி. இது ஒருவருடைய ஆரோக்கியம், வியாதி இவற்றின் நிலைமையைத் தெளிவாகக் காட்டக்கூடியது.

இதைக் கண்டறியும் இடம் மணிக்கட்டு. அதை நல்ல அப்பியாசத்தினால் ஆள்காட்டி விரலின் நுனியைக் கொண்டு சோதிக்க வேண்டும். [1]அப்படிப் பார்க்கும் போது அது எப்பொழுதும் நன்றாகக் கைக்குப் புலப் படாமல் தாண்டிச்செல்லாது.

---

1. மூன்று விரல்களையும் வைத்து வாத, பித்த, கப நாடி

## ॥ जीवनाडीस्थितिः ॥

**प्रवर्तते दोषनिजस्वरूपं**
**व्यस्तं समस्तं युगळीकृतं च ।**

---

களைச் சோதிப்பது சாதாரணமாக நாடி பார்க்கும் வழி. ஆனால் ஜீவநாடி என்னும் முக்கியமான இந்த நாடி மிகவும் ஆராய்ந்து அறியவேண்டிய ஸூக்ஷ்மமான கதியையுடையது. மூன்று விரல்களையும் வைத்துப் பார்க்கும்போது இந்த நாடி ஆள்காட்டி விரலின் நுனியால் மட்டும் கண்டு அறியக்கூடியது. நல்ல அப்பியாசத்தாலேயே இதைக் கண்டறியக்கூடியதாக இருந்தபோதிலும் தெளிவாகவும், நிச்சயமாகவும் வாத, பித்த, கபங்களையும் உடம்பின் நிலையையும் இதைக்கொண்டு கண்டுபிடிக்கலாம். இதைத் தமிழில் 'குருநாடி' என்பார்கள். இது இருக்கும் இடம் வாதத்துக்கும் பித்தத்துக்கும் நடுவே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

" என்றைக்கும் வாதபித்தம் நடுவே நிற்கும்
ஏறுவதும் குறைவதும் இல்லையப்பா
கன்றுக்குப் பாலிறங்கும் பசுவைப்போல்
காத்திருக்கும் குருநாடி காலைப்பாரே "

" ஏறப்பா வாதம் என்று சொல்வார் மூடர்
இருத்தியங்கே பார்ப்பளவில் வேறாய் நிற்கும்
கருநாடிக் குருநாடியாகக் காணும்
கைம்முறையாய் குருதொட்டுக் காட்டத்தோன்றும்
பெருநாடி சாத்திரத்தில் மயங்கிடாதே
புலத்தியர் குருநாடி பின்னல்பாரே "

தமிழ் நூல்களில் வாத நாடி, பித்த நாடி, கப நாடி இவற்றோடு சிறுவிரலில் பூதநாடி என்ற ஒரு நாடியும், வாதத்திற்கும், பித்தத்திற்கும் இடையே குருநாடியும் ஆக 5 நாடிகள் கூறப்படுகின்றன. (பதினெண் சித்தர் நாடி சாஸ்திரம் பக்கம் 10, 11.)

मूकस्य मुग्धस्य विमोहितस्य
दीपः पदार्थेष्विव जीवनाडी ॥ ८३ ॥

जन्तोस्तु दक्षिणकरे मणिबन्धमूले
दोषान्वहत्यभिदधाति हि जीवनाडी ।
संपीडयेत्तिसृभिरङ्गुलिभिर्भिषक् तां
विद्याद्विचक्षणतमः स्फुरितांस्त्रिदोषान् ॥

---

ஜீவநாடியின் நிலே.

(83-84) வாத, பித்த, கபங்களின் நிலைமைகளைத் தனித்தனியாகவும் இரண்டிரண்டாகச் சேர்த்தும் கவனித்து அவற்றின் அதிகரிப்பு, குறைவு முதலியவைகளை அறிவதற்கும் மூன்று தோஷங்களையும் சேர்த்துக் கவனிப்பதற்கும் ஒத்தாசையாக இம்மூன்று தோஷங்களின் உண்மையான நிலைக்குத் தகுந்தபடி இந்த நாடியின் கதி அமைந்திருக்கும்.

இந்த நாடியானது தேக நிலையைத் தெரிவிக்க இயலாத ஊமை, விவரந் தெரியாத பருவமுடையவர்கள், மயக்கமடைந்தவர்கள், இவர்களுடைய உடம்பிலும் வாத, பித்த நிலைமைகளை, வஸ்துக்களை ஓர் விளக்கு ப்ரகாசப்படுத்துவதுபோல் தெளிவாக்கும். ஒவ்வொருவருடைய வலது கையிலும் மணிக்கட்டின் அடியில் வாத, பித்த, கபங்களின் தன்மைகளைத் தன்னிடமாகக் கொண்டு

॥ जीवनाडीस्वभावः ॥

शीता कफार्तौ स्थिरवाहिनी स्यात्
पित्ते तु सोष्मा चलवाहिनी स्यात् ।
वातोद्धता वक्रवहोष्णशीता
सर्वत्र सर्वाकृतिरेव नाडी ॥ ८५ ॥

॥ साध्यनाडी ॥

त्रिदोषरहिता शुद्धा प्रज्ञादृष्टिप्रसन्नता ।
पिकभेकगतिर्नाडी साध्या स्याज्ज्वरहीनतः ॥

---

அவற்றை இந்த ஜீவநாடி பிறருக்கு அறிவிக்கிறது. மூன்று விரல்களையும் கொண்டு அமுக்கிப் பார்க்கும் போது அதில் துடிக்கிற இந்த நாடியைக் கொண்டு வாத பித்த கபங்களை அறிவாளியான வைத்தியன் கண்டுகொள் வான்.

## ஜீவநாடியின் தன்மை

(85) கபரோகத்தில் நாடி குளிர்ச்சியாகவும் நின்று நின்று நகரும் கதியுடையதாகவும் இருக்கும்.

பித்தரோகத்தில் நாடி உஷ்ணமாகவும் நிலையின்றி ஓடிக்கொண்டிருக்கும் கதியுடையதாகவும் இருக்கும்.

வாதரோகத்தில் நாடி சீதோஷ்ண மிதமாகவும், வளைந்து செல்லும் கதியோடும் இருக்கும். மூன்று தோஷங்களும் அதிகரித்த வியாதிகளில் மூன்றுவித கதிகளும் சேர்ந்திருக்கும்.

॥ असाध्यनाडी ॥

पूर्वं पित्तगतिं प्रभंजनगतिं श्लेष्माणमाबिभ्रती-
मत्यन्तभ्रमणं मुहुर्विदधतीं चक्रादिरूढामपि ।
तीव्रत्वं दधतीं सुमध्यगमनां सूक्ष्मत्वमातन्वतीं
नोसाध्यां धमनीं वदन्ति मुनयो नाडीपरिज्ञानिनः ॥

---

## சாத்திய நாடி

(வியாதி குணமாகக்கூடியதைக் காட்டும் நாடி)

(86) நாடியானது சன்னிபாததோஷம் (மூன்று தோஷங்களும் சேர்ந்தது) இல்லாமல் குயில், தவளை, இவைகளின் கதியுடையதாய் இருப்பதோடு நல்ல ஞாபகமும் தெளிந்த பார்வையும் இருந்தால், ஜ்வரம் படிந்து வியாதி குணமாகக் கூடியதைக் குறிக்கும்.

## அசாத்திய நாடி

(வியாதி குணமாவது அரிது என்பதைக் காட்டும் நாடி)

(87) நாடியானது முதலில் பித்தகதி யுள்ளதாகவும், பிறகு வாதகதி யுள்ளதாகவும், பிறகு கபகதி யுள்ளதாகவும் மாறிக் கொண்டிருந்தாலும், சக்கரம் சுழல்வதுபோல் அடிக்கடி நிலைமாறி, சிறிது நேரம் மிகக் கடுமையாகவும், சிறிது நேரம் நடுத்தரமாகவும், சிறிது நேரம் மிக நுட்பமாகவும் இருந்தாலும், அவ்வித நாடி

॥ नष्टनाडी ॥

अतिसूक्ष्मा सवेगाढ्या मुहुर्मन्दगतिंधरा ।
अधस्ताद्गमनी नाडी प्रवदेच्च गतायुषम् ॥ ८८ ॥

॥ अविज्ञेयनाडी ॥

व्यायामतृष्णातपपीडितस्य
बुभुक्षतो भुक्तवतोऽपि जन्तोः ।
अभ्यंजनस्नानवधूपभोग-
क्रियासु नाडी न विबोधनीया ॥ ८९ ॥

---

வியாதி குணமாவது அரிது என்பதைக் காட்டும் என்று நாடியை நன்கு அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆயுளின் முடிவைக்கூறும் நாடி

(88) நாடியானது மிக நுட்பமாகவும், அதிவேக மாகவும், அடிக்கடி மெதுவான நடைக்கு மாறிக்கொண் டும், மேலே எழும்பாமல் உள்ளுக்குச் சென்று கொண்டும் இருக்குமாகில் ஆயுள் முடிந்ததெனக் கூறவும்.

வியாதியின் நிலையைக் கண்டறிய முடியாத ஸ்திதிகள்.

(89) தேகப்பயிற்சி செய்தவர், தாகம், வெய்யில் இவைகளால் வாடியவர், பசியுள்ளவர், உண்டவர், எண் ணெய் தேய்த்துக் குளித்தவர், போகம் செய்தவர் இவர் களுடைய நாடியை நன்கு அறிய முடியாது.

॥ विज्ञेयनाडी ॥

स्वच्छकायं समग्रीवमनालम्बितजागरम् ।
व्यायाममैथुनैर्हीनमभुक्तं स्नानवर्जितम् ॥

शान्तं क्रोधादिरहितमकापथ्यप्रलापिनम् ।
श्रद्धालुं शोकरहितं वैद्यभक्तं निरामयम् ॥

सामयं वा विशोध्यादौ पश्चान्नाडीं परीक्षयेत् ॥

इति नाडीविज्ञानीये षष्ठः पटलः ॥

---

தெளிவாக நாடியை அறியக்கூடிய நிலை

(90-91) சுத்தமான சரீரத்தை உடையவர், கழுத்து நிமிர்ந்திருக்கும்படி நேராக உட்கார்ந்திருப்பவர், கண் விழிக்காதவர், தேகப்பயிற்சி, ஸ்திரீபோகம், ஆகாரம், ஸ்னானம் இவற்றைச் செய்யாதவர், மனச்சாந்தியுடையவர், கோபம் முதலிய வேகங்கள் இல்லாதவர், கபடமில்லாமல் பேசுபவர், நம்பிக்கையுள்ளவர், சோகப்படாதவர், வைத்தியனிடத்தில் அன்பும் மரியாதையும் உடையவர், இப்படிப்பட்டவர்களுடைய நாடியைப் பார்த்தறிய இயலும். வியாதியிருந்தாலும் வியாதியில்லாவிட்டாலும் நாடி பார்க்குமுன் இவ்விஷயங்களை நன்றாய்ச் சோதித்துக்கொண்டு பிறகு நாடி பார்க்கவேண்டும்.

ஆறும் படலம் முற்றிற்று

## ॥ सप्तमः पटलः ॥

### ॥ नाडीविशेषः ॥

अथ सर्वशिराशास्त्रसारमालोक्य यत्नतः ।
सविशेषगतिं प्राहुर्नाडीनां भिषजो बुधाः ॥ ९२ ॥

दोषशोधनमाह—

अंगुष्ठमूलेंगुलिकात्रयेण
नाडीं विपश्येदतिसूक्ष्मभावम् ।
जानाति तस्याश्चलनप्रभावं
दोषोद्भवं वैद्यशिखामणिः पृथक् ॥ ९३ ॥

---

### ஏழாவது படலம்

### நாடியின் விசேஷம்

(92) புத்திமான்களான வைத்தியர்கள் நாடிகளைப் பற்றிய எல்லா சாஸ்திரங்களின் சாரத்தையும் கவனித்துப் பார்த்து நாடிகளின் விசேஷ கதிகளை அறிந்து சொல்லுவார்கள்.

### தோஷங்களை கவனித்துப்பார்க்கவேண்டிய முறை

(93) நாடியைப் பார்க்கவேண்டியவனுடைய கட்டை விரலின் அடியில் நன்ருய்க் கூர்ந்து கவனித்து அறிய வேண்டிய நாடியைச் சிறந்த வைத்தியன் தனது மூன்று விரல்களால் பார்த்து வாத பித்த கபதோஷங்களின்

अंगुलीक्रममाह—

तर्जन्यग्रे तु पवनो मध्यमाग्रे तु पित्तकम् ।
अनामिकाग्रे श्लेष्मा च वर्तते निश्चलं ध्रुवम् ॥ ९४ ॥

॥ वर्षविवेकः ॥

पञ्चाशदब्दे प्रमितं नराणां
विलोकयेद्दक्षिणपाणिनाडीम् ।
अतः परं वामकरे प्रशस्तं
पश्येत्तथा व्यत्ययमंगनानाम् ॥ ९५ ॥

इति नाडीविज्ञानीये सप्तमः पटलः ॥

---

*மிகையினாலும் குறையினாலும் உண்டாகும் கதிபேதங்களை விவரமாகத் தெரிந்து கொள்ளுவான்.*

விரல்களின் வரிசையும் தோஷங்களின்வரிசையும்

(94) *வைத்தியன் தனது ஆள்காட்டி விரல், நடுவிரல், பவித்திர விரல் ஆகிய மூன்று விரல் நுனிகளாலும் நாடியை கவனித்துப் பார்க்கும் பொழுது ஆள்காட்டி விரல் நுனியில் வாதமும், நடுவிரல் நுனியில் பித்தமும், பவித்திர விரல் நுனியில் கபமும் மாறாமல் நிச்சயமாய் புலப்படும்.*

ஆயுள்காலத்தின் பல பகுதிகளில்
கைபார்க்கும் முறை

(95) *புருஷர்களுக்கு ஐம்பது வயது வரையில்*

## ॥ अष्टमः पटलः ॥

॥ नाडीनां गतयः ॥

भुजंगगमनं वाते पित्ते भेकगतिर्भवेत् ।
श्लेष्मे हंसगतिः प्रोक्ता त्रिष्वप्येता विशेषतः ॥ ९६ ॥
वाते वक्रगतिर्भेकसर्पलावककूर्मवत् ।
मृगमत्स्यजलूकाखुडोलेव धमनी स्थिरा ॥ ९७ ॥

---

வலதுகை நாடியைப் பார்க்கவேண்டும். அதற்குப்பிறகு இடதுகை நாடியைப் பார்ப்பது நல்லது. ஸ்திரீகளுக்கு ஐம்பது வயது வரையில் இடதுகை நாடியைப் பார்க்க வேண்டும். அதற்குப்பிறகு வலதுகை நாடியைப் பார்ப்பது நல்லது.

ஏழாவது படலம் முற்றிற்று.

---

## எட்டாவது படலம்

### நாடிகளுக்குரிய கதிகள்

(96—99) வாத நாடிக்கு ஸர்ப்பத்தின் கதியும், பித்த நாடிக்குத் தவளையின் கதியும், கப நாடிக்கு அன்ன பக்ஷியின் கதியும், இயற்கையாக உள்ளவை. வாத நாடி வக்கிர கதியாக இருக்கும்போது தேரை, ஸர்ப்பம், சிட்டுக்குருவி, ஆமை, இவைகளைப்போலவும், ஸ்திர கதியாக இருக்கும்போது மான், மீன், அட்டை, மூஞ்சூறு, ஊஞ்சல் இவைகளைப்போலவும் இருக்கும்.

पित्ते तु चपला काकपिकभेकमयूरवत् ।
कपोतहंसचटकतुरंगगतिवत्स्थिरा ॥ ९८ ॥

कफे कपोतचटककुक्कुटाश्वमराळवत् ।
लुलायटिट्टिभवधूगजवद्धमनी स्थिरा ॥ ९९ ॥

॥ अथ द्वंद्वगतयः ॥

वाते पित्तयुते गतिस्तु सदृशी स्यात्सर्पशालूरयोः

---

பித்த நாடி காக்கை, குயில், தவளை, மயில் - இவைகளைப்போல் நிலையற்ற கதியுடையதாயும், மாடப்புறு, அன்னம், ஊர்க்குருவி, குதிரை இவைகளைப்போல் ஸ்திரமான கதி யுடையதாயும் இருக்கும்.

கப நாடி மாடப்புறு, ஊர்க்குருவி, கோழி, குதிரை, அன்னம் இவைகளின் கதியைப்போல் சஞ்சலமாயும், எருமை, பெண் சிட்டுக்குருவி, யானை, இவைகளைப் போல் ஸ்திரமான கதியை உடையதாயும் இருக்கும்[1].

---

1. வாத, பித்த, கப நாடிகளின் நடைகளைப் பற்றிய இந்த சுலோகங்களில் 96-வது சுலோகத்தில் வாத, பித்த, கபங்களின் இயற்கையான கதிகளும், பிறகு 97, 98, 99-வது சுலோகங்களில் நாடியானது ஸ்திரமாக இருக்கும் நிலையிலுள்ள கதி, நிலையில்லாமல் இருக்கும்போது உள்ள கதி, ஆக இரண்டு விதி கதிகள் வாத, பித்த, கபம் ஒவ்வொன்றுக்கும் கூறப் பட்டிருக்கின்றன.

தமிழ் நூல்களில் வாதநாடி "அன்னம், கோழி, மயில்" போலும், பித்தநாடி "ஆமை, அட்டை" போலும், கபநாடி "தவளை பாம்பு" போலும் நடக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

तुल्या पन्नगहंसयोः कफयुते वाते गतिर्जायते ।
पित्ते श्लेष्मणि भेकहंससदृशीं धत्ते गतिं तन्तुकी
प्राहुः पन्नगभेकहंसगमनं वैद्यास्त्रिदोषज्वरे ॥ १०० ॥

॥ सन्निपातनाडी ॥

वाजीहंसमयूराहिपारावतकुलीरवत् ।
सन्निपातोद्भवां नाडीं प्रवदन्ति मनीषिणः ॥ १ ॥

---

## இரண்டு தோஷங்கள் சேர்ந்திருக்கும்பொழுது நாடியின் கதிகள்.

(100) வாதம் பித்தத்தோடு சேர்ந்திருக்கும் பொழுது நாடி ஸர்ப்பம், வேங்கை இவைகளின் கதியை ஒத்திருக்கும்.

வாதம், கபத்தோடு கலந்திருக்கும் பொழுது நாடி ஸர்ப்பம், அன்னம் இவைகளின் கதியை ஒத்திருக்கும்.

பித்தம் சிலேஷ்மத்தோடு கலந்திருந்தால் நாடி தவளை, அன்னம் இவைகளின் கதியை ஒத்திருக்கும்.

திரிதோஷ ஜ்வரத்தில் நாடியானது பாம்பு, தவளை, அன்னம் இவைகளின் கதியை ஒத்திருக்கும் என்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

## ஸந்நிபாத (மூன்று தோஷங்களும் சேர்ந்த) நாடி

(1) ஸந்நிபாத ரோகங்களில் நாடி குதிரை, அன்னம், மயில், ஸர்ப்பம், புறு, நண்டு இவைகளின் கதியை ஒத்திருக்குமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

॥ असाध्यसन्निपातनाडी ॥

मन्दं मन्दं शिथिलशिथिलं व्याकुलं व्याकुलं वा
स्थित्वा स्थित्वा वहति धमनी याति नाशं च सूक्ष्मा ।
निष्पन्दासौ स्फुरति च पुनः स्वांगुलीभिः स्पृशद्भि-
र्भावैरेवं बहुविधचलं सन्निपातं वदन्ति ॥ २ ॥

इति नाडीविज्ञानीये अष्टमः पटलः ॥

---

அஸாத்திய ஸன்னிபாத நாடி

(2) நாடியானது மிகவும் மெதுவாயும், சிதைந்து சிதைந்தும், தாறுமாறாகவும், நின்று நின்றும், மிக நுட்பமாய், ஸ்வரூப மற்ற நிலையை அடைந்தாலும், துடிப்பே இல்லாமல் போன நாடியானது மறுபடி துடித்தாலும் அதை வைத்தியர்கள் தங்கள் விரல்களால் கவனித்துப் பார்த்து நிலையற்ற பலவித கதிகளையுடையதாயிருப்பதால் அஸாத்திய ஸன்னிபாதம் என்று சொல்லுவார்கள்.

எட்டாவது படலம் முற்றிற்று.

## ॥ नवमः पटलः ॥

अथ दशनाड्यादिनिरूपणमाह—

इडा च पिङ्गला चैव सुषुम्ना च तृतीयका ।
गान्धारी हस्तवीजं च पूषा चैव पयस्विनी ॥ ३ ॥
अलंबुर्लकुलश्चैव शङ्खिनी दशनाडिकाः ।

॥ षट्चक्राणि ॥

मूलाधारस्वाधिष्ठाने मणिपूरकमनाहतम् ॥ ४ ॥
विशुद्धिराज्ञा चक्रं च संभवन्त्यादिदेहिनि ।

---

## ஒன்பதாம் படலம்.

### 10நாடிகளின் பெயர்கள்.

(3) நமது தேகத்திலுள்ள முக்கியமான 10 நாடிகளாவன :—

(1) இடை, (2) பிங்களை, (3) ஸுஷும்னை, (4) காந்தாரீ, (5) ஹஸ்தபீஜம், (ஹஸ்தி ஜிஹ்வா) (6) பூஷா, (7) பயஸ்வினீ, (8) அலம்பு, (அலம்புஷா) (9) லகலம் (குஹூ) (10) சங்கினீ.

### ஆறு சக்காங்களின் விபாம்.

(4) 1. மூலாதாரம்.

2. ஸ்வாதிஷ்டானம்.

3. மணி பூரகம்.

॥ षट्चक्रस्थानानि ॥

आधारे लिंगनाभौ च हृदये सरसीरुहे ॥ ५ ॥
तालुमूले ललाटे च चक्रस्थानानि हि क्रमात् ।

॥ दशनाडीस्थितिक्रमः ॥

इडा च पिङ्गळा चैव सुषुम्ना चोर्ध्वगा स्मृता ॥ ६ ॥
गान्धारी हस्तबीजं च पूषा चैव पयस्विनी ।

---

4. அனுஹதம்.
5. விசுத்தி.
6. ஆக்ஞை.

என ஆறு ஆதாரங்கள் சரீரத்திலமைந்திருக்கின்றன.

ஆறு சக்கரங்களின் நிலைகள்.

(5) மூலாதாரத்தில் மூலாதார சக்கரமும்,
லிங்கத்தில் ஸ்வாதிஷ்டானமும்,
நாபியில் மணிபூரகமும்,
ஹ்ருதய கமலத்தில் அனுஹதமும்,
தாலு மூலத்தில் (கண்டத்தில்) விசுத்தியும்,
நெற்றியில் (ப்ருமத்தியத்தில்) ஆக்ஞா சக்கரமும் அமைந்திருக்கின்றன.

பத்து நாடிகளின் நிலை.

(6-8) இடை, பிங்கலை, ஸுஷும்னை என்ற மூன்று நாடிகளும் மேல்நோக்கிச் செல்லுகின்றன. காந்தாரீ, ஹஸ்திஜிஹ்வா, பூஷா, பயஸ்விநீ என்ற நான்கு

**तिर्यग्भागाः प्रवर्तन्ते चत्वारो नाडिकाः स्मृताः ॥**
**अलंबुर्लकलश्चैव शंखिनी चाप्यधोमुखाः ।**
**चक्रमध्ये प्रवर्तन्ते सर्वांगेषु विवर्धिताः ॥ ८ ॥**

**अथ कलादिकथनं निरूप्यते—**

**कलाः सप्ताशयाः सप्त धातवः सप्त तन्मलाः ।**

---

*நாடிகளும் சரீரத்தில் குறுக்காகச் செல்லுகின்றன. அலம்புஷா, குஹூ, சங்கினீ என்ற மூன்று நாடிகளும் கீழ்நோக்கிச் செல்லுகின்றன. இந்த பத்து நாடிகளும் சரீர மத்தியில்[1] எல்லா அங்கங்களிலும் விரிவடைந்து செல்லுகின்றன.*

நமது உடம்பிலுள்ள கலை முதலிய உறுப்புக்கள்.

(9-13) 1. *கலைகள் ஏழு*[2]

2. *ஆசயங்கள் (தங்குமிடங்கள்) ஏழு*

3. *தாதுக்கள் ஏழு*

4. *தாது மலங்கள் ஏழு*

---

1. *மூலச்லோகத்தில் 'சக்ரமத்யே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சக்கிரத்தின் நடுவில் அல்லது சக்கிரங்களின் நடுவில் என்று இதற்குப் பொருள் கூறலாம்.*

2 *கலை=மீதியான தாது முதலியவற்றின் கசிவுகள். நாம் உண்ணும் உணவு தாதுக்களாகவும், தோஷங்களாகவும், மலங்களாகவும் மாறுபாடடைகிறது. இவைகளுள் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டான பிறகு அவ்விரண்டையும் பிரிப்பதுபோன்ற கசிவு ஒன்று இடையே மிச்சப்படுகிறது.*

सप्तोपधातवः सप्त त्वचः सप्त प्रकीर्तिताः ॥ ९ ॥

त्रयो दोषा नवशतं स्नायूनां संधयस्तथा ।
दशाधिकं च द्विशतमस्थ्नां च त्रिशतं मतम् ॥ १० ॥

सप्तोत्तरशतं मर्म शिराः सप्तशतं तथा ।
चतुर्विंशतिराख्याता धमन्यो रसवाहिकाः ॥ ११ ॥

मांसपेश्यः समाख्याता नृणां पंचशतं बुधैः ।
स्त्रीणां च विंशत्यधिकाः कंधराश्चैव षोडश ॥ १२ ॥

---

5. உபதாதுக்கள் ஏழு
6. தோல்கள் ஏழு
7. தோஷங்கள் மூன்று
8. ஸ்நாயுக்கள் அல்லது தசைக் கயிறுகள் 900
9. ஸந்திகள் 210
10. எலும்புகள் 300
11. மர்மஸ்தானங்கள் 107
12. சிரைகள் 700
13. தமனிகள் 24
14. மாம்ஸ பேசிகள் 500
15. கண்டரங்கள் (திரண்டு உருண்ட தசைக் கயிறுகள்) 16

---

அது சவ்வுக்களாலும், ஸ்நாயுக்களாலும், கபத்தாலும் மூடப் பட்டிருக்கும். இதற்குக் 'கலே' என்று பெயர்.

नृदेहे दश रन्ध्राणि नारीदेहे त्रयोदश ।
एतत्समासतः प्रोक्तं विस्तरेणाधुनोच्यते ॥ १३ ॥

॥ कलाः ॥

मांसासृङ्मेदसां तिस्रो यकृत्प्लीह्नोश्चतुर्थिका ।

---

16. *துவாரங்கள் 10*

*இவைகள் ஸ்திரீ புருஷர்களுக்குப் பொதுவாக உள்ளவை. ஸ்திரீகள் உடம்பில் மாம்ஸ பேசிகள் 20 அதிகமாகவும், துவாரங்கள் 3 அதிகமாகவும் அமைக்கப் பட்டிருக்கின்றன.*

## கலைகள் ஏழு.

(14) 1. *மாம்ஸதரா*[1]

2. *ரக்ததரா*[2]

3. *மேதோதரா*[3]

4. *யகிருத்தரா* } *யகிருத்=கல்லீரல்*
*ப்லீஹதரா* } *ப்லீஹம்=மண்ணீரல்*

---

1. *இக்கலையின் வழியாக மாம்ஸத்தில் ஸிரை, ஸ்நாயு, தமனீ, ஸ்ரோதஸ் இவைகள் பரவுகின்றன.*

2. *மாம்ஸத்திலும், ரத்தக் குழாய்களிலும், கல்லீரல் மண்ணீரல் இவைகளிலும் இந்தக் கலை ரத்தத்தைத் தாங்கி நிற்கின்றது.*

3. *வயிற்று சதை முதலிய இடங்களில் மேதஸ்ஸைக் காப்பாற்றுவது இக்கலை.*

पंचमी च तथांत्राणां षष्ठी चाग्निधरा मता ॥ १४ ॥
रेतोधरा सप्तमी स्यादिति सप्त कलाः स्मृताः ।

॥ अथाशयाः ॥

श्लेष्माशयः स्यादुरसि तस्मादामाशयस्त्वधः ॥ १५ ॥
ऊर्ध्वमग्न्याशयो नाभेर्वामभागे व्यवस्थितः ।

---

5. ஆந்த்ரதரா[4]

6. அக்கினிதரா[5]

7. ரேதோதரா[6]

ஆசயங்கள் (தங்குமிடங்கள்).

(15–18) 1. மார்பில் கபாசயமும்,

2. அதன் கீழே ஆமாசயம் அல்லது ஜீரணத்தின் முற்பகுதி நடக்கும் இடமாகிய வயிறும்,

3. தொப்புளுக்கு மேலே வலது புறத்தில் அக்கினி ஆசயம் என்னும் க்ரஹணியும்,

---

4. ஆந்திரதரா என்னும் கலை 'மலதரா' என்றும் சொல்லப்படுகிறது. ஆந்த்ரம் = குடல்.

5. இதற்கு 'பித்ததரா' என்றும் பெயர் உண்டு. இது வயிற்றிலிருந்து குடலுக்குச் செல்லும் குழாயாகிய க்ரஹணியில் இருந்துகொண்டு வயிற்றில் ஆகாரம் பக்குவமாகும் வரையில் அதைக் கீழே இறங்காமல் தாங்குகிறது.

6. ரேதஸ் = சுக்கிலம்.

तस्योपरीमिलं(?)ज्ञेयं तदधः पवनाशयः ॥ १६ ॥
मलाशयस्त्वधस्तस्य वस्तिर्मूत्राशयः स्मृतः ।
जीवरक्ताशयमुरो ज्ञेयास्सप्ताशयास्त्वमी ॥ १७ ॥
पुरुषेभ्योऽधिकाश्चान्ये नारीणामाशयास्त्रयः ।
धरा गर्भाशयः प्रोक्तः स्तनौ स्तन्याशयौ मतौ ॥ १८ ॥

॥ अथ धातवः ॥

रसासृङ्मांसमेदोस्थिमज्जाशुक्लानि धातवः ।
जायन्तेऽन्योन्यतस्सर्वे पाचिताः पित्ततेजसा ॥ १९ ॥

---

4. அதற்கு மேலே பித்தாசயமும்,
5. பித்தாசயத்தின் கீழ் வாதாசயமும்,
6. அதன் கீழ் மலாசயமும், மூத்திராசயமாகிய மூத்திரப் பையும் அமைந்திருக்கின்றன.
7. மார்பில் ஜீவாசயம், ரத்தாசயம் என்று வழங்கப்படும் ஹ்ருதயம் அமைந்திருக்கிறது.

இவை ஸ்திரீ புருஷர்களுக்குப் பொதுவானவை. ஸ்திரீகளுக்கு இன்னும் மூன்று ஆசயங்கள் உண்டு. அவை 'தரா' என்ற பெயருடைய கர்ப்பாசயம் ஒன்று. ஸ்தன்யாசயம் இரண்டு. ஆக மூன்று.

### தாதுக்கள்.

(19) 1. ரஸம் அல்லது ஆகாரத்தின் ஸார மான அம்சம், (2) இரத்தம், (3) மாமிசம்,

॥ अथ धातुमलानि ॥

जिह्वानेत्रकपोलानां जलं पित्तं च रंजकम् ।
कर्णविड्रसनादन्तकक्षामेढ्रादिजं मलम् ॥ २० ॥
नखनेत्रमलं वक्त्रे स्निग्धत्वं पिडकाः(?) स्मृताः ।

---

(4) மேதஸ் (கொழுப்பு), (5) அஸ்தி (எலும்பு), (6) மஜ்ஜை, (எலும்புக்குள் உள்ள ஸாரம்) (7) சுக்லம்.

இவைகள் பித்த அக்னியினால் பக்குவம் செய்யப் பட்டு முறையே ஒன்றிலிருந்து மற்றொன்றாக உண்டா கின்றன.

### தாது மலங்கள்.

(20-21) 1. நாக்கு, கண், கன்னம் இவைகளிலிருந்து வடியும் நீர் (ரஸம் ரத்தமாக மாறும்போது உண்டாகும் கழிவுப் பொருள்).

2. ரஞ்சக பித்தம் (ரத்தத்திற்கு வர்ணத்தைக் கொடுக்கும் பித்தத்தின் ஓர் பகுதி; ரத்தம் மாமிசமாக மாறும்போது உண்டாவது).

3. காதுக்குரும்பை, நாக்கு, பல், அக்குள், மர்மஸ்தானம் முதலியவைகளில் உண்டாகும் அழுக்கு (மாமிஸம் மேதஸ்ஸாக மாறும்போது உண்டாவது).

4. நகம், (மேதஸ் அஸ்தியாக மாறும்போது).

5. கண் பீளை (அஸ்தி மஜ்ஜையாக மாறும் போது),

जायन्ते सप्तधातूनां मलान्येवमनुक्रमात् ॥ २१ ॥

॥ अथोपधातवः ॥

स्तन्यं रजश्च नारीणां काले भवति गच्छति ।

शुद्धमांसभवः स्नेहो यस्तु संकीर्त्यते वसा ॥ २२ ॥

स्वेदो दन्तास्तथा केशास्तथैवौजश्च सप्तमः ।

ओजस्सर्वशरीरस्थं स्निग्धं शीतं स्थिरं सितम् ॥

सोमात्मकं शरीरस्य बलपुष्टिकरं मतम् ।

---

6. முகத்தில் பளபளப்பு அல்லது எண்ணெய்ப் பசை (மஜ்ஜை சுக்லமாக மாறும்போது).

உபதாதுக்கள்.

(22-24) 1. ஸ்தன்யம் (தாய்ப்பால்)

2. ருது

3. 'வஸை' அல்லது சுத்தமான மாம்சத்திலிருந்து உண்டாகும் பசையுள்ள நீர்.

4. வியர்வை

5. பல்

6. கேசம் (தலைமயிர்)

7. ஓஜஸ்; இது எல்லா தாதுக்களின் ஸாரம். எண்ணெய்ப் பசையுடனும், சீதமாகவும், ஓடும் தன்மை இல்லாததாகவும், வெளிறின நிறமுடையதாகவும் இருப்பது. இது சந்திராம்சமாக உண்டானது. உடம்புக்கு

इति धातुभवा ज्ञेया एते सप्तोपधातवः ॥ २४ ॥

॥ अथ सप्तत्वचः ॥

ज्ञेयावभासिनी पूर्वा वर्णानामवभासनात् ।
व्रीह्यष्टादशभागो यस्तत्प्रमाणा हि सा मता ॥ २५ ॥
द्वितीया रोहिणी नाम व्रीहिषोडशभागिका ।
श्वेता तृतीया विज्ञेया तद्‍द्वादशसमा मता ॥ २६ ॥

---

பலத்தையும் புஷ்டியையும் கொடுக்கக் கூடியது.

இந்த ஏழு உபதாதுக்களும் ஏழு தாதுக்களினின்றும் உண்டாகின்றன.

## ஏழு தோல்கள்.

(25-28) 1. தோல்கள் ஏழு. எல்லாவற்றிற்கும் மேலே இருப்பதற்கு 'அவபாஸிநீ' என்று பெயர். இது சரீரத்தின் நிறத்தை நன்கு காட்டுவதனால் இதற்கு இந்தப் பெயர் ஏற்பட்டது. இது நெல்லில் பதினெட்டில் ஒரு பங்கு கனமுடையது.

2. இரண்டாவது தோலுக்கு 'ரோஹிதா' (சிவப்பு) என்று பெயர். இது நெல்லில் பதினாறில் ஒரு பங்கு கனமுடையது.

3. மூன்றாவது தோலுக்கு 'ச்வேதா' (வெள்ளை) என்று பெயர். இது நெல்லில்

**ताम्रा चतुर्थी सा व्रीहेरष्टभागप्रमाणिका ।**
**पंचमी वेदिनी नाम व्रीहिपंचमभागिका ॥ २७ ॥**
**रोहिणी नाम षष्ठी स्यादर्धव्रीहिसमा मता ।**
**व्रीहिद्वयप्रमाणं च ज्ञेया मांसधरा परा ॥ २८ ॥**

॥ त्वग्दोषाः ॥

**प्रथमा सिध्मनः स्थानं द्वितीयालसजन्मभूः ।**

---

*பன்னிரண்டில் ஒரு பங்கு கனமுடையது.*

4. *நான்காவது தோலுக்கு 'தாம்ரா' (தாமிர நிறமுடையது) என்று பெயர். இது நெல்லில் எட்டிலொரு பங்கு கனமுடையது.*

5. *ஐந்தாவது தோலுக்கு 'வேதிநீ' என்று பெயர். இது நெல்லில் ஐந்திலொரு பங்கு கனமுடையது.*

6. *ஆறாவது தோலுக்கு 'ரோஹிணீ' என்று பெயர். இது நெல்லில் இரண்டில் ஒரு பங்கு கனமுடையது.*

7. *ஏழாவது தோலுக்கு 'மாம்ஸதரா' என்று பெயர். இது இரண்டு நெல் கனமுடையது.*

ஏழு தோல்களில் உண்டாகக்கூடிய ரோகங்கள்.

(29 - 30) *முதல் தோலான அவபாஸிகியில் ஸித்மா (தேமல் போன்றது.)*

चर्मस्थानं तृतीया स्यात् किलासस्यापरा स्थितिः ॥

पंचमी कुष्ठसंस्थानं गण्डमालास्थितिः परा ।

स्थूला त्वक् सप्तमी प्रोक्ता विद्रध्यादेः स्थितिश्च सा ॥

॥ अथ दोषाः ॥

वातपित्तकफा दोषा धातवश्च मलाः स्मृताः ।

---

இரண்டாவது தோலான ரோஹிதையில் அலஸகம் (அரிப்போடு கூடிய கட்டிகளின் சேர்க்கை)

மூன்ருவது தோலான ச்வேதையில் சர்மதளம் (வலியும் தினவும் கூடிய கொப்புளங்கள்)

நான்காவது தோலான தாம்ரையில் கிலாஸம் (தோலைப்பற்றிய வெண்குஷ்டம்)

ஐந்தாவது தோலான வேதினியில் குஷ்டம்

ஆருவது தோலான ரோகிணியில் கண்டமாலை.

ஏழாவதான கனத்த தோலில் கட்டி முதலியவைகள் உண்டாகும்.

## தோஷங்கள்.

(31-32) வாதம், பித்தம், கபம் இம்மூன்றுக்கும் தோஷங்களென்றும், தாதுக்கள் என்றும், மலங்கள்

तत्रापि पंचधा ख्याताः प्रत्येकं देहधारणात् ॥ ३१ ॥
पवनस्तेषु बलवान् विभागकरणान्मतः ।
रजोगुणमयस्सूक्ष्मः शीतो रूक्षो लघुश्चलः ॥ ३२ ॥

---

என்றும் பெயர்[1]. இவை ஒவ்வொன்றும் ஐந்து வகைப் படும். இவற்றுள் வாதம் அதிக பலமுள்ளது. அதுவே தேகத்தைத் தாங்கி நிற்கிறது. மேலும் உடம்பிலுள்ள பல அம்சங்களைப் பலவாருகப் பிரிப்பதுவும் அதுவே. அது ரஜோகுணம் உடையது.[2] கண்ணுக்குத் தெரியாதது. சீதமாகவும், வறட்சியுடையதாகவும் உள்ளது. இலேசானது. சதா சஞ்சரித்துக்கொண்டிருப்பது.

---

1 வாத, பித்த, கபங்கள் அளவு மீறுவதனுல் உடம்பைத் தூஷிப்பித்து (கெடுத்து) ரோகங்களை உண்டாக்குவதனுல் 'தோஷங்கள்' என்றும், ஏழு தாதுக்களைப்போல் இவைகளும் உடம்பைக் காப்பாற்றுவதால் 'தாதுக்கள்' என்றும், அன்னம் ஜீரணமாகும்போதும் தாதுக்கள் மாறும்போதும் உண்டாவதால் 'மலங்கள்' என்றும் கூறப்படுகின்றன.

2. உலகத்திலுள்ள பொருள்களை மூன்றுவகைக் குணங்களுள்ளவையாக நமது நூல்களில் பிரித்திருக்கிருர்கள். ஸத்வம், ரஜஸ், தமஸ், என்பவை இம்மூன்று குணங்களாகும். ஸத்வம் என்பது தெளிவு, வெண்மை நிறம், ப்ரகாசம் , சாந்தி இவைகளைக் குறிக்கும். ரஜோகுணம் என்பது சுறுசுறுப்பு, ஆசை, கோபம் முதலிய உணர்ச்சிகள், சிவப்புநிறம் இவைகளைக் குறிக்கும். தமோர்குணம் அறியாமை, மயக்கம், தூக்கம், கெட்ட புத்தி, கருமை இவைகளைக் குறிக்கும். இம்மூன்று குணங்களும் ஸமமாயிருக்கும்பொழுது பலவகையான ப்ரபஞ்சம் உற்பத்தியாகவில்லை. இவைகள் ஒன்ருேடொன்று ஏற்றத்

॥ वातभेदाः ॥

मलाशये चरेत्कोष्ठे वह्निस्थाने तथा हृदि ।
कण्ठे सर्वांगदेशेषु वायुः पंचप्रकारकः ॥ ३३ ॥
अपानश्च समानश्च प्राणोदानौ तथैव च ।
व्यानश्चेति समीरस्य नामान्युक्तान्यनुक्रमात् ॥ ३४ ॥

---

வாதத்தின் ஐந்து வகையும் வருமாறு :

(33-34) ஹ்ருதயத்தில் சஞ்சரிப்பதற்கு 'ப்ராணன்' என்றும், மலாசயத்தில் சஞ்சரிப்பதற்கு 'அபானன்' என்றும், ஸர்வ அங்கங்களிலும் சஞ்சரிப்பதற்கு 'வியானன்' என்றும், ஆகாரம் பக்குவமடையும் இடங்களாகிய ஆமாசயம், பக்குவாசயம், அக்கினி ஆசயம்[3] இவைகளில் சஞ்சரிப்பதற்கு 'ஸமானன்' என்றும், கண்டத்தில் சஞ்சரிப்பதற்கு 'உதானன்' என்றும் பெயர்.

---

தாழ்ச்சியாக ஏற்படும்போது பலவகை ப்ரபஞ்சம் உற்பத்தியாகிறது. எனினும் எல்லா வஸ்துக்களிடத்திலும் இம்மூன்று குணங்களும் இருந்தபோதிலும் மிகுதியாக இருக்கும் குணத்தையே வஸ்துவின் குணமாகச் சொல்லுவது வழக்கம். இம்மூன்று குணங்களும் சேர்ந்த சக்தியே கடவுளின் மாயா சக்தி.

3. 'ஆமாசயம்' என்னும் வயிற்றில் நடக்கும் முதல் ஜீரணப் பகுதிக்கும், 'பக்குவாசயம்' என்னும் சிறுகுடலில் நடக்கும் ஜீரணத்திற்கும் உதவியாக இவ்விரண்டிற்கும் இடையில் 'க்ரஹணி' என்னும் வளைந்த குழாயில் அக்கினி ஆசயம் இருந்து வருகிறது.

## ॥ पित्तभेदाः ॥

पित्तमुष्णं द्रवं पीतनीलं सत्त्वगुणोत्तरम् ।
कटुतिक्तरसं ज्ञेयं विदग्धं चाम्लतां व्रजेत् ॥ ३५ ॥

अग्न्याशये भवेत्पित्तमग्निरूपं च पाचकम् ।
रुचिकान्तिकरं ज्ञेयं त्वक्स्थितं भ्राजकं मतम् ॥ ३६ ॥

हृद्यं यकृदि यत्पित्तं तद्रसं शोणितं नयेत् ।

---

## பித்தம்.

(35-38) உஷ்ணமாகவும், நீராக ஓடும் தன்மையுள்ளதாயும், மஞ்சள் கலந்த நீல நிறமாகவும், ஸத்வகுணம் மிகுதியுள்ளதாயும், உறைப்பு, கைப்பு இச்சுவைகளுள்ளதாயும், முறை தப்பிப் பக்குவமடைந்த பித்தம் புளிப்பாகவும் இருக்கும். இதன் ஐந்து வகைகள் வருமாறு :-

(1) அக்கினி ஆசயத்தில் அதாவது க்ரஹணியில் பித்தமானது அக்னி ரூபமாக இருக்கும். இதற்குப் 'பாசக பித்தம்' அல்லது 'ஆகாரத்தைப் பக்குவம் செய்யும் பித்தம்' என்று பெயர்.

(2) தோலில் இருக்கும் பித்தம் அழகு, காந்தி, மேனி இவைகளுக்குக் காரணமாகும். இதற்குப் 'ப்ராஜக' பித்தம் என்று பெயர். அதாவது 'காந்தியைக் கொடுக்கும் பித்தம்' என்று பெயர்.

(3) கல்லீரலில் இருந்து அன்னரஸத்திற்கு வர்ண

यत्पित्तं नेत्रयुगळे रूपदर्शनकारितम् ॥ ३७ ॥
यत्पित्तं हृदये तिष्ठन्मेधाप्रज्ञाकरं च तत् ।
पाचकं भ्राजकं चैव रंजकं लोचकं तथा ॥ ३८ ॥
साधकं चेति पंचैव पित्तनामान्यनुक्रमात् ।

॥ कफभेदाः ॥

कफः स्निग्धो गुरुः श्वेतः पिच्छिलः शीतळस्तथा ॥
तमोगुणाधिकः स्वादुर्विदग्धो लवणो भवेत् ।

---

முண்டாக்கி ரத்தமாக மாற்றும் பித்தத்திற்கு 'ரஞ்சக பித்தம்' அல்லது 'வர்ணம் கொடுக்கும் பித்தம்' என்று பெயர்.

(4) கண்களில் இருந்துகொண்டு உருவத்தைப் பார்க்கும் சக்தியை அளிக்கும் பித்தத்திற்கு 'லோசக பித்தம்' அல்லது 'பார்வையைக் கொடுக்கும் பித்தம்' என்று பெயர்.

(5) ஹிருதயத்தில் இருந்துகொண்டு ஞாபகசக்தி, புத்தி இவைகளை உண்டாக்கும் பித்தத்திற்கு 'ஸாதக பித்தம்' அல்லது 'அறிவுக்கு உதவும் பித்தம்' என்று பெயர்.

## கபம்.

(39-41) நைப்புள்ளதாகவும், கனமுள்ளதாகவும், வெண்மை நிறமுள்ளதாகவும், பசையுள்ளதாகவும், குளிர்ச்சியுள்ளதாகவும், தமோகுணமுடையதாகவும், சாதாரண

कफश्चामाशये मूर्ध्नि कण्ठे हृदि च सन्धिषु ॥ ४० ॥

तिष्ठन्करोति देहस्य स्थैर्यं सर्वाङ्गपाटवम् ।

क्लेदनः स्नेहनश्चैव रसनश्चावलम्बनः ॥ ४१ ॥

श्लेषकश्चेति नामानि कफस्योक्तान्यनुक्रमात् ।

---

மாக இனிப்புச் சுவையுள்ளதாகவும், சரியான பக்குவமடையாவிட்டால் உப்புச் சுவையுள்ளதாகவும் இருக்கும். அதன் இருப்பிடம் :-

(1) ஆமாசயம் என்னும் வயிறு. (2) தலை. (3) கழுத்து. (4) ஹிருதயம். (5) பூட்டுக்கள்.

இந்த ஐந்து இடங்களிலும் இருந்துகொண்டு தேகத்திற்கு உறுதியையும், எல்லா உறுப்புக்களுக்கும் திறமையையும் அளிக்கிறது. இந்த ஐந்து இடங்களிலும் உள்ள கபமானது ஐந்துவித வேலைகளைச் செய்கிறது.

(1) வயிற்றிலுள்ள கபம் செய்யும் வேலைக்கு 'கிலேதனம்' என்று பெயர். அது ஆகாரத்தை நெகிழச் செய்கிறது.

(2) தலையிலுள்ள கபம் செய்யும் வேலைக்கு 'ஸ்நேஹனம்' என்று பெயர். அது நைப்பை உண்டாக்குகிறது.

(3) கழுத்திலுள்ள கபம் செய்யும் வேலைக்கு 'ரஸனம்' என்று பெயர். அது ருசியை உண்டாக்குகிறது.

॥ स्नाय्वादयः ॥

**स्नायवो बन्धनं प्रोक्ता देहे मांसास्थिमेदसाम् ॥**

**आहारस्य तथा सारः कायेऽस्थीनि बुधा जगुः ।**
**मर्माणि जीवाधाराणि प्रायेण मुनयो विदुः ॥ ४३ ॥**

---

(4) ஹ்ருதயத்திலுள்ள கபம் செய்யும் வேலைக்கு 'அவலம்பனம்' என்று பெயர். இது ஹ்ருதயத்திற்கும் மற்ற பாகங்களில் உள்ள கபத்திற்கும் ஆதரவாக அமைந்தது.

(5) பூட்டுக்களிலுள்ள கபம் செய்யும் வேலைக்கு 'சிலேஷகம்' என்று பெயர். பூட்டுக்களின் அசைவுக் கேற்ற வழவழப்பை உண்டாக்குகிறது.

## ஸ்நாயு முதலியவைகளின் நிரூபணம்.

### ஸ்நாயுக்கள் அல்லது தசைக் கயிறுகள்.

(42-53) உடம்பிலுள்ள மாமிசம், எலும்பு, கொழுப்பு இவைகளை ஒன்றோடொன்று இணைத்துக் கட்டும் தசைக் கயிறுகளுக்கு 'ஸ்நாயுக்கள்' என்று பெயர்.

### அஸ்திகள்.

உடம்பிலுள்ள எலும்புகள் ஆகாரத்தின் ஸாரமான பகுதியிலிருந்து உண்டாக்கப்படுகின்றன. இவைகளுக்கு 'அஸ்திகள்' என்று பெயர்.

सन्धिबन्धनकारिण्यो दोषधातुवहाश्शिराः ।

---

## மர்மஸ்தானங்கள்.

*ப்ராணனுடைய நிலைகளாக உடம்பில் பல இடங்களில் ஸ்தானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு 'மர்மஸ்தானங்கள்' என்று பெயர்.*[1]

## ஸிரைகள் அல்லது ரத்தக் குழாய்கள்.

*இவைகளின் வழியாக வாத, பித்த, கபங்களும் ரத்தம் முதலிய தாதுக்களும் செல்லுகின்றன. இவை*

---

1. மர்மஸ்தானங்கள் மொத்தம் 107 என்றும் இவைகளுள் மாமிசத்தில் 11 ஸ்தானங்களும் ஸிரைகளில் 41 ஸ்தானங்களும், ஸ்நாயுக்களில் 27 ஸ்தானங்களும், அஸ்திகளில் 8 ஸ்தானங்களும், பூட்டுக்களில் 20 ஸ்தானங்களும் அமைந்திருக்கின்றன என்றும், அவயவவாரியாகப் பார்த்தால் கால் கைகளில் 44 மர்மஸ்தானங்களும், வயிற்றிலும் மார்பிலுமாக 12 ஸ்தானங்களும், முதுகில் 14 ஸ்தானங்களும், கழுத்துக்கு மேல் 37 ஸ்தானங்களும் அமைந்திருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மர்மஸ்தானங்களுக்குக் கெடுதி நேரிட்டால் உயர்ந்தது 7 நாட்களிலோ, அல்லது 15 நாள் முதல் ஒரு மாதத்திற்குள்ளோ, மர்மத்தில் தைத்திருக்கும் ஆயுதம் முதலியவைகளை எடுத்தபிறகோ, பிராணனுக்கு ஆபத்து ஏற்படும்; அங்கம் அல்லது புலன்கள் கெடும், அல்லது தாங்க முடியாத வலி ஏற்படும். இதன் முழு விவரம் 'சுச்ருத ஸம்ஹிதை' சாரீர ஸ்தானம் அத்தியாயம் 4 ல் காண்க.

ஒவ்வொரு சஸ்திர சிகிச்சை வைத்தியரும் இதன் விவரத்தை அறிந்தால் சஸ்திர சிகிச்சை செய்தபிறகு காரணங்கூற முடியாமல் ஏற்படும் மரணங்கள் நிகழாமல் தடுக்கப்படலாம்.

धमन्यो रसवाहिन्यो धमन्ति पवनं तनौ ॥ ४४ ॥
मांसपेश्यो(अस्थिस्नायूनां) अवष्टंभाय देहिनाम् ।
प्रसारणाकुंचनयोरंगानां कन्धरा मताः ॥ ४५ ॥
नासानयनकर्णानां द्वे द्वे रन्ध्रे प्रकीर्तिते ।

---

கள் பூட்டுக்களைத் தளராமல் இறுக்கிக் கட்டவும் உபயோகப்படுகின்றன.

## தமனிகள்.

ரஸம் முதலிய தாதுக்களை அவற்றின் மார்க்கங்களில் செல்லும்படிச் செய்வதோடு உடம்பு முழுவதும் மூச்சுக்காற்றைப் பரவும்படிச் செய்யும் நாடிகளுக்குத் 'தமனிகள்' என்று பெயர்.

## மாம்ஸ பேசிகள் அல்லது தசைக் கற்றைகள்.

உடம்பிலுள்ள எலும்பு முதலியவற்றைத் தாங்கி நிற்பதும் பல உறுப்புக்களைக் கொண்டு நீட்டி மடக்கி வேலைகள் செய்ய ஆதாரமாக இருப்பதுமான தசைகளுக்கு 'மாம்ஸ பேசிகள்' என்று பெயர்.

நீண்டு திரண்ட தசைக் கற்றைகளுக்குக் 'கண்டரங்கள்' என்று பெயர்.

## துவாரங்கள்.

உடம்பிலுள்ள துவாரங்கள் அடியிற்கண்டபடி அமைந்திருக்கின்றன :—

மூக்கு துவாரங்கள் —2

मेढ्रनापानवक्त्राणामेकैकं रंध्रमुच्यते ॥ ४६ ॥
दशमं मस्तके चोक्तं रंध्राणीति नृणां दश ।
स्त्रीणां त्रीण्यधिकानि स्युः स्तनयोर्गर्भवर्त्मनः ॥ ४७ ॥
सूक्ष्मच्छिद्राणि चान्यानि मतानि त्वचि जन्मिनाम् ।
तद्वामे पुप्फसं प्लीहा दक्षिणांगे यकृन्मतम् ॥ ४८ ॥
उदानवायोराधारः पुप्फसं प्रोच्यते बुधैः ।

---

| | |
|---|---|
| கண் துவாரங்கள் | —2 |
| காது துவாரங்கள் | —2 |
| மல மூத்திர துவாரங்கள் | —2 |
| வாய் | —1 |
| (உச்சந் தலையில் யோகிகளால் கண்டறியப்பட்ட) | |
| ப்ரம்மரந்திரம் என்ற துவாரம் | —1 |

ஆக பத்து. ஸ்திரீகளுக்குப் பத்தோடு ஏற்கனவே சொல்லியபடி அதிகமாக மூன்று துவாரங்கள் உள்ளன. இவற்றைத் தவிரத் தோலில் கண்ணுக்குத் தெரியாத அநேக துவாரங்கள் இருக்கின்றன.

## உடம்பின் உட்புறமுள்ள உறுப்புகள்.

இடது பாகத்தில் புப்புசம் என்னும் நுரையீரலும் ப்ளீஹா என்னும் மண்ணீரலும், வலது பாகத்தில் யகிருத் என்னும் கல்லீரலும் அமைந்திருக்கின்றன.

இவைகளுள் புப்புசம் என்னும் நுரையீரல் கழுத்தில் சஞ்சாரம் செய்யும் உதானவாயுவுக்கு ஆதாரமாக அமைந்திருக்கிறது.

रक्तवाहिशिरामूलं प्लीहाख्यातं महर्षिभिः ॥ ४९ ॥

यकृद्रञ्जकपित्तस्य स्थानं रक्तस्य संश्रयम् ।
जलवाहिशिरामूलं तृष्णाच्छादनकं तिलम् ॥ ५० ॥

वृक्का पुष्टिकरा प्रोक्ता जठरस्थस्य मेदसः ।
बीजवाहिसिराधारौ वृषणौ पुरुषावहौ ॥ ५१ ॥

गर्भाधानकरं लिंगमयनं बीजमूत्रयोः ।
हृदयं चेतनास्थानं ओजसश्चाश्रयं मतम् ॥ ५२ ॥

---

ப்ளீஹா என்னும் மண்ணீரல் ரத்தத்தைக் கொண்டு செல்லும் நாடிகளுக்கு மூலஸ்தானம்.

யகிருத் என்னும் கல்லீரல் ரஞ்சக பித்தத்திற்கு இருப்பிடம். ரத்தத்தின் உறைவிடம்.

இவற்றைத் தவிர நீரை எடுத்துச்செல்லும் குழாய் களுக்கு ஆதார ஸ்தானமாகவும், நீர் வேட்கையைத் தணிப்பதாகவும் அமைந்திருக்கும் அவயவத்திற்குத் 'திலம்' என்று பெயர்.

வயிற்றிலுள்ள கொழுப்புக்கு புஷ்டியைத் தரும் அவயவத்திற்கு 'வ்ருக்கா' என்று பெயர்.

சுக்கிலம் செல்லும் குழாய்க்கு ஆதாரமாய் இருப் பவை விரைகள். இவை ஆண்மைக்கு ஆதாரமானவை.

சுக்கிலத்திற்கும் மூத்திரத்திற்கும் வழியாக ஏற் பட்டிருப்பது லிங்கம். கர்ப்பாதானத்திற்குக் காரணமாக உள்ளது.

शिरा धमन्यो नाभिस्थाः सर्वं व्याप्य स्थितास्तनूम् ।
युञ्जन्ति चानिशं वायोस्संयोगात्सर्वधातुभिः ॥ ५२ ॥

इति नाडीविज्ञानीये नवमः पटलः ॥

---

ஆத்மாவும் மனதும் கூடிய சேதனனுக்கு இருப்பிடமும் தாதுக்களின் ஸாரமாகிய ஓஜஸ் தங்கும் இடமும் ஹ்ருதயமாகும்.

நாபி என்னும் தொப்புளில் இருந்து உடம்பு முழுவதும் பரவியிருக்கும் தமனிகளும், ஸிரைகளும் வாயுவின் சேர்க்கையினால் எல்லா தாதுக்களோடும் சேருகின்றன.

ஒன்பதாவது படலம் முற்றிற்று.

## ॥ दशमः पटलः ॥

॥ अथ भूतोत्पत्तिः ॥

मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम् ।
सा च माया त्वनिर्वेद्या सत्त्वादित्रिगुणात्मिका ॥
सत्त्वादित्रिगुणोद्रेकान्माया संजायते ततः ।
शब्दादिपञ्चतन्मात्रपञ्चकं तु ततो भवेत् ॥ ५५ ॥
एकैकवृद्धिक्रमशः शब्दाद्यैरन्वितं गुणैः ।

---

## பத்தாவது படலம்.

### பஞ்சபூத உற்பத்தி.

(54-58) இப்பிரபஞ்சத்திற்குக் காரணமாகவுள்ளது மாயை என்னும் சக்தி. அந்த சக்தியையுடையவர் எல்லாம் வல்ல கடவுள். அந்த மாயை ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களின் தன்மையை உடையதாக இருந்தபோதிலும் அதன் ஸ்வரூபத்தை நிச்சயமாக அறிய இயலாது. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் வெளிக்கிளம்புவதனல் மாயை உற்பத்தியாகிறது. அந்த மாயையிலிருந்து சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம் என்ற குணங்களை ஒன்றன்பின் ஒன்ருக அதிகமாக அடைந்து இனிச் சொல்லப்படும் ஐந்து மகா பூதங்களுக்குக் காரணமான சப்த தன்

एतानि सूक्ष्मभूतानीत्युच्यन्ते शास्त्रचिन्तकैः ॥ ५६ ॥
अक्षरात्खं ततो वायुर्वायोरग्निस्ततो जलम् ।
जलाद्भूमिः समुत्पन्ना ततोऽन्नं समजायत ॥ ५७ ॥
अन्नाद्भूतानि जायन्ते वर्धन्तेऽन्नेन तानि च ।
पुनः परिमिते काले लीयन्ते स्वस्वयोनिषु ॥ ५८ ॥

॥ भूतक्षयजा दोषाः ॥

पृथिवीमण्डले क्षीणे वलिरायाति देहिनाम् ।

---

மாத்ரை, ஸ்பர்ச தன்மாத்ரை, ரூப தன் மாத்ரை, ரஸ தன்மாத்ரை, கந்த தன்மாத்ரை என்ற ஐந்தும் உண்டாகின்றன. இவைகளையே 'ஸூக்ஷ்ம பூதங்கள்' என்று சாஸ்திரமறிந்தவர்கள் சொல்கிறார்கள். அழிவற்ற பரமாத்மாவிடமிருந்து ஆகாசமும், அதிலிருந்து வாயுவும், அதிலிருந்து தேயுவும், தேயு என்னும் அக்கினியிலிருந்து அப்பு என்னும் ஜலமும், அப்புவிலிருந்து ப்ருதிவி என்னும் பூமியும் உண்டாகின்றன. பூமியிலிருந்து அன்னம் உண்டாகிறது. அன்னத்திலிருந்து ஜீவராசிகள் உண்டாகி அந்த அன்னத்திலேயே வளர்ந்து குறுகிய காலத்தில் மறுபடியும் அதனதன் காரண பூதங்களில் லயித்து விடுகின்றன.

பூதங்கள் குறைவதால் ஏற்படும்
குணகுணங்கள்.

(59-60) சரீரத்திலுள்ள ப்ருத்வீ மண்டலம்

तद्वदप्सु तृणानीव केशाः स्युः पाण्डराः क्रमात् ॥
तेजोहानौ क्षुधाकान्ती नश्येतां मारुतश्लथे ।
वेपथुश्च भवेन्नित्यमाकाशेनैव जीवति ।
इत्थं भूतक्षयान्मृत्युर्जीवनं भूतधारणात् ॥ ६० ॥

॥ अथ पंचभूतात्त्रिदोषोत्पत्तिः ॥

आकाशात्पवनाद्वायुः पित्तं वह्नेश्च जायते ।
कफः पृथ्व्याश्च सलिलादिति दोषसमुद्भवः ॥ ६१ ॥

---

*அதாவது உடம்பிலுள்ள ப்ருத்வி அம்சம் குறைந்தால் மனிதர்களுக்கு திரை உண்டாகிறது. அப்பின் அம்சம் குறைந்தால் நாளடைவில் நரை உண்டாகிறது. தேயுவின் அம்சம் அதாவது அக்கினியின் அம்சம் குறைந்தால் பசியும் காந்தியும் குறைகிறது. வாயுவின் அம்சம் குறைந்தால் அடிக்கடி நடுக்கம் உண்டாகும். ஆகாசத்தின் அம்சம் குறைந்தால் மரணம் உண்டாகும். இவ்வாறு பஞ்ச பூதங்கள் குறைவதால் மரணமும், பஞ்ச் பூதங்களின் ஆதாரங்கொண்டு ஜீவித்திருக்கும் தன்மையும் ஏற்படுகிறது.*

## பஞ்ச பூதங்களிலிருந்து வாத, பித்த, கபங்களின் உற்பத்தி.

(61) *ஆகாசம், வாயு இவ்விரண்டிலிருந்தும் வாதமும்,*
*தேயுவிலிருந்து பித்தமும்,*
*ப்ருத்வி, அப்புவிலிருந்து கபமும் உண்டாகின்றன.*

॥ पंचभूतात्सप्तधातूत्पत्तिः ॥

अस्थयः पृथिवीजाता मेदो जलसमुद्भवम् ।
रसरक्ते वह्निभवे चाकाशान्मज्जशुक्लके ।
मांसं वायोस्समुद्भूतं धातवः पंचभूतजाः ॥ ६२ ॥

॥ पंचभूतात् षड्रसोत्पत्तिः ॥

जलाच्च भूमेर्मधुरो रसोऽम्लश्चाग्निभूमिजः ।
जलाच्चाग्नेश्च लवणः स्याद्वायोस्तिक्त एव च ॥ ६३ ॥

---

பஞ்ச பூதங்களிலிருந்து ஏழு தாதுக்களின்
உற்பத்தி.

(62) எலும்பு ப்ருத்வியிலிருந்தும்,
கொழுப்பு அப்புவிலிருந்தும்,
ரஸம், ரத்தம் இரண்டும் தேயுவிலிருந்தும்,
மஜ்ஜை சுக்லம் இவ்விரண்டும் ஆகாசத்திலிருந்தும்,
மாமிசம் வாயுவிலிருந்தும் உண்டாகின்றன.

பஞ்ச பூதங்களிலிருந்து அறுசுவைகளின்
உற்பத்தி.

(63-64) இனிப்புச் சுவை அப்பு, ப்ருத்வி இவ்விரண்டிலிருந்தும்,
புளிப்புச் சுவை தேயு, ப்ருத்வி இவ்விரண்டிலிருந்தும்,
உப்புச் சுவை அப்பு, தேயு இவ்விரண்டிலிருந்தும்,

वायोरग्नेश्च कटुको भूमेर्वायोः कषायकः ।
इत्यनेकप्रकारेण षड्रसाः पंचभूतजाः ॥ ६४ ॥

॥ पंचभूतवर्णाः ॥

पीतः श्वेतश्च रक्तश्च कृष्णो हरित एव च ।
पृथ्व्यादिपंचभूतानां वर्णभेदाः प्रकीर्तिताः ॥ ६५ ॥

---

கைப்புச் சுவை வாயுவிலிருந்தும்,
உறைப்புச் சுவை வாயு, தேயு இவ்விரண்டி
லிருந்தும்,
துவர்ப்புச் சுவை ப்ருத்வி, வாயு இவ்விரண்டி
லிருந்தும்

இவ்விதமாக பஞ்ச பூதங்களின் மாறுபாடுகளால் அவைகளிலிருந்து அறுசுவைகளும் உண்டாகின்றன.

## பஞ்ச பூதங்களின் நிறங்கள்.[1]

(65) ப்ருத்வி ... மஞ்சள் நிறம்.

---

1. பஞ்ச பூதங்களில் ஆகாசத்திற்கு சப்தமும், வாயுவுக்கு சப்தம், ஸ்பரிசம் என்ற குணங்களும், தேயுவுக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம், என்ற குணங்களும், அப்புவுக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் என்ற குணங்களும், ப்ருத்விக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற குணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் தேயு, அப்பு, ப்ருத்வி என்ற மூன்று பூதங்களுக்கு மாத்திரம் வர்ணம் உண்டு. ஆனால் இங்கு ஆகாசத்துக்கும் வாயுவுக்கும் வர்ணம் கூறப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்னவெனில் மேலே சொல்லிய குணங்கள் ஒன்றோடொன்று கலக்காத பஞ்சமஹா பூதங்களுடையவை. இந்த பஞ்ச மஹாபூதங்கள்

अस्थ्यादीनां भूतगुणत्वनिरूपणम् ॥

अस्थिमांसत्वचो नाडी रोम चैवेति पंचकम् ।
पृथ्वीगुणा इति प्रोक्ताः समासाच्छास्त्रवित्तमैः ॥

लाला मूत्रं तथा शुक्लं मेदः शोणितमेव च ।
अपां पंच गुणाः प्रोक्तास्समासाच्छास्त्रवित्तमैः ॥

---

அப்பு ... வெண்மை நிறம்.

தேயு ... சிவப்பு நிறம்.

வாயு ... கருமை நிறம்.

ஆகாசம் ... பச்சை நிறம்.

இவ்விதமாக பஞ்ச பூதங்களுக்கு நிறங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

### அவயவங்களிலுள்ள பஞ்சபூத குணங்கள்.

(66-70) எலும்பு, மாமிசம், தோல், நாடி, மயிர் ஆகிய ஐந்தும் ப்ருத்வியின் குணமுடையவை.

உமிழ் நீர், மூத்திரம், சுக்லம், கொழுப்பு, ரத்தம் இவை ஐந்தும் அப்புவின் குணமுடையவை.

---

செயல்படுவதற்கு முன்பு பஞ்சீகரணம் என்ற முறையில் சேர்ந்து பஞ்ச பூதங்களாகின்றன. அம்முறைப்படி ஒவ்வொரு பூதமும் தன் அம்சம் அரைப் பங்கும் மற்ற 4 பூதங்களில் $\frac{1}{8}$ பாகம் வீதமும் சேர்த்துக்கொள்ளுகிறது. ஆகையால் பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றிலும் தேயுவின் அம்சம் சேர்ந்திருப்பதினால் ஆகாசம், வாயு இவைகளுக்கும் வர்ணம் உண்டு.

क्षुधा निद्रा तथा तृष्णा श्रान्तिरालस्यमेव च ।
अग्नेः पंच गुणाः प्रोक्तास्समासाच्छास्त्रवित्तमैः ॥

धावनं चलनं कम्पः कुंचनं च प्रसारणम् ।
वायोः पंच गुणाः प्रोक्तास्समासाच्छास्त्रवित्तमैः ॥

कामः क्रोधश्च लोभश्च भयं मोहनमेव च ।
आकाशस्य गुणाः प्रोक्तास्समासाच्छास्त्रवित्तमैः ॥

॥ देहभेदानां पंचभूतभावक्रमः ॥

भूचराश्चाम्बुषु चराः खेचराः कामचारिणः ।
एवं चतुर्विधाः प्रोक्ता जंगमाः प्राणिनस्तथा ॥ ७१ ॥

भूचरा भूस्थिताश्चैव जलस्था जलचारिणः ।
तिर्यक्चराः पक्षिजाताः देवताः कामचारिणः ॥ ७२ ॥

---

பசி, தூக்கம், தாகம், களைப்பு, சோம்பல் இவை அக்கினியின் குணமுடையவை.

ஓடுதல், நடத்தல், அசைத்தல், மடக்குதல், நீட்டுதல் முதலியவை வாயுவின் குணத்தினால் ஏற்படுகிறது.

காமம், கோபம், ஆசை, பயம், மயக்கம் இவை ஆகாசத்தின் குணமுடையவை.

## ஜீவராசிகளில் பஞ்ச பூதத்தின் தன்மை.

(71-80) தாவரம் நீங்கிய மற்ற ஜீவராசிகள் அதாவது ஜங்கம ஜீவராசிகள் பூமியில் சஞ்சரிப்பவை, நீர் வாழ்வன, ஆகாயத்தில் பறப்பன, இம்மூன்று இடங்களி

भूमिस्थानां च सर्वेषां स्थूलसूक्ष्मस्वरूपिणाम् ।
गजाश्वनरगोनागकृमिकीटादिदेहिनाम् ॥ ७३ ॥
कलेबरेषु सर्वेषु पृथिव्यंशोऽर्धं ईरितः ।
जलादीनां चतुर्णां तु भागः प्रत्येकमष्टमः ॥ ७४ ॥
एवं शरीरमाख्यातं भूचरप्राणिनां तथा ।
जलांशस्तु जलस्थानामर्ध एव प्रकीर्त्यते ॥ ७५ ॥
क्षोणिवह्निखवायूनामष्टमांशः पृथक्स्मृतः ।

---

ஆம் இஷ்டப்படி சஞ்சரிப்பவை என்று நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பூசரங்கள் பூமியில் வாழும். ஜலசரங்கள் ஜலத்தில் வாழும். பக்ஷிகள் ஆகாயத்தில் சஞ்சரிக்கும். தேவர்கள் நினைத்தபடி சஞ்சரிப்பார்கள்.

பூசரம் முதலிய பிராணிகளின் பஞ்சபூத தேக அமைப்பு பின்வருமாறு :—

பூமியில் வாழும் யானை, குதிரை, மனிதவர்க்கம், பசு, பாம்பு, புழு, பூச்சி முதலிய மிகப்பெரியதும் கண்ணுக்குத் தெரியாத சிறிய உருவமுள்ளதுமான பிராணிகளின் உடம்பில் ப்ருத்வியின் அம்சம் பாதியும் மற்ற நான்கு பூதங்களின் அம்சம் $\frac{1}{8}$ பங்கு வீதமும் சேர்ந்திருக்கின்றன.

நீரில் வாழும் பிராணிகளின் உடம்பில் அப்பின் அம்சம் பாதியும், மற்ற நான்கு பூதங்களின் அம்சம்

खेचराणां तथा देहे वायोरर्धांश ईरितः ॥ ७६ ॥

शेषाणामपि भूतानां भागः प्रत्येकमष्टमः ।
कुक्कुटादिषु भेदेषु भूमिवायू समौ स्थितौ ॥ ७७ ॥

अत एव तथाकाशे किंचिद्गमनमिष्यते ।
त्रिदशाः कामचारास्तु तेजोवायुखमूर्तयः ॥ ७८ ॥

तत्रापि गगनाधिक्यं तेजोबहुळता तथा ।
अत एव सुराणां तु द्वे तेजो गमनं हि ते ॥ ७९ ॥

---

$\frac{1}{8}$ பாகம் வீதமும் சேர்ந்திருக்கின்றன.

ஆகாசத்தில் சஞ்சரிக்கும் பிராணிகளின் தேகத்தில் வாயுவின் அம்சம் பாதியும் மற்ற பூதங்களின் அம்சம் $\frac{1}{8}$ பங்கு வீதமும் சேர்ந்திருக்கின்றன. நன்றாகப் பறக்க முடியாத கோழி முதலியவைகளின் உடம்பில் ப்ருத்வியும் வாயுவும் சமபாகமாக அமைந்திருக்கின்றன. அக்காரணம்பற்றியே அவைகள் சிறிதளவே ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றன.

நினைத்தபடி சஞ்சரிக்கும் சக்தியுடைய தேவர்களின் சரீரங்கள் தேயு, வாயு, ஆகாசம் இம்மூன்றின் அம்சங்களால் ஆக்கப்பட்டவை. அதிலும் ஆகாசம், தேயு இவைகளின் அம்சம் அதிகமாக இருக்கிறது. அதனாலேயே தேவர்களுக்கு தேஜஸ், அபார வேகமாகச் செல்லும் சக்தி என்ற இரண்டு குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன மூவகைப் பண்பினாலேயே

ओजस्विनस्सिद्धिमन्तो लघुसूक्ष्मशरीरिणः ।
एवं प्रकटितं सम्यग्देहिनां देहरूपणम् ॥ ८० ॥

॥ पंचभूतानां कालनिर्णयः ॥

ग्रीष्मर्तुर्वातकालः स्याद्वह्नेर्वर्षाश्शरत्तथा ।
अपां कालस्तु हेमन्तो वियतः शिशिरः स्मृतः ॥
पृथिव्यास्तु वसन्तः स्यादिति कालस्य निर्णयः ॥

इति नाडीविज्ञानीये दशमः पटलः ॥

---

அவர்கள் அதிக பலமுள்ளவர்களாகவும், நினைத்த காரியத்தை முடிக்கும் திறனுடையவர்களாகவும், இலேசானதும் கண்ணுக்குத் தெரியாததுமான சரீரத்தை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்விதமாக எல்லா ஜீவன்களுடைய உடம்பின் அமைப்பும் தெளிவாகக் கூறப்பட்டது.

### பஞ்சபூதங்களுக்கு உரிய காலங்கள்.

வாயுவிற்குரிய காலம் முதுவேனில்
தேயுவிற்குரிய காலம் கார்காலமும், கூதிர்ப்பருவமும்,
அப்பிற்கு முன்பனிக்காலம்
ஆகாசத்திற்குரிய காலம் பின்பனி
ப்ருத்விக்குரிய காலம் இளவேனில்

பத்தாவது படலம் முற்றிற்று.

## ॥ एकादशः पटलः ॥

अथ रोगसंख्या निरूप्यते—

रोगाणां गणना पूर्वं मुनिभिर्या प्रकीर्तिता ।
मयाऽत्र प्रोच्यते सैव तद्भेदा बहवो मताः ॥ ८३ ॥

१. ज्वराः — 16

ज्वराः षोडश च प्रोक्ताः समासाद्भिषगुत्तमैः ॥
पृथग्दोषैस्त्रिधा द्वन्द्वभेदेन त्रिविधः स्मृतः ॥ ८४ ॥
एकश्च सन्निपातेन पंचशो विषमज्वराः ।

---

## பதினொன்றாவது படலம்.

## வியாதிகளின் பலவகைகள்.

(83) பழைய நூல்களில் மஹரிஷிகளால் சொல்லப் பட்டபடி வியாதிகளின் வகைகள் கூறப்படுகின்றன :—

1. ஜ்வரம் :- 16 வகை

| | |
|---|---|
| வாதம், பித்தம், கபம் ஆகிய தோஷங்கள் தனித்து ப்ரகோபம் அடைவதால் | 3 |
| இரண்டு தோஷங்கள் சேர்ந்து ப்ரகோபம் அடைவதால் | 3 |
| மூன்று தோஷங்களும் சேர்ந்து ப்ரகோபம் அடைவதால் | 1 |

आगन्तुकश्चतुर्धा स्यादिति षोडश हि ज्वराः ॥ ८५ ॥

२. ग्रहणी — 5

ग्रहणी पंचधा प्रोक्ता भिषग्भिः शास्त्रचिन्तकैः ।
पृथग्दोषैस्सन्निपातात्तथाऽऽमेन च पंचमी ॥ ८६ ॥

३. अजीर्णम् — 3

अजीर्णं त्रिविधं प्रोक्तं विष्टम्भं वायुना मतम् ।
पित्ताद्विदग्धं विज्ञेयं कफे(न त्वाम)मुच्यते ॥ ८७ ॥

---

விஷம ஜ்வரங்கள் (அடிக்கடி நிலைமை மாறுவது) 5

ஆகந்துக ஜ்வரம் (திடீரென்றுவரும் ஜ்வரம்) 4

2. க்ரஹணி :- 5 வகை

(கிராணிப் போக்கு)

தனித்தனியாக வாத பித்த கபங்களால் 3

மூன்று தோஷங்களும் சேர்ந்ததால் 1

ஆமதோஷம் (பக்குவமாகாத அன்ன ரஸத்தால்) 1

3. அஜீரணம் :-3 வகை.

(1) வாயுவினால் ஏற்படுவது. இதற்கு விஷ்டம்பம் (மலபந்தம்) என்று பெயர்.

(2) பித்தத்தால் ஏற்படுவது. இதற்கு விதக்தம் (புளித்துப்போதல்) என்று பெயர்.

४. विषूची — 3

विषूची त्रिविधा प्रोक्ता दोषैस्सा स्यात्पृथक् पृथक् ।

५. अर्शः — 6

अर्शांसि षड्विधान्याहुर्वातपित्तकफास्रतः ॥ ८८ ॥
सन्निपाताच्च संसर्गात्तेषां भेदो द्विधा मतः ।
सहजोत्तरजन्मभ्यां तथा शुष्कार्द्रभेदतः ॥ ८९ ॥

---

(3) கபத்தால் ஏற்படுவது. இதற்கு ஆமம் (பக்குவமடையாதது) என்று பெயர்.

4 விஷூசி (பேதி) :-3 விதம்

தனித்தனியே வாத பித்த கபங்களால் 3

5 அர்சஸ் அல்லது மூலம் :-6 வகை.

வாதம், பித்தம், கபம், ரத்தம் இவைகளால் தனித்தனியே 4

ஸன்னிபாதம் அல்லது இவைகள் ஒன்றுசேர்ந்து ஏற்படும் வகை. 1

இவைகளின் கலப்பினல் ஏற்படுவது 1

இவை ஒவ்வொன்றும் வேறு வியாதி சம்பந்தமில்லாமல் உடம்பின் தோஷங்களால் உண்டாவது ஒருவகை. இதற்கு 'ஸஹஜம்' என்று பெயர். வேறு வியாதிகளின் சம்பந்தத்தினல் உண்டாவது மற்ருெரு வகை. இதற்கு 'உத்தர ஜன்மா' என்று பெயர். இவ்விரண்

६. पाण्डुः — 5

७-९. कामिलादिभेदाः — 3

पाण्डुरोगास्तु पंच स्युर्वातपित्तकफैस्त्रिधा ।
त्रिदोषैर्मृत्तिकाभ्यश्च तथैका कामिला स्मृता ॥ ९० ॥
स्यात्कुंभकामिला चैका तथैकं च हलीमकम् ।

१०. रक्तपित्तम् — 3

रक्तपित्तं त्रिधा प्रोक्तमूर्ध्वगं कफसंगतं ॥ ९१ ॥

---

டுள் ஒவ்வொன்றும் 'சுஷ்கம்' (காய்ந்தது), 'ஆர்த்ரம்' (நனைந்தது) என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆக மூலரோகம் 24 வகை.

6 பாண்டு ரோகம் :-5 வகை.

(ரத்தத்தின் சிவப்பு குறைந்து உடம்பு வெளிறிப் போதல்)

| | |
|---|---|
| தனித் தனியே வாத பித்த கபங்களால் | 3 |
| மூன்று தோஷங்களும் சேர்ந்ததனுல் | 1 |
| மண் தின்பதனுல் | 1 |

(7) காமாலை (மஞ்சள் காமாலை) :- ஒரே வகை

(8) கும்பகாமாலை (காமாலை முற்றுவதனுல் ஏற்படுவது) :—ஒரே வகை.

(9) ஹலீமகம் : காமாலை இன்னும் அதிகமாகி உடம்பில் கருப்பு வர்ணமும் அஸாத்தியக்குறிகளும் ஏற்படுவது :-ஒரே வகை.

अधोगं मारुताज्ज्ञेयं तद्द्वयेन द्विमार्गगम् ॥ १२ ॥

११. कासः — 5

कासाः पंच समुद्दिष्टास्ते त्रयस्तु त्रिभिर्मलैः ।
उरःक्षताच्चतुर्थः स्यात्क्षयाद्धेतोश्च पंचमः ॥ १३ ॥

१२. क्षयः — 5

क्षयाः पंचैव विज्ञेयाः त्रिभिर्दोषैस्त्रयश्च ते ।

---

(10) ரத்த பித்தம் : (ரத்தத்தோடு பித்தம் கலப்பதனுல் ரத்தம் வெளிப்படுதல்) :-3 வகை

(1) மேலாக (வாந்தியால்) வெளிவருதல். இது கபம் சேர்ந்து ஏற்படுவது

(2) கீழ்நோக்கி வெளிப்படுதல். இது வாதம் சேர்ந்து ஏற்படுவது

(3) மேலும் கீழுமாக வெளிப்படுவது. இது கபம் வாதம் இரண்டும் சேர்ந்து ஏற்படுவது.

(11) காஸம் (இருமல்) :- 5 வகை

தனித்தனியே வாத பித்த கபங்களால் 3 வகை.

மார்பில் அடிபடுவதால் க்ஷதகாஸம் என்ற வகை 1

க்ஷயத்தினுல் (தாதுக்கள் புஷ்டி குறைவதால்) 1

(12) க்ஷயம் :-5 வகை.

(தாதுக்களின் அளவும் புஷ்டியும் குறைதல்)

தனித்தனியே வாத, பித்த, கபங்களால் 3

चतुर्थस्सन्निपातेन पंचमः स्यादुरःक्षतात् ॥ ९४ ॥

१३. श्वासरोगः — 5

श्वासाश्च पंच विज्ञेयाः क्षुद्रः स्यात्तमकस्तथा ।
ऊर्ध्वश्वासो महाश्वासश्छिन्नश्वासश्च पंचमः ॥ ९५ ॥

१४. हिक्का — 5

कथिताः पंच हिक्काश्च तासु क्षुद्रान्नजा तथा ।
गंभीरा यमळा चैव महती पंचमी स्मृता ॥ ९६ ॥

---

*மூன்று தோஷங்களும் சேர்ந்ததனால்* 1

*மார்பில் சிதைவு ஏற்படுவதனால்* 1

(13) ச்வாஸரோகம் (*மூச்சுத் திணறுதல்*) :- 5 வகை.

(1) *க்ஷுத்ர ச்வாஸம் (களைப்பினால் மேல்மூச்சு)*

(2) *தமக ச்வாஸம் (சத்தத்துடன் ஏற்படும்மூச்சு)*

(3) *ஊர்த்வ ச்வாஸம் (மேல் நோக்கியது)*

(4) *மஹா ச்வாஸம் (பெரிய சத்தத்துடன் மூச்சு விடுவது)*

(5) *சின்ன ச்வாஸம் (விட்டு விட்டு ச்வாஸம் வருவது)*

(14) ஹிக்கா (விக்கல்) :-5 வகை.

(1) *க்ஷுத்ரா (அல்பமானது)*

(2) *அன்னஜா (சாப்பாட்டினால் ஏற்படுவது)*

(3) *கம்பீரா (பெரிய சத்தம் உண்டாவது)*

१५. अरोचकम् — 5

पंचैवारोचका ज्ञेया वातपित्तकफैस्त्रयः ।
सन्निपातान्मनस्तापाच्छर्दयस्सप्तधा मताः ॥ ९७ ॥

१६. छर्दिः — 7

त्रिभिर्दोषैः पृथक् तिस्रः कृमिभिस्सन्निपाततः ।
मक्षिकायास्तथा स्त्रीणां गर्भाधानाच्च जायते ॥ ९८ ॥

१७. स्वरभेदः — 6

स्वरभेदाः षडेव स्युः वातपित्तकफैस्त्रयः ।

---

(4) யமளா (இரட்டையாக வருவது)
(5) மஹதீ (எல்லா மர்ம ஸ்தானங்களையும் வெளியே தள்ளுவது போன்றது)

(15) அரோசகம் (உருசியில்லாமை) :- 5 வகை.

| | |
|---|---|
| தனித்தனியே வாத பித்த கபங்களால் | 3 |
| மூன்று தோஷங்களும் சேர்ந்தது | 1 |
| மனவருத்தத்தால் | 1 |

(16) ச்சர்தி (வாந்தி) :- 7 வகை.

| | |
|---|---|
| தனித்தனியே மூன்று தோஷங்களால் | 3 |
| கிருமிகளால் | 1 |
| மூன்று தோஷங்களும் சேர்ந்து | 1 |
| கொசு முதலியவைகளால் | 1 |

मेदसा सन्निपातेन क्षयात्षष्ठः प्रकीर्तितः ॥ १९९ ॥

१८. मूर्च्छा — 4 १९. भ्रमः — 1

मूर्च्छा चतुर्विधा ज्ञेया वातपित्तकफैस्त्रिधा ।

चतुर्थी सन्निपातेन तथैकश्च भ्रमः स्मृतः ॥ २०० ॥

२०. मदात्ययः — 4 २१. परमदः — 1

मदात्ययश्चतुर्धा स्यात् वातात्पित्तात्कफादपि ।

---

கர்ப்பம் உண்டாவதால் (ஸ்திரீகளுக்கு) 1

(17) ஸ்வரபேதம் (குரலில் கோளாறு) :- 6 வகை.

தனித்தனியே வாத பித்த கபங்களால் 3

மேதஸ் (கொழுப்பு) அதிகப்படுவதால் 1

மூன்று தோஷங்களும் சேர்ந்ததனுல் 1

க்ஷயத்தினுல் (தாதுக்கள் குறைவால்) 1

(18) மூர்ச்சை (ப்ரக்ஞை இழக்கச் செய்யும் மயக்கம்) :- 4 விதம்.

தனித்தனியே வாத பித்த கபங்களால் 3

மூன்று தோஷங்களும் சேர்ந்து 1

(19) பிரமம் (புத்தித் தடுமாறல்) :- ஒரே வகை.

(20) மதாத்யயம் (குடி முதலியவற்ருல் ஏற்படும் மயக்கம்) :-4 வகை.

வாத பித்த கபங்களைத் தனித்தனியே அதிகரிக்கச் செய்வதால் 3

त्रिदोषैरपि विज्ञेयः एकः परमदस्तथा ॥ १ ॥

२२. उन्मादः — 6

उन्मादाः षट् समाख्यातास्त्रिभिर्दोषैस्त्रयश्च ते ।
सन्निपाताद्विषाज्ज्ञेयः षष्ठो दुःखेन चेतसः ॥ २ ॥

२३. अपस्मारः — 4

अपस्मारश्चतुर्धा स्यात्समीरात्पित्ततस्तथा ।
श्लेष्मणोऽपि तृतीयश्च चतुर्थस्सन्निपाततः ॥ ३ ॥

२४. उदावर्तः — 13

भिषग्वरैस्तथा प्रोक्ता उदावर्तास्त्रयोदश ।

---

*மூன்று தோஷங்களும் சேர்ந்து அதிகரிப்பதனால்* 1.

(21) பரமதம் *(அல்லது கடுமையான போதை)*:-1 *வகை*

(22) உன்மாதம் *(பைத்தியம்)* :- 6 *வகை.*

| | |
|---|---|
| *தனித்தனியே மூன்று தோஷங்களால்* | 3 |
| *மூன்று தோஷங்களும் சேர்ந்து* | 1 |
| *விஷப் பிரயோகத்தினால்* | 1 |
| *துக்கத்தினால்* | 1 |

(23) அபஸ்மாரம் *(காக்கை வலிப்பு)* :- 4 *வகை.*

| | |
|---|---|
| *தனித்தனியே வாத பித்த கபங்களால்* | 3 |
| *மூன்று தோஷங்களும் சேர்ந்து* | 1 |

एकः क्षुण्णिग्रहात्प्रोक्तः तृष्णारोधाद्द्वितीयकः ।
निद्राघातात्तृतीयः स्याच्चतुर्थः श्वासनिग्रहात् ॥ ४॥

छर्दिरोधात्पंचमः स्यात् षष्ठः क्षवविनिग्रहात् ।
(सप्तमोऽपानरोधाच्च मलरोधात्तथाष्टमः ॥ ५ ॥

मूत्रजृंभानिरोधाच्च नवमो दशमस्तथा ।
बाष्पोद्गारनिरोधाच्चैकादशो द्वादशस्तथा ।
तथा शुक्रनिरोधेन जायते च त्रयोदशः ॥ ६ ॥

---

(24) உதாவர்த்தம் (கீழ்நோக்கி இருக்கவேண்டிய வாயு ப்ரகோபமடைந்து மேல் நோக்குதல்):-13 வகை

(1) பசியை அடக்குவதால்
(2) தாகத்தை அடக்குவதால்
(3) தூங்காமல் விழித்திருத்தலால்
(4) மூச்சை அடக்குவதால்
(5) வாந்தியை அடக்குவதால்
(6) தும்மலை அடக்குவதால்
(7) அபான வாயுவை அடக்குவதால்
(8) மலத்தை அடக்குவதால்
(9) மூத்திரத்தை அடக்குவதால்
(10) கொட்டாவியை அடக்குவதால்
(11) கண்ணீரை அடக்குவதால்
(12) ஏப்பத்தை அடக்குவதால்
(13) இந்திரியத்தை அடக்குவதால்

निरोधाद्धे तु जायन्ते श्वासक्षवतुछर्दिषाम् ॥ )
उदावर्तास्त्रयस्त्वेते घोरोपद्रवकारकाः ॥ ७ ॥

२५. आनाहः — 2

आनाहो द्विविधः प्रोक्तः एकः पक्वाशयोद्भवः ।
आमाशयोद्भवश्चान्यः प्रत्यानाहः स कथ्यते ॥ ८ ॥

२६. उरोग्रहः -- 1

उरोग्रहस्तथा चैको हृद्रोगाः पंच कीर्तिताः ।

२७. हृद्रोगाः -- 5

वातादिभिस्त्रयः प्रोक्ताश्चतुर्थस्सन्निपाततः ॥ ९ ॥

---

இவற்றுள் மூச்சு, வாந்தி, தும்மல் இம்மூன்றையும் அடக்குவதனல் மிகக் கடுமையான உபத்திரவங்கள ஏற்படும்.

(25) ஆனாஹம் (வயிற்றுப் பொருமல்) :- 2 விதம்

(1) ஆமாசயத்தில் உண்டாவது. இதற்குப் பிரத்யானாஹம் என்று பெயர்.

(2) பக்குவாசயத்தில் உண்டாவது.

(26) உரோக்ரஹம் (மார்புப் பிடிப்பு) :- ஒரே வகை.

(27) ஹ்ருதய ரோகம் :- 5 விதம்.

| | |
|---|---|
| வாத, பித்த, கபங்களால் | 3 |
| மூன்று தோஷங்களும் சேர்ந்து | 1 |

पंचमः कृमिसंजातस्तथाऽष्टा उदराण्यपि ।

२८. उदररोगः — 8

वातात्पित्तात्कफात्त्रीणि त्रिदोषेभ्यो जलादपि ॥१०॥
प्लीहात्क्षताद्बद्धगुदादष्टमं परिकीर्तितम् ।

२९. गुल्माः — 8

गुल्मास्त्वष्टौ समाख्याता वातात्पित्तात्कफात्त्रयः ॥
द्वंद्वभेदात्त्रयः प्रोक्तास्सप्तमस्सन्निपाततः ।

---

கிருமிகளால் 1

(28) உதரம் (வயிறு பெருத்தல்) :- 8 வகை.

1. வாத உதரம்
2. பித்த உதரம்
3. கப உதரம்
4. மூன்று தோஷங்களும் சேர்ந்த உதரம்
5. ஜல உதரம்
6. ப்ளீஹ (மண்ணீரல்) உதரம்
7. க்ஷத (அடிபடுதல், குடலில் த்வாரம் உண்டாதல்) உதரம்
8. பத்த குத (மலபந்த) உதரம்

(29) குன்மம் :-8 வகை.

தனித்தனியே வாத பித்த கபங்களால் 3
இரண்டிரண்டு தோஷங்கள் சேர்ந்ததால் 1
மூன்று தோஷங்களும் சேர்ந்து 3

रक्तादप्यष्टमः ख्यातः गुल्मास्त्वष्टाविति स्मृताः ॥

३०. मूत्रकृच्छ्राणि — 8

मूत्रकृच्छ्राणि चाष्टौ स्युर्वातात्पित्तात्कफादपि ।
सन्निपाताच्चतुर्थं स्याच्छुक्लकृच्छ्रं च पंचमम् ॥ १३॥
विट्कृच्छ्रं षष्ठमाख्यातं घातकृच्छ्रं च सप्तमम् ।
अष्टमं चाश्मरीकृच्छ्रं चतुर्धा चाश्मरी स्मृता ॥ १४ ॥

३१. अश्मरी -- 4

वातात्पित्तात्कफाच्छुक्रात्तथा मेहश्च विंशतिः ।

---

| | |
|---|---|
| ரத்த குன்மம் | 1 |

(30) மூத்திரக் கிருச்சிரம் (நீர் அடைப்பு) :-8 வகை

| | |
|---|---|
| தனித்தனியே வாத பித்த கபங்களால் | 3 |
| மூன்று தோஷங்களும் சேர்ந்து | 1 |
| சுக்கில கிருச்சிரம் | 1 |
| விட்கிருச்சிரம் (மலபந்தத்தால் உண்டாவது) | 1 |
| காதகிருச்சிரம் (அடிபடுதல் முதலியவைகளால் நீர்த் துவாரங்களுக்கு ஏற்படும் கெடுதியால் | 1 |
| அச்மரீ கிருச்சிரம் (கல்லடைப்பினுல்) | 1 |

(31) அச்மரீ:—4 வகை

இந்த அச்மரீ நான்கு வகைப்படும். தனித்தனியே வாத பித்த கபங்களினுல் மூன்றும் சுக்கிலத்தினுல் ஒன்றும் ஆக நான்கு வகை.

## ३२. मेहः — 20

### कफजाः — 10

**इक्षुमेहस्सुरामेहः पिष्टमेहश्च सान्द्रकः ॥ १५ ॥**
**शुक्रमेहोदकाख्यौ च लालामेहश्च शीतकः ।**

---

32. மேஹம் (ப்ரமேஹம் அல்லது நீரிழிவு) :-20 வகை.

இவற்றுள் கபப்ரமேஹங்கள் 10 வகை:—

1. இக்ஷு மேஹம் (கருப்பஞ்சாறு போன்று, இனிப்போடும், பிசுபிசுப்புடனும், அதிகமாக நீர் இறங்குவது)

2. ஸுராமேஹம் (நுரையுடனும், வெளுப்பாகவும், பனங்கள்ளுப்போலவும், காய்ச்சினுல் கள் நாற்றத்துடனும் நீர் இருக்கும்)

3. பிஷ்டமேஹம் (மாக்கரைத்ததுபோல் சுக்லம் கலந்து நீர் வெளிப்படுதல்)

4. ஸாந்திரகமேஹம் (மூத்திரம் பாத்திரத்தில் வைக்கப்பட்டால் வண்டல் படிவது)

5. சுக்ரமேஹம் (சுக்கிலத்தோடு அடிக்கடி நீர் வெளிப்படுதல்)

6. உதகமேஹம் (ஜலம் போன்று அளவுக்கு மிஞ்சிய மூத்திரம்)

7. லாலா மேஹம் (நூல் வலே போல் பிசுபிசுத்த பாகங்களோடு கூடியது. லாலா=எச்சில்)

8. சீதமேஹம் (மிகக் குளிர்ச்சி, இனிப்பு இவைகளோடு கூடியது)

सिकताह्वश्शनैर्मेहो दशैते कफसंभवाः ॥ १६ ॥

पित्तजाः — 6

मञ्जिष्ठाभो हरिद्राभो नीलमेहश्च रक्तकः ।
कृष्णमेहः क्षारमेहः षडेते पित्तसंभवाः ॥ १७ ॥

वातजाः—4

हस्तिमेहो वसामेहो मज्जामेहो मधुप्रभः ।

---

9. ஸிகதாமேஹம் (மணல் போன்று இறுகிய மூத்திர தோஷங்கள் உள்ளது)

10. சனைர் மேஹம் (மெதுவாகவும் கொஞ்சம் கொஞ்சமாயும் வருவது)

பித்தத்தினுல் ஏற்படும் ப்ரமேஹங்கள் 6 வகை:-

1. மஞ்சிஷ்டாபம் (மஞ்சிஷ்டி என்ற மருந்துச் சரக்கைப் போன்ற வர்ணம், துர்க்கந்தம் உள்ளது)

2. ஹரித்ராபம் (மஞ்சள் வர்ணம், கார்ப்பு, இந்த குணங்கள் உள்ளது)

3. நீலமேஹம் (நீலவர்ணமுள்ளது, புளிப்பு உள்ளது)

4. ரக்தமேகம் (சிவப்பு வர்ணம், துர்க்கந்தம், உஷ்ணம், உப்பு இந்த குணங்களுள்ளது)

5. கிருஷ்ணமேஹம் (மசியைப்போல் கருப்பான வர்ணமும் உஷ்ணமும் உள்ளது)

चत्वारो वातजा मेहा इति मेहाश्च विंशतिः ॥ १८ ॥

३३. सोमरोगः — 1

सोमरोगस्तथा चैकः प्रमेहपिटका दश ।

३४. प्रमेहपिटका — 10

शराविका कच्छपिका पुत्रिणी विनतालजी ॥ १९ ॥

---

6. *க்ஷாரமேஹம் (சுண்ணாம்பு முதலிய காரத்தின் நீர்போல காரமும் வர்ணமுமுள்ளது)*

வாதத்தினுல் ஏற்படும் மேஹங்கள் 4

1. *ஹஸ்தி மேஹம் (யானையின் மதஜலம்போல் ஸதா நீர் இறங்குவது)*

2. *வஸாமேஹம் (வஸை கலந்தது)*

3. *மஜ்ஜாமேஹம் (மஜ்ஜை கலந்தது)*

4. *மதுமேஹம் (கார்ப்பு, இனிப்பு, வெண்மை, நைப்பின்மை ஆகிய குணமுள்ளது)*

33. ஸோமரோகம் *(ஸ்த்ரீகளுக்கு ஏற்படும் ஜலரோகம்)* :—*ஒரே வகை.*

34. ப்ரமேஹபிடகா *அல்லது* மேகப்பிளவை:-10 *வகை*

1. *சராவிகை (அகல் போன்று நடுவில் சிறிது குழிந்தது)*

2. *கச்சபிகை (ஆமை முதுகுபோல் நடுவில் மேடிட்டது)*

मसूरिका सर्षपिका जालिनी च विदारिका ।
विद्रधिश्च दशैतास्स्युः पिटका मेहसंभवाः ॥ २० ॥

३५. वृद्धिः — 7

सप्तधा वृद्धयः प्रोक्ताः वातात्पित्तात्कफादपि ।

---

3. புத்ரிணீ (சிறிய பிளவைகளால் சூழப்பட்ட பெரிய பிளவை)

4. விநதை (ஆழ்ந்தவேர், துர்நீர், கருமை நிறம் உள்ளது. பெரியது. ஆனால் மேலே கிளம்பாதது)

5. அலஜீ (வெண் சிவப்பு, பலமுக முள்ளது)

6. மஸூரிகை (கடலையைப் போன்ற உருவமுள்ள பிளவை)

7. ஸர்ஷபிகை (வெண் கடுகுபோன்ற கொப்புளம்)

8. ஜாலிநீ (வலைபோன்ற பின்னலுள்ள ரத்தக் குழாய்களுள்ளது)

9. விதாரிகை (கிழங்குபோல் பருத்திருப்பது)

10. வித்ரதி (விப்புருதி - வெளியில் பல இடங்களி லும் உட்புறத்தில் இருதயம், நுரையீரல், கல்லீரல், மண் ணீரல், வயிறு, மூத்திரக்குண்டிக்காய், தொப்புள் பாகம், துடையிடுக்கு, மூத்திரப்பை இந்த ஸ்தானங்களிலும் எழும் கட்டி)

35. விருத்தி (சதை வளர்ச்சி):—7 வகை.

தனித்தனியே வாத, பித்த, கபங்கள் அதிகரிப்பதால் 3

रक्तेन मेदसा मूत्रादांत्रवृद्धिश्च सप्तमी ॥ २१ ॥

३६. अण्डवृद्धिः ३७. गण्डमालिका

अण्डवृद्धिस्तथा चैका तथैका गण्डमालिका ।

३८. कुष्टः — 18

कुष्टान्यष्टादशोक्तानि वातात्कापालिकं भवेत् ॥ २२ ॥

पित्तेनौदुंबरं प्रोक्तं कफान्मण्डलचर्चिकौ ।

---

| | |
|---|---|
| ரத்தம் அதிகரிப்பதால் | 1 |
| கொழுப்பு அதிகரிப்பதால் | 1 |
| மூத்திரம் அதிகரிப்பதால் | 1 |
| குடல் பெருப்பதால் | 1 |

36. அண்டவிருத்தி (விரைவீக்கம்)—ஒரேவகை

37. கண்டமாலை (கழுத்தில் தொங்கும் சதை வளர்ச்சி) :—ஒரேவகை

38. குஷ்டம்:—18 வகை

வாதத்தால் (1) காபாலிகம் (கருஞ்சிவப்பு நிறம்)

பித்தத்தால் (2) ஔதும்பரம் (அத்திப்பழத்தின் மேல் தோல்போல் இருத்தல்)

கபத்தால் (3) மண்டலம் (படைகள் சேர்ந்தது)

(4) சர்ச்சிகம் (அதிக அரிப்பும், வலியும், எரிவும், கருஞ்சிவப்பு நிறமும் கூடியது.)

**मरुत्पित्ताहृष्यजिह्वा श्लेष्मवाताद्विपादिका ॥ २३ ॥**

**तथा सिध्माख्यकुष्ठं च किटिभं चालसं तथा ।**
**कफपित्तात्पुनर्दद्रुः पामा विस्फोटकं तथा ॥ २४ ॥**

---

வாதபித்தத்தால் (5) ரிஷ்ய ஜிஹ்வா (மானின் நாக்குப் போல் சுற்றுப்புறம் சிவப்பும் நடுவில் கருப்பும், கெட்டியாகவும் வலியோடும் கூடியது)

கபவாதத்தால் (6) விபாதிகை (கால் கையில் வெடித்து கடுமையான வலியுடன் கூடியது)

(7) ஸித்ம (பெரும்பாலும் மார்பில் உண்டாவது)

(8) கிடிபம் (கருப்பாகவும், புண்ணால் சொறசொறப்பாகவும் இருக்கும்)

(9) அலஸம் (அரிப்பும், சிவப்பும் வீக்கமுமுள்ள புண்ணுள்ளது)

கபபித்தத்தால் (10) தத்ரு (அரிப்பும், சிவப்பும், வட்ட வடிவமும் உள்ள கொப்புளங்களுடன் சேர்ந்தது)

(11) பாமா (வெளுப்பு, சிவப்பு, கருப்பு நிறங்களுடனும், அரிப்புடனும் அழிற்சி, துர்நீர்க்கசிவுடனும் கூடிய சிரங்குக் கூட்டம்)

(12) விஸ்போடகம் (கருப்பு, சிவப்பு வர்

**महाकुष्ठं चर्मदलं पुण्डरीकं शतारिकम् ।**
**त्रिदोषैः काकणं ज्ञेयं तथातिश्वेतसंज्ञिकम् ॥ २५ ॥**
**तच्च वातेन पित्तेन श्लेष्मणश्च त्रिधा भवेत् ।**

---

ணமும் மெல்லிய தோலும் கூடிய கொப்புளங்கள்)

(13) மஹா குஷ்டம் (உடம்பு முழுவதும் சிவப்பு கருப்பு வர்ணம் பரவுவதும், வியர்வையில்லாமலிருப்பதும் தோல் மீன் சிதிலைப்போல் ஆவதுமான குஷ்டம். இதற்கு 'ஏக குஷ்டம்' என்றும் பெயர்)

(14) சர்மதளம் (சிவப்பாகவும், குத்துவலி அரிப்புடனும், கொப்புளங்களுடனும், வெடிப்புடனும் தொட்டால் பொறுக்கமுடியாமலும் இருக்கும்)

(15) புண்டரீகம் (சிவந்த வெண்மை நிறமுள்ளது)

(16) சதாரிகம் (சிவப்பு, கருப்பு, எரிவு, வலி, அதிகப்புண் இவைகளோடு கூடியது)

மூன்று தோஷங்களும் சேர்ந்ததனால் } (17) காகணம் (குன்றுமணி போன்றது)

(18) அதிச்வேதம் (வெண்குஷ்டம்)

## ३९. वातरोगाः — 80

**अशीतिर्वातजा रोगाः कथ्यन्ते मुनिभाषिताः ॥२६॥**
**आक्षेपको हनुस्तम्भ ऊरुस्तम्भः शिराग्रहः ।**
**बाह्यायामोऽन्तरायामः पार्श्वशूलः कटिग्रहः ॥ २७ ॥**
**दण्डापदानकः खल्ली जिह्वास्तंभस्तथार्दितः ।**

---

அந்த வெண்குஷ்டமும் வாத பித்த கபங்களால் மூன்று வகைப்படும்.

(39) வாத ரோகங்கள்:— 80 வகை.

1. ஆக்ஷேபகம் (உதறுவாதம்)
2. ஹனுஸ்தம்பம் (முகவாய்க்கட்டை அசைவற்றுப் போவது)
3. ஊருஸ்தம்பம் (துடை ஸ்தம்பித்தல்)
4. சிராக்ரஹம் (தலையிலுள்ள ரத்தக் குழாய்களை ஆக்ரமித்து கருப்பு வர்ணமும், வேதனையும் உண்டாக்கும் அசாத்திய ரோகம்)
5. பாஹ்யாயாமம் (முதுகுத் தண்டில் பிடிப்புடன் வெளிப்புறமாக உடம்பை வளைப்பது)
6. அந்தராயாமம் (கழுத்தில் பிடிப்புடன் உட்புறமாக உடம்பை வளைப்பது)
7. பார்ச்வ சூலம் (விலாப்புறத்தில் குத்துவலி)
8. கடிக்ரஹம் (இடுப்புப் பிடிப்பு)
9. தண்டாபதானகம் (உடம்பு கம்பைப்போல் விறைப்பது)

पक्षाघातः क्रोष्टुशीर्षं मन्यास्तंभश्च पंगुता ॥ २८ ॥

तूणी च प्रतितूणी च कलायः कंजता तथा ।
पादहर्षो गृध्रसी च विश्वाची चावबाहुकः ॥ २९ ॥

---

10. கல்லீ (முழங்காலுக்குக் கீழ்பாகம், துடை, மணிக்கட்டு, புஜங்களின் அடிப்புறம் இவற்றை முடக்குவது)
11. ஜிஹ்வா ஸ்தம்பம் (நாக்கு அசைவற்றுப் போவது)
12. அர்திதம் (முகம், கை, கால்களில் ஒருபக்கம் வலியுடன், கோணும்படி செய்யும் வியாதி)
13. பக்ஷாகாதம் (பக்ஷவாதம்—ஒருபுறம் முழுவதும் அங்கங்கள் அசைவற்றுப் போதல்)
14. க்ரோஷ்டுசீர்ஷம் (நரித்தலை வாயு—முழங்காலில் வீக்கத்துடன் ஏற்படும் வாதம்)
15. மன்யா ஸ்தம்பம் (கழுத்தின் ஸிரை ஸ்தம்பித்துச் சிந்தனை சக்தியைக் குறைத்தல்)
16. பங்குதா (துடைகள் ஸ்வாதீனமற்று கால் முடமாதல்)
17. தூணீ (மலாசயம், மூத்திராசயம் முதல் குதம், லிங்கம் வரையில் பிளப்பது போன்ற வலி)
18. ப்ரதிதூணீ (அதே இடங்களில் கீழிருந்து மேலே வலி பரவுவது)
19. கலாயம் (கால் பூட்டுக்கள் நெகிழ்வது)

**अपतानो व्रणायामो वातकण्टोऽपतन्त्रकः ।**
**अंगभेदोंसशोषश्च मिन्मिनत्वं च कल्लता ॥ ३० ॥**

---

20. கஞ்சத்வம் (இடுப்பிலுள்ள வாதத்தினுல் நடக்க முடியாமல் கால் நொண்டியாதல்)

21. பாதஹர்ஷம் (கால் சிலிர்த்துத் திமிர்த்துப் போதல்)

22. கிருத்ரஸீ (கழுத்தின் கீழே, இடுப்பு, பின் புறம், துடை, முழங்கால், கால் இவைகளில் விறைப்பு, வலி, நடுக்கம், குத்தல் முதலிய வையோடு பரவுவது)

23. விச்வாசீ (புஜத்தையும், கையையும் வேலை செய்ய முடியாமற் செய்வது)

24. அவபாஹுகம் (தோள் நரம்புகள் சுருக்கப் பட்டு கை ஸ்வாதீனமிழத்தல்)

25. அபதானம் (வாயு தலை, பொட்டுக்கள் இவை களை யடைந்து வலித்து உடம்பை வளையச் செய்து, மூச்சுத் திணறலையும் உண்டு பண்ணும்)

26. வ்ரணாயாமம் (மர்மங்களில் ஏற்படும் புண்ணில் வாயு சேர்ந்து உடம்பு முழுவதும் பரவி நீர் வேட்கையையும், உடம்பில் வெளுப்பை யும் உண்டுபண்ணும் அஸாத்திய ரோகம்)

27. வாதகண்டம் (குதிகால் வாதம்)

प्रत्यष्टीलाष्टीलिका च वामनत्वं च कुब्जता ।
अङ्गपीडाङ्गशूलं च संकोचस्तंभने क्षुतः ॥ ३१ ॥
अंगभङ्गोऽङ्गविस्रंसोऽलिग्रहो बद्धविट्कता ।

---

28. அபதந்த்ரகம் (அபதானத்தைப்போல் இருப்ப தோடு ஹ்ருதயத்தையும்பற்றி மூர்ச்சையை யும் உண்டுபண்ணுவது)
29. அங்கபேதம் (உடம்பைப் பிளப்பதுபோன்ற வலி)
30. அம்சசோஷம் (தோள்பூட்டில் உள்ளே உள்ள நைப்பை உலர்த்தும் வாதம்)
31. மின்மினத்வம் (மூக்கால் பேசும்படிச் செய்யும் வியாதி)
32. கல்லதை (குரல் மாறுபாடும் செவிட்டுத்தனமும்)
33. ப்ரத்யஷ்டீலை (கீழே சொல்லப்படும் அஷ்டீலி யைப்போல் குறுக்குவாட்டில் உண்டாவது)
34. அஷ்டீலிகை (தொப்புளுக்குக் கீழே கல்லைப் போல் கனமாகக் கிளம்பும் கெட்டியான வீக்கம். இதனால் குதம் முதலிய மார்க்கங் கள் அடைபடும்)
35. வாமனத்வம் (உடம்பு குறுகுதல்)
36. குப்ஜதை (கூனல்)
37. அங்க பீடை (உடம்பு வலி)
38. அங்க சூலம் (உடம்பில் குத்து வலி)

मूकत्वमतिजृम्भा च अत्युद्गारोंत्रकूजनम् ॥ ३२ ॥
वातप्रवृत्तिस्फुरणः सिराणां पूरणं तथा ।
कंपः कार्श्यं श्यावता च प्रलापः क्षिप्रमूत्रता ॥ ३३ ॥

---

39. க்ஷுத்ஸங்கோசம் (பசியைக் குறைப்பது)
40. க்ஷுத்ஸ்தம்பனம் (பசியை உணர முடியாமற் செய்வது)
41. அங்கபங்கம் (உடம்பு முழுவதும் பிளப்பது போன்ற வலி)
42. அங்கவிஸ்ரம்ஸம் (உடம்பு வெலவெலத்தல்)
43. அலிக்ரஹம் ( ? )
44. பத்தவிட்கதா (மலபந்தம்)
45. மூகத்வம் (ஊமை)
46. அதிஜ்ரும்பை (அதிகக் கொட்டாவி)
47. அத்யுத்காரம் (அதிக ஏப்பம்)
48. ஆந்த்ர கூஜனம் (குடல் இரைச்சல்)
49. வாதப்ரவ்ருத்தி ஸ்புரணம் (அதிகமாக வாயுப் பரிதல்)
50. ஸிரா பூரணம் (ரத்த நரம்புகள் தடித்தல்)
51. கம்பம் (நடுக்கம்)
52. கார்ச்யம் (இளைத்தல்)
53. ச்யாவதா (உடம்பு கறுத்தல்)
54. ப்ரலாபம் (பிதற்றல்)
55. க்ஷிப்ர மூத்ரதா (திடீரென்று மூத்திரம் இறங்குதல்,

निद्रानाशः स्वेदनाशो दुर्बलत्वं बलक्षयः ।
अतिप्रवृत्तिः शुक्रस्य कृत्स्ननाशश्च रेतसः ॥ ३४ ॥

अनवस्थितचित्तत्वं काठिन्यं विरसास्यता ।
शब्दाज्ञता प्रसुप्तिश्च गन्धाज्ञत्वं दृशः क्षयः ॥ ३५ ॥

---

56. நித்ராநாசம் (தூக்கமின்மை)
57. ஸ்வேத நாசம் (வியர்வையின்மை)
58. துர்பலத்வம் (பலஹீனம்)
59. பலக்ஷயம் (பலம் குறைந்துகொண்டு வருவது)
60. சுக்ராதிப்ரவ்ருத்தி (அதிகமாக சுக்ரம் நழுவுதல்
61. க்ருத்ஸ்ன ரேதோ நாசம் (சுக்லமே அழிந்து போதல்)
62. அநவஸ்தித சித்தத்வம் (மனம் ஓரிடம் தரிக்காமல் இருத்தல்
63. காடின்யம் (உடம்பு கடினமாதல்)
64. விரஸாஸ்யதை (நாக்கு ருசி இழத்தல்)
65. சப்தாஞ்ஞதை (காது கேளாமல் இருத்தல்)
66. ப்ரஸுப்தி (அங்கங்கள் அசைவற்றுப்போவது அல்லது அதிகத்தூக்கம்)
67. கந்தாஞ்ஞத்வம் (வாசனையறியும் சக்தியை இழத்தல்)
68. த்ருக்க்ஷயம் (பார்வை குறைவு)[1]

---

1. வாதரோகங்கள் 80ல் 68 ரோகங்கள் மட்டும் மூல சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. மற்ற ரோகங்களை

## ४०. पित्तरोगाः -- 40

अथ पित्तभवा रोगाश्चत्वारिंशदिहोदिताः ।
धूमोद्गारो विदाहः स्यादुष्णांगत्वं मतिभ्रमः ॥ ३६ ॥
कांतिहानिः कण्ठशोषो मुखशोषोऽल्पशुक्रता ।
तिक्तास्यताम्लवक्त्रत्वं स्वेदस्रावोंगपाकता ॥ ३७ ॥

---

பித்தரோகங்கள் 40 வகை.

1. *தூமோத்காரம் (தலை, தொண்டை, கழுத்து, மேல்வாய் முதலிய இடங்களில் புகைச்சல்)*
2. *விதாஹம் (உள்ளங்கை, உள்ளங்கால், தோல் முதலிய இடங்களில் எரிவு)*
3. *உஷ்ணாங்கத்வம் (உடம்பு முழுவதும் உஷ்ணமாயிருத்தல்)*
4. *மதிப்ரமம் (புத்தித்தடுமாறல்)*
5. *காந்திஹானி (உடம்பின் காந்தி கெட்டுப்போதல்)*
6. *கண்டசோஷம் (தொண்டை வறண்டுபோதல்)*
7. *முகசோஷம் (வாய் வறண்டுபோதல்)*
8. *அல்பசுக்ரதா (சுக்கிலம் குறைதல்)*
9. *திக்தாஸ்யதா (வாயில் கைப்பு)*
10. *அம்லவக்த்ரத்வம் (வாயில் புளிப்பு)*
11. *ஸ்வேதஸ்ராவம் (அதிகமாக வியர்த்தல்)*

---

*விவரிக்கும் சுலோகங்கள் அகப்படவில்லை. ஆனால் இவற்றிலேயே முக்கியமான வாத ரோகங்கள் அடங்கியிருக்கின்றன.*

क्लमो हरितवर्णत्वमतृप्तिः पीतकायता ।
रक्तस्रावोंगदरणं लोहगन्धास्यता तथा ॥ ३८ ॥
दौर्गन्ध्यं पीतमूत्रत्वमरतिः पीतजिह्वता ।
पीतावलोकनं पीतनेत्रता पीतदन्तता ॥ ३९ ॥

---

12. அங்கபாகதா (வாய், கழுத்து, கண், ஆசனம் முதலியவற்றில் வேக்காடு)
13. க்லமம் (அயர்வு)
14. ஹரிதவர்ணத்வம் (பச்சை நிறம் உண்டாதல்)
15. அத்ருப்தி (ஆகாரத்தில் திருப்தியின்மை)
16. பீதகாயதை (உடம்பு மஞ்சள் நிறமாதல்)
17. ரக்தச்ராவம் (உடம்பிலிருந்து ரத்தம் பெருகுதல்)
18. அங்கதரணம் (உடம்பில் வெடிப்பு)
19. லோஹகந்தாஸ்யதை (வாயில் இரும்பின் சுவை உண்டாதல்)
20. துர்கந்ததை (உடம்பில் நாற்றம்)
21. பீதமூத்ரத்வம் (மூத்திரத்தில் மஞ்சள் நிறம்)
22. அரதி (ஒன்றிலும் விருப்பமில்லாமை)
23. பீதஜிஹ்வதை (நாக்கில் மஞ்சள் நிறம்)
24. பீதாவலோகனம் (வஸ்துக்கள் மஞ்சளாகத் தெரிவது)
25. பீதநேத்ரதை (கண்ணில் மஞ்சள் நிறம்)
26. பீததந்ததை (பற்களில் மஞ்சள் நிறம்)

शीतेच्छा पीतनखता तेजोद्वेषोऽल्पनिद्रता ।
कोपश्च गात्रसादश्च भिन्नत्वग्जिह्वता तथा ॥ ४० ॥
उष्णोच्छ्वासत्वमुष्णत्वं मूत्रस्य च मलस्य च ।
तमसो दर्शनं पीतमण्डलानां च दर्शनम् ॥ ४१ ॥
निस्सत्वं चेति पित्तस्य चत्वारिंशद्रुजस्स्मृताः ॥ ४२ ॥

---

27. சீதேச்சை (குளிர்ச்சியில் அதிகப்பிரியம்)
28. பீதநகதை (நகத்தில் மஞ்சள் நிறம்)
29. தேஜோத்வேஷம் (வெளிச்சத்தில் அருவருப்பு)
30. அல்பநித்ரதை (தூக்கக்குறைவு)
31. கோபம் (சரியான காரணமின்றிக்கோபம் உண்டாதல்)
32. காத்ரஸாதம் (உடம்பு சோர்ந்துபோதல்)
33. பின்னஜிஹ்வத்வம் (நாக்கில் வெடிப்பு)
34. பின்னத்வக்த்வம் (மேல்தோல் வெடிப்பு)
35. உஷ்ணோச்வாஸத்வம் (உஷ்ணமாக மூச்சுவிடுதல்)
36. உஷ்ண மூத்ரத்வம் (மூத்திரம் உஷ்ணமாக இறங்குதல்)
37. உஷ்ணமலத்வம் (மலம் உஷ்ணமாதல்)
38. தமோதர்சனம் (கண் இருட்டல்)
39. பீதமண்டல தர்சனம் (மஞ்சளான வட்டங்கள் கண்ணுக்குப் படுதல்)
40. நிஸ்ஸத்வம் (பலமிழத்தல்)

## ४१. कफरोगाः— 20

कफस्य विंशतिः प्रोक्ताः रोगास्तन्द्रातिनिद्रता ।
गौरवं मुखमाधुर्यं मुखलेपः प्रसेकता ॥ ४३ ॥
श्वेतावलोकनं श्वेतजिह्वत्वं श्वेतमूत्रता ।
श्वेतांगवर्णता शैत्यमुष्णेच्छा तिक्तकामिता ॥ ४४ ॥

---

41. கபரோகங்கள் :—20 வகை.

1. தந்த்ரா (தூக்கம், மயக்கத்தோடு கூடிய சோம்பல்)
2. அதி நித்ரதை (அதிகத் தூக்கம்)
3. கௌரவம் (உடம்பு கனத்தல்)
4. முகமாதுர்யம் (வாய் தித்தித்தல்)
5. முகலேபம் (வாயில் அடிக்கடி கபம் வெளிப் படல்)
6. ப்ரஸேகதை (வாயில் சதா நீர் ஊறுதல்)
7. ச்வேதாவலோகனம் (வஸ்துக்கள் வெண்மை யாகத் தெரிதல்)
8. ச்வேதஜிஹ்வத்வம் (நாக்கு வெளுத்தல்)
9. ச்வேத மூத்ரதை (மூத்திரத்தில் வெளுப்பு)
10. ச்வேதாங்கவர்ணதை (உடம்பு வெளிறிப் போதல்)
11. சைத்யம் (உடம்பு சில்லிட்டுப் போதல்)
12. உஷ்ணேச்சை (உஷ்ணத்தில் விருப்பம்)
13. திக்தகாமிதை (கைப்பில் விருப்பு)

मलाधिक्यं च शुक्लस्य बाहुळ्यं बहुमूत्रता ।
आलस्यं मन्दबुद्धित्वं बहुघर्घरवाक्यता ॥ ४५ ॥
अचैतन्यं च गदितं विंशतिः श्लेष्मजा गदाः ।

४२. रक्तरोगाः— 10

रक्तस्य च दश प्रोक्ताः व्याधयस्तेषु गौरवम् ॥ ४६ ॥
रक्तमण्डलता रक्तनेत्रत्वं रक्तमूत्रता ।
रक्तष्ठीवनता रक्तपिटकानां च दर्शनम् ॥ ४७ ॥

---

14. *மலாதிக்யம் (மலம் அதிகமாதல்)*
15. *சுக்லபாஹுள்யம் (அதிகமான சுக்கிலம்)*
16. *பஹுமூத்ரதை (அதிக மூத்திரம்)*
17. *ஆலஸ்யம்* (சோம்பல்)
18. *மந்தபுத்தித்வம்* (மந்த புத்தி)
19. *பஹுகர்கரவாக்யதா* (பேச்சில் *கரகரப்பான*) *குரல்*
20. *அசைதன்யம் (அங்கங்கள் மறத்தல்)*

42. இரத்த ரோகங்கள் :—10 வகை.

1. *கௌரவம் (உடம்பு கனத்தல்)*
2. *ரக்தமண்டலதை* (*உடம்பில் சுட்டிசுட்டியாக சிவப்பாதல்*)
3. *ரக்தநேத்ரத்வம் (கண் சிவத்தல்)*
4. *ரக்த மூத்ரதா (மூத்திரம் சிவத்தல்)*
5. *ரக்தஷ்டீவனதை (ரத்தமாக எச்சில் உமிழ்தல்*

ऊष्मा च पूतिगन्धत्वं पीडा पाक इतीरिताः ।

४३. जिह्वामयाः— 6

तथा जिह्वामयाः षट् स्युर्वातपित्तकफैस्त्रयः ॥ ४८ ॥
अलासश्च चतुर्थः स्यादधिजिह्वा च पंचमी ।
षष्ठी चैवोपजिह्वा च तथाष्टौ तालुजा गदाः ॥ ४९ ॥

४४. तालुरोगाः — 8

अर्वुदं तालुपिटका कच्छपी तालुसंहिता ।

---

6. *ரக்த பிடகாதிதர்சனம் (ரத்தக்கட்டி முதாலனவை உண்டாதல்)*
7. *ஊஷ்மா (உஷ்ணம்)*
8. *பூதிகந்தத்வம் (துர்நாற்றம்)*
9. *பீடா (வலி)*
10. *பாகம் (வேக்காடு)*

43. ஜிஹ்வாமயம் *(நாக்கு ரோகங்கள்)* :—6 வகை.

1-3. *தனித்தனியே வாத, பித்த, கபங்களால்* 3
4. *அலாஸம் (நாக்கின்மேல் கட்டியும் அடியில் வேக்காடும் ஏற்படுவது)*
5. *அதிஜிஹ்வை (உள்நாக்கு வளருதல்)*
6. *உபஜிஹ்வை (நாக்கு அடியில் சதை வளருதல்)*

44. தாலு ரோகங்கள் அல்லது தாடையிலுண்டாகும் ரோகங்கள் :—8 வகை.

गळशुण्ठी तालुशोषस्तालुपाकश्च पुप्पुटः ॥ ५० ॥

४५. गलरोगाः — 18

गळरोगास्तथा ख्याता अष्टादशमिता बुधैः ।
वातारोहिणिका पूर्वा द्वितीया पित्तरोहिणी ॥ ५१ ॥

---

1. அர்புதம் (தாடையின் உட்புறத்தில் உண்டாகும் எழுச்சி)
2. தாலுபிடகா (கன்னத்தில் பிளவை)
3. கச்சபீ (ஆமையைப்போல் நடுவில் மேடிட்டுள்ள வீக்கம்)
4. தாலுஸம்ஹிதா (தாடையின் நடுவில் வலியில்லாத வீக்கம்)
5. களசுண்டீ (தாடையின் அடிப்புறத்தில் நீண்ட பருத்த வீக்கம், மூச்சுத் திணறல் முதலியவைகளை உண்டாக்குவது.)
6. தாலுசோஷம் (தாடை உலர்ந்து வெடிப்புடனும் பெருமூச்சுடனும் காணும் ரோகம்)
7. தாலுபாகம் (தாடை வேக்காடு)
8. புப்புடம் (தாடையில் வலியில்லாமல் இலந்தைக் கொட்டை அளவாக உண்டாகும் கட்டி)

45. களரோகம் அல்லது தொண்டையைப்பற்றிய வியாதிகள் :-18 வகை.

1. வாதரோஹிணீ (நாக்கில் வேதனையும்,

कफरोहिणिका प्रोक्ता त्रिदोषा चैव रोहिणी ।
मेदोरोहिणिका बृन्दो गळौको गलविद्रधिः ॥ ५२ ॥

---

தொண்டை அடைப்பும் உண்டாக்கும் அபாயமான மாம்ஸ மூளைகள்)

2. பித்தரோஹிணீ (தொண்டையில் வேக்காடும், ஜ்வரமும் சேர்ந்து துரிதமாய்ப் பழுக்கும் மாம்ஸ மூளைகள்)

3. கபரோகிணீ (தொண்டையில் கிளம்பி அசைவற்றிருக்கும் மூளைகள்)

4. த்ரிதோஷ ரோகிணீ (தொண்டையில் வெகு ஆழமாக உண்டாகும் மிகவும் அபாயமான மூளைகள்)

5. மேதோரோஹிணீ (அதிகக் கொழுப்பினால் தொண்டையில் ஏற்படும் மூளைகள்)

6. ப்ருந்தம் (எரிவும், ஜ்வரமும் கூடி வட்டமாக உயர்ந்த வீக்கம்)

7. களௌகம் (தொண்டையின் உள்ளும், வெளியும் தொண்டையை அடைக்கும் கடுமையான வீக்கத்துடன் தலையில் கனம், ஜ்வரம் உண்டாவது)

8. களவித்ரதி (கடுமையான வலியுடன் தொண்டை முழுவதும் வியாபித்து சீக்கிரம் பழுத்து துர்நாற்றமுள்ள நீரை வெளிப்படுத்தும் வீக்கம்)

स्वरहा तुण्डिकेरी च शतघ्नी शालुकोऽर्बुदम् ।
गळायुर्वलयश्चापि वाताद्गण्डः कफादपि ॥ ५३ ॥

9. ஸ்வரஹா (தொண்டை உலர்ந்து குரல் அடைபட்டு மூச்சுத் திணறி உண்டாகும் வியாதி)

10. துண்டிகேரீ (கழுத்தில் பருத்திக்காயின் அளவாகக் குறைந்த வலியும், கடினமும் உள்ள வீக்கம்)

11. சதக்னீ (அதிக மாமிச முளைகளுடன் தாகம், ஜுரம், தலைவலியுடனும் சதக்னீ என்னும் ஆயுதத்தால் குத்துவதுபோல் அதிக வலியுடனும் இருக்கும்)

12 சாளுகம் (தொண்டையின் அடியில் இலந்தைக்காயளவு திரண்டு உயர்ந்து தொண்டையை அடைக்கும் வீக்கம்)

13. அர்புதம் (நாக்கின் கோடியில் தொண்டை முதலிய இடங்களில் கெட்டியாகவும் சிவப்பாகவும் வலியில்லாமலும் ஏற்படும் வீக்கம்)

14. களாயுஸ் (தொண்டையில் அதிக வலியில்லாமல் அடிப்பக்கம் கனத்த ஒன்று அல்லது பல மாம்ஸ முளைகள். மூச்சு விடுவதை சிரமப்படுத்தும்)

15. வலயம் (தொண்டையில் நீண்டு உயர்ந்த அதிக வலியில்லாத வீக்கம்)

16. வாதகண்டம் (சிவப்பு அல்லது கருமை நிறத்

मेदोगण्डस्तथैव स्यादित्यष्टादश कण्ठजाः ।

४६. मुखरोगाः — 8

मुखांतःसंभवा रोगा ह्यष्टौ ख्याता महर्षिभिः ॥ ५४ ॥
मुखपाको भवेद्वातात्पित्तात्तद्वत्कफादपि ।

---

துடனும் அதிகக் குத்துவலியுடனும் கருங் கோடுகளுடனும், தொண்டை வறட்சி, அருசி இவைகளை உண்டாக்கி வெளியில் பருத்துத் தொங்கும் வீக்கம்)

17. கபகண்டம் (கெட்டியாகவும், அரிப்புடனும் தொட்டால் குளிர்ச்சியாகவும் கனத்தும் இருப்பது. பருத்தால் தொண்டையில் ஓர் பூச்சுப்போன்ற உணர்ச்சியையும் வாயில் தித் திப்பையும் உண்டாக்கும்)

18. மேதோகண்டம் (கபகண்டத்தைப் போலுள் ளது. பருத்ததும் குரலைக் குறைக்கும். உடம்பு பருக்கும்போது பருத்து இளைக்கும் போது சிறுக்கும்)

46. முகாந்தரோகம் (வாயில் உண்டாகும் வியாதிகள்) 8 வகை.

1. வாதஜமுகபாகம் (உதடுகள் வரண்டு கடினமாக வும் வெடிப்புகளுடனும் அசைக்க முடியா மலும் இருக்கும்)

रक्ताच्च सन्निपाताच्च (मांसादप्यभिघातजात्) ॥५५॥
अर्बुदं चेति मुखजा रोगा ऋषिभिरीरिताः ।

४७. कर्णरोगाः — 18

कर्णरोगाः समाख्याता अष्टादशमिता बुधैः ॥ ५६ ॥

---

2. பித்தஜமுகபாகம் (உதடுகளில் வலியுடன்கூடிய கட்டியும் அழற்சி வேக்காடுகளுடன் பசுமை நிறமும் உண்டாகும்)

3 கபஜமுகபாகம் (உதடுகளில் வேதனை அதிகமில்லாத கட்டிகள் பரவியிருப்பது)

4. ரக்தஜமுகபாகம் (சிவப்பு வர்ணமான கட்டிகள் உண்டாகும்)

5. ஸன்னிபதஜமுகபாகம் (கருப்பு, பசுமை, வெண்மை முதலிய நிறங்களாக மாறி மாறி உதட்டில் பல கட்டிகள் உண்டாகும்)

6. மாம்ஸஜமுகபாகம் (உதடுகள் கனத்துப் பிதுங்கிக்கொண்டு கிருமிகளுடன் ஏற்படும்ரோகம்

7. அபிகாதமுகபாகம் (அடிபடுவது முதலிய காரணங்களால் ரத்தம் குழம்பி வெடிப்பு, அரிப்பு இவை உண்டாகும்)

8. ஓஷ்ட அர்புதம் (உதடு நிறம் மாறி பருத்து அரிப்பும் அதிலிருந்து துர்நீரும் உண்டாதல்.

47 கர்ண ரோகங்கள் (காதில் உண்டாகும் வியாதிகள் :—18 வகை.

वातात्पित्तात्कफाद्रक्तात्सन्निपाताच्च विद्रधेः ।

---

1. வாதஜம் (வாதத்தினால் காதில் குத்துவலி ஏற்பட்டு வெகுகாலம் சென்று பழுத்து கொஞ்சமாக நீர் கசியும். குளிர்ச்சியில் வெறுப்பு ஏற்படும்)

2. பித்தஜம் (பித்தத்தினால் காதில் குத்துவலியும், காதில் எரிவும், உடம்பில் உஷ்ணமும் ஏற்பட்டு சீக்கிரம் பழுத்து மஞ்சளான நீர் வடியும். அந்த நீர் தேகத்தில் மற்ற இடத்தில் பட்டாலும் அந்த இடத்தில் வேக்காடு ஏற்படும்)

3. கபஜம் (கபத்தினால் காதில் கொஞ்சமான வலியும், அரிப்பும், தலை, தாடை, கழுத்து இவைகளில் கனமும் இருக்கும். பழுத்து வெள்ளையாகத் தடித்த நீர் வெளியாகும்)

4. ரக்தஜம் (அடிபடுதல் முதலிய காரணங்களால் ரத்தம் குழம்பி காதில் குத்துவலியும், எரிவும், சீக்கிரம் பழுத்தலும் உண்டாகும்)

5. ஸன்னிபாதஜம் (வீக்கம், ஜ்வரம், கடுமையான வலி, காதுக்குத்தல், உஷ்ணத்திலும் சீதத்திலும் மாறிமாறி விருப்பம், பழுத்துப் பல வர்ணத்தில் நீரும் வெளிவருதல்)

6. வித்ரதிஜம் (காதைக் குடைவதால் ஏற்பட்ட

**शोफार्बुदं पूतिकर्णः कर्णार्शः कर्णहल्लिका ॥ ५७ ॥**

**बाधिर्यं तन्त्रिका कण्डू शष्कुली कृमिकर्णिकः ।**

---

புண்ணில் வலியும், கிருமிகளோடு கூடிய கடுமையான வலியுடன் கட்டியும் ஏற்படும்)

7. கர்ண சோபம் (காதில் வீக்கம், வலி, நாற்றம், செவிட்டுத்தனம் இவைகளோடு ஏற்படுவது)
8. அர்புதம் (காதில் எழுச்சி)
9. பூதிகர்ணம் (வலியுடனே, வலியில்லாமலோ, அதிக துர்நாற்றமும், நீர்க்கசிவும் உள்ள வியாதி)
10. கர்ண அர்சஸ் (காதில் மூளை)
11. கர்ண ஹல்லிகா (காதணிபோடும் துவாரத்தை வலிய வளர்ப்பதால் வாதகபங்களால் வீக்கமும் குறைவான வலியும் ஏற்படும்)
12. பாதிர்யம் (வாத கபங்களால் சப்தம் செல்லும் துவாரம் அடைபடும்போது அதற்கு சிகிச்சை செய்யாததினாலும், காதில் இரைச்சல் உண்டாகும்போது சிகிச்சை செய்யாததினாலும் செவிட்டுத்தனம் உண்டாகும்)
13. தந்த்ரிகை (வாயுவினால் வெளிக்காது மெலிந்து கெட்டியாகும் வியாதி)
14. கண்டு (கபத்தினால் ஏற்படும் அரிப்பு)
15. சஷ்குலீ (வாயுவினால் வலியில்லாமலோ, வலியுடனே மாமிச மூளைகள் உண்டாகி வெளிக்

प्रतिनादः कर्णनाद इत्यष्टादश कर्णजाः ॥ ५८ ॥

४८. कर्णमूलरोगाः — 5

कर्णमूलामयाः पंच वातात्पित्तात्कफादपि ।
सन्निपाताच्च रक्ताच्च तथा नासाभवा गदाः ॥ ५९ ॥

४९. नासारोगाः — 18

अष्टादशैव संख्याताः प्रतिश्यायस्तु तेष्वपि ।

---

காதை வளைக்கும் ரோகம்)

16. க்ருமிகர்ணிகம் (காதில் உண்டான புண் முதலியவற்றில் கிருமி உண்டாகி வலி ஏற்படுதல்)

17. பிரதிநாதம் (வாயுவினால் வரண்ட கபம் காதின் த்வாரத்தில் ஓர் பூச்சை ஏற்படுத்தி வலி, கனம், காதடைப்பு, இவைகளையுண்டாக்கும்)

18 கர்ணநாதம் (சப்தத்தை எடுத்துச் செல்லும் நாடிகளில் வாயு புகுந்து பலவித சப்தங்களைத் திடீரென்று கேட்பதுபோன்ற உணர்ச்சியை ஏற்படுத்துவது)

48. கர்ணமூல ரோகங்கள்:-5 வகை.

| | |
|---|---|
| தனித்தனியே வாத, பித்த, கபங்களால் | 3 |
| மூன்று தோஷங்களும் சேர்ந்து | 1 |
| ரத்தத்தினால் | 1 |

49. நாஸா ரோகம் (மூக்கில் ஏற்படும் வியாதிகள்) 18 வகை.

## वातात्पित्तात्कफाद्रक्तात्सन्निपातेन पंचमः ॥ ६० ॥

1. வாத ப்ரதிச்யாயம் (நாசி இசிக்கப்படுவது போன்ற உணர்ச்சி, மூக்கடைப்பு, தொண்டையும், தாடைகளும், உதடும் உலர்ந்து போதல், அதிகத் தும்மல், வாயில் அருவருப்பு, குரல் கம்மிப்போதல் முதலியவை உண்டாகும்)

2. பித்த ப்ரதிச்யாயம் (மூக்கிலிருந்து உஷ்ணமாகவும், பசுமை நிறமாகவும் சளி வெளியாகும். சரீரம் மிக மெலிந்தும், அதிகமாக வெளிறியும், உஷ்ணமாகவும் இருக்கும்)

3. கபப்ரதிச்யாயம் (கபமானது குளிர்ந்து, வெண்மையாய், அதிகமாய் மூக்கிலிருந்து வெளியாகும். சரீரமும் கண்களும் வெளிறியும், தலை பாரமும், தொண்டை, தாடை, உதடுகள், தலை இவற்றில் அதிகமாக அரிப்பும், உண்டாகும்)

4. ஸந்நிபாத ப்ரதிச்யாயம் (மேலே சொன்ன மூன்றுவித ப்ரதிச்யாயங்களின் குணங்களும் மாறிமாறி வரும்)

5. ரத்த ப்ரதிச்யாயம் (மூக்கிலிருந்து இரத்தம் பெருகும். கண்கள் சிவந்திருக்கும். மார்பில் இடிப்புபோன்ற வலியும், ச்வாஸம்,

आपीनसः पूतिनासो नासार्शश्च भृशक्षवः ।
नासानाहः पूतिरक्तमर्बुदं दुष्टपीनसम् ॥ ६१ ॥
नासाशोषो घ्राणपाकः पुटकः स्रावदीपकौ ॥ ६२ ॥

---

முகம் இவ்விரண்டும் துர்நாற்றமுள்ளவை யாயும் இருக்கும். வாசனை உணரமுடியாது)

6. ஆபீநஸம் (மூக்கடைப்பு, மூச்சு விடும்போது சத்தம், மூக்கில் நீர்க்கசிவு முதலியவை இருக்கும்)

7. பூதிநாஸம் (வாதமும் கபமும் தொண்டையிலும் தாடைகளின் அடிப்புறத்திலும், மேன் மேலும் சேர்ந்து பிறகு வாயாலும், மூக்காலும் துர்நாற்றத்துடன் வெளியாகும்)

8. நாஸார்சஸ் (மூக்கில் மூளை)

9. ப்ருசக்ஷவம் (கடுமையான தும்மல்)

10. நாஸாநாஹம் (மூக்கடைப்பு)

11. பூயரக்தம் (மூக்கிலிருந்து இரத்தங் கலந்த சீழ் வெளியாகும்)

12. அர்புதம் (மூக்கில் வலியுடன்கூடிய எழுச்சி)

13. துஷ்டபீனஸம் (ரத்தமும், சீழும், துர்க்கந்தமும், ஜ்வரமும், இருமலும் சேர்ந்த ப்ரதிச்யாயம்)

14. நாஸாசோஷம் (மூக்கினுள் இருக்கும் துவாரம் மிகவும் அழற்சியடைந்து ச்வாஸத்தை

## ५०. शिरोरोगाः — 10

**तथा दश शिरोरोगा वातेनार्धावभेदकः ।**
**शिरस्तापश्च वातेन पित्तपीडा तृतीयका ॥ ६३ ॥**

---

வெளியே விடுவதும் ச்வாஸிப்பதும் வெகு கஷ்டமாகிவிடும்)

15. க்ராணபாகம் (மூக்கில் ரணமும், வேக்காடும் கடுமையாயும், எரிவும், குத்துவலியும், துர் நீர்க் கசிவும் இருக்கும்)

16. புடகம் (மூக்கிலுள்ள கபம் உலர்ந்து போவது)

17. ஸ்ராவம் (பசுமையும், வெண்மையும் கலந்து அதிகமாக மூக்கிலிருந்து சளி தடித்தாவது தெளிவாகவாவது வெளியாகும்)

18. தீபகம் (மூக்கு சிவந்து, உள்ளும் புறமும் தொட்டால் சகிக்காமல் புகையைப்போல் ச்வாஸம் ஏற்பட்டு எரிவையுண்டாக்கும்)

50. சிரோ ரோகம் (தலை நோவு) :-10 வகை.

1. அர்த்தாவபேதம் (ஒற்றைத் தலைவலி; ஒரு பக்கத்துப் புருவம், கன்னம், காது, கண், நெற்றி இவற்றில் வலியுண்டுபண்ணும். நோய் அதிகமானல் காது அல்லது கண்ணுக்குக் கெடுதியை விளைவிக்கும்)

2. சிரஸ்தாபம் (பொட்டுக்களில் வலி, புருவமுத்தி

चतुर्थी कफजा पीडा रक्तजा सन्निपातजा ।
सूर्यावर्तः शिरःपाकः क्रिमिभिः शंखकं तथा ॥

---

லும், மண்டையிலும் கடுமையான வலி, காதில் இரைச்சல், கண் பிதுங்குவதுபோல் வலி, தலை சுற்றல், தாடையில் பிடிப்பு, வெளிச்சத்தில் வெறுப்பு இவை இருக்கும்)

3. பித்தஜம் (தலை நெருப்புப்பற்றியதுபோன்று சூடுள்ளதாகவும், கண்ணிலும் மூக்கிலும் அழற்சியும் இருக்கும். இரவு நேரத்தில் நோய் தணியும்)

4. கபஜம் (தலை எதனுலோ கட்டப்பட்டதுபோன்றும், முகம் வீங்கிய கண்களுடனும், தொட்டால் குளிர்ச்சியாகவும் இருக்கும்)

5. ரக்தஜம் (பித்த சிரோரோகத்தைப்போல் இருக்கும். தொட்டால் பொறுக்கமுடியாமல் இருக்கும்)

6. ஸன்னிபாதஜம் (வாத, பித்த, கப சிரோரோகங்களில் கூறிய எல்லா குறிகளும் சேர்ந்து இருக்கும்)

7. ஸூர்யாவர்த்தம் (சூரியோதயத்திற்கு முன்பு கண், புருவம் இவற்றில் வேதனை ஆரம்பித்து சூரியன் மேலே கிளம்பக் கிளம்ப தலை நோயும் அதிகமாகும். சூரியன் மறையும் சமயத்தில் வலியும் க்ரமமாகத் தணியும்,

## ५१. नेत्रसंधिरोगाः— 9

**नेत्रसन्धिसमुद्भूताः नव रोगाः प्रकीर्तिताः ।**

---

வெகு கஷ்ட ஸாத்தியமானது)

8. சிரப்பாகம் (தலையில் வேக்காடு)

9. கிருமிஜம் (தலையில் கிருமிகள் சேர்ந்தால் தலை ஊசியினால் குத்தப்படுவதுபோலவும், ஜந்துக்கள் நெளிவதுபோலவும் இருக்கும். மூக்கிலிருந்து சீழும் வேறு துர்நீரும் வெளி வரும்)

10. சங்ககம் (தாங்க முடியாத வலியும், சிவப்பும், அழற்சியும் உள்ள வீக்கம் கன்னத்தில் தோன்றி, தொண்டையிலும், தலையிலும் வியாபித்து சீக்கிரம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்)

51. நேத்திரஸந்தி [1]ரோகம் :-9 வகை.

---

1. நேத்திரத்தில் ஸந்திகள் என்ற பாகங்கள் 6:-

1. பக்ஷ்ம-வர்த்ம ஸந்தி = இமையும் ரப்பையும் சேருமிடம் 2. வர்த்ம சுக்லஸந்தி = ரப்பையின் மாம்ஸ பாகமும் வெண் மடலும் சேருமிடம். 3. சுக்லகிருஷ்ண ஸந்தி = வெண் மண்டலமும் கருவிழியும் சேருமிடம். 4. கிருஷ்ண திருஷ்டி ஸந்தி = கருவிழியும் பாப்பாவென்கிற கண்மணியும் சேருமிடம். 5. கநீநிகா ஸந்தி = மூக்கின் ஓரத்தில் கண் சேரும் ஸந்தி. 6. அபாங்க ஸந்தி = கடைக்கண் ஸந்தி.

**जलस्रावः कफस्रावो रक्तस्रावश्च पर्वणी ॥ ६५ ॥**
**पूयस्रावः क्रिमिग्रंथिरुपनाहस्तथालसी ।**

---

1. ஜலஸ்ராவம் (கண்ணிலிருந்து சதா நீர்வடிதல்)
2. கபஸ்ராவம் (ஸந்தியிலிருந்து வெளுப்பாகவும் கனமாகவும், பிசுபிசுப்பாகவும் துர்நீர் வடியும்)
3. ரக்தஸ்ராவம் (இரத்தம் மிகுதியாய் வெளிப் படும்)
4. பர்வணீ (சிவப்பாகவும், கனமில்லாததாகவும், அழற்சி, குத்தலுடனும், வீக்கத்தோடும், சிறு முளைபோன்ற பிளவை கிருஷ்ண-சுக்ல ஸந்தியில் உண்டாகும். கபம், வாதம் இரத்தம் இவற்றின் அதிகரிப்பால் உண்டா கிறது)
5. பூயஸ்ராவம் (ஸந்தியில் வேக்காடுடன் கூடிய வீக்கத்திஞல் சீழ் வடியும். ஸந்நிபாத தோஷத்தால் உண்டாவது. அசாத்திய ரோகம்)
6. கிருமிக்ரந்தி (வர்த்ம-சுக்ல ஸந்தியில் பலவித ரூபமுள்ள கிருமிகள் உற்பத்தியாய் ரப்பை யிலிருந்தும், இமையிலிருந்தும் அவற்றின் ஸந்திகளின் வழியாக கண்ணுக்குள் பிர வேசித்து அரிப்புண்டாக்கி அந்த அவய வத்தைக் கெடுத்துத் தின்றுவிடும்)

पूयालस इति प्रोक्ता रोगा नयनसन्धिजाः ॥ ६६ ॥

## ५२. तिमिरम् — 6

तिमिराणि षडेव स्युर्वातपित्तकफैस्त्रयः ।

---

7. உபநாஹம் (திருஷ்டிஸந்தியில் பெரிய கிரந்தி உண்டாகும். இது பக்குவமடையாமல் அதிக அரிப்பையுண்டுபண்ணும். வலி இராது)

8. அலஜீ (பர்வணீயைப்போல உண்டாகும். ஆனல் பசுமூலே போன்ற பெரிய முளேயையுண்டு பண்ணும். கபம், பித்தம், ரத்தம் இவற்றின் அதிகரிப்பினுல் உண்டாகிறது)

9. பூயாலஸம் (கண் குவளேயின் ஸந்தியில் வீக்கமும், குத்தலும், துர்நாற்றமுள்ள சீழ் வடிதலும் இருக்கும்)

52. திமிரம் (கண்பார்வை மறைப்பினுல் ஏற்படும் கோளாறுகள்) 6 வகை.

1. வாதஜம் (உருவங்கள் சுழன்றசைவதுபோலவும், அழுக்கடைந்தவை போலவும், சென்னிறமாய் இருப்பவை போலவும் வக்கிரமாகவும் புலப்படும்)

2. பித்தஜம் (சூரியன், மின்மினிப்பூச்சி, வானவில் இவற்றைப்போன்ற உருவங்களும், அநேக

त्रिदोषैरुपसर्गेण रक्तेनेति प्रकीर्तिताः ॥ ६७ ॥

## ५३. दृष्टिरोगाः — 8

अष्टधा दृष्टिरोगाः स्युस्तेषु पित्तविदग्धकम् ।

---

வித நிறங்களின் தோற்றங்களும், புலப்படும். பொதுவாக எதுவுமே நீலநிறமாகத் தோன்றும்)

3. கபஜம் (உருவங்கள் வெண்மையாகவும், தண்ணீரால் நினைக்கப்பட்டவைபோலும், ஸ்தூலமாகவும், மேகங்கள் சூழ்ந்ததுபோலவும் தோன்றும்)

4. திரிதோஷஜம் (உருவங்கள் பல நிறமுள்ளவைகளாகவும், ஒன்றிருக்க மற்றொன்றாகவும், ஒன்றே இரண்டு அல்லது பலவாகவும், ஒரு விகாரமுமில்லாதிருப்பினும் அங்கஹீனமடைந்தவைபோலவும், எல்லாம் ஜோதிமயமாகவும் தென்படும்)

5. உபஸர்கஜம் (வாத, பித்த, கப, திரிதோஷங்களில் ஏற்படும் எல்லா குறிகளும் உடையது)

6. ரக்தஜம் (உருவங்கள் சென்னிறமாகவும், பற்பல வகையான இருளடர்ந்த தோற்றமுள்ளவையாயும், வெண்மையானவை கருநிறமாகவும், பசுமையாகவும் காணப்படும்)

आम्लपित्तविदग्धं च तथैवोष्णविदग्धकम् ॥
नकुलांध्यं धूसरांध्यं रात्र्यंधं ह्रस्वदृष्टिकम् ।

---

53. திருஷ்டி ரோகம் (பார்வை அல்லது கண்விழியில் உண்டாகும் வியாதிகள்) :-8 வகை.

1. பித்த விதக்தம் (திருஷ்டிபாகம் நிலையாகப் பசுமை நிறமடைந்து உருவங்களெல்லாம் மஞ்சள் நிறமாகத் தோன்றும்)

2. அம்லபித்த விதக்தம் (புளிப்புள்ள ஆகாரத்தை அதிகமாக உட்கொள்வதினால் கண் சிவந்து நீர்க்கசிவு அரிப்பு இவை உண்டாகும்)

3. உஷ்ண விதக்தம் (உஷ்ணம் கண்ணுக்கேறி பகலில் மங்கலான பார்வையும், இரவில் கண் தெரியாமையும் ஏற்படும்)

4. நகுலாந்த்யம் (பகலில் கண் தெரியும். இரவில் தெரியாது. கீரியின் கண்போல் ப்ரகாசிக்கும். பலவகையான நிறமுள்ளதாக உருவங்கள் தோன்றும்)

5. தூஸராந்த்யம் (ஜுரம், கண் ரோகங்கள், சோகம் இவைகளால் வாயு அதிகரித்துப் புகை மறைப்பதுபோல் பார்வையை மறைப்பது)

6. ராத்ர்யந்த்யம் (இரவில் கண் தெரியாது)

7. ஹ்ரஸ்வதிருஷ்டிகம் (பகலில் வஸ்துக்கள்

गंभीरदृष्टिरित्येते रोगा दृष्टिसमुद्भवाः ॥ ६९ ॥

५४. शुक्रदोषाः — ८

शुक्रदोषास्तथाष्टौ स्युर्वातात्पित्तात्कफेन च ।
कुणपः श्लेष्मवाताभ्यां पूयाभं श्लेष्मपित्ततः ॥ ७० ॥
क्षीणं च वातपित्ताभ्यां ग्रन्थिश्च श्लेष्मपित्ततः ।
मलाभं सन्निपाताच्च शुक्रदोषा इतीरिताः ॥ ७१ ॥

---

சிறியதாயும், கஷ்டப்பட்டுப் பார்க்கக்கூடிய தாயும் இருக்கும்)

8. கம்பீரத்ருஷ்டி (வாயு கண் ஸிரைகளினுட் புகுந்து ஆழ்ந்த இடத்தில் வலியுண்டாகும்)

54. சுக்லதோஷம் --8 வகை.

| | |
|---|---|
| தனித்தனியே வாத, பித்த, கபங்களால் | 3 |
| கபவாதத்தால்-குணபம் (துர்நாற்றமுடையது) | 1 |
| கப பித்தத்தால் பூயாபம் (சீழ்போன்றது) | 1 |
| வாத, பித்தத்தால்-க்ஷீணம் (குறைவு) | 1 |
| வாத கபத்தால்-க்ரந்தி (கட்டிகளுள்ளது) | 1 |
| ஸன்னிபாதத்தால்-மலாபம்[1] (மலத்தைப் போன்ற வர்ணமுடையது) | 1 |

---

1. ரத்ததோஷத்தினால் குணபமும், கபவாதத்தினால் க்ரந்தியும் ரத்தபித்தத்தினால் பூயாபம் என்னும் சீழ்போன்ற தன்மையும், வாத பித்தத்தினால் க்ஷீணமும் உண்டாகும் என்று அஷ்டாங்க ஹ்ருதயம் முதலிய நூல்களில் காணப்படுகிறது.

## ५५. गर्भरोगाः — 4

चत्वारो गर्भजा रोगा उपविष्टकगर्भकः ।
नागोदरो मल्लकाख्यो मूढगर्भ इतीरितः ॥ ७२ ॥

इति प्रसिद्धा गदिता मया रोगा महेश्वरि ।
असंख्येयास्तथा चान्ये तेषां संख्या न युज्यते ॥

॥ इति नाडीविज्ञानीये एकादशः पटलः ॥

---

55. கர்ப்பரோகம் ; – 4 வகை.

1. உபவிஷ்டக கர்ப்பம் (கர்ப்பம் தாங்கமுடியாமல் ரத்தம் பெருகி அதனல் கர்ப்பம் வளராமல் இருப்பது).
2. நாகோதரம் (வாதத்தால் கர்ப்பம் உலர்ந்து போவது)
3. மல்லகம் (ரத்தப்பெருக்கு முதலியவை உள்ளேயே தங்கி வாதம் ப்ரகோபமாகி கர்ப்பம் தடைப்படல்)
4. மூடகர்ப்பம் (கர்ப்பம் தலை முதலில் வராமல் மாறுபட்டு வருவது)

இவ்விதம் ப்ரஸித்தமான ரோகங்கள் கூறப்பட்டன. எண்ணிறந்த வேறு பல ரோகங்களும் இருக்கின்றன. அவைகளை இவ்வளவு என்று சொல்ல இயலாது.

பதினோராவது படலம் முற்றிற்று.

# ॥ द्वादशः पटलः ॥

पार्वत्युवाच —

आशयस्था इमे दोषाः कथं नाड्यां प्रकाशिताः ।
नाभेरधःस्थितो वायुः पित्तं नाभेरथोर्ध्वगम् ॥ ७४ ॥

कण्ठदेशे स्थितः श्लेष्मा कथं नाड्यां प्रकाशते ।
नाड्यां हस्तगतायां तु दोषा नाभ्यादिकण्ठगाः ॥

प्रकाशन्ते कथं स्वामिन् रोगारोग्यैकहेतवः ।
असंगतिरियं देव तन्मे ब्रूहि महेश्वर ॥ ७६ ॥

---

## பன்னிரண்டாவது படலம்.

ரோகங்களின் விவரங்களைக் கேட்டபிறகு பார்வதி தேவியார் வியாதிகளை நாடியில் எவ்வாறு அறியமுடியும் என்பதைப்பற்றி வினவுகிறார்:—

“கபமோ தொண்டையில் உள்ளது. அது கையி லுள்ள நாடியில் எப்படித் தெரியும்? அதேவிதமாக தொப்புளுக்கு மேலும் கீழும் உள்ள பித்த வாதங்களை யும் கைநாடியைக் கொண்டு எவ்வாறு அறிந்து வியாதி, ஆரோக்கியம் முதலியவற்றை அறியலாம்? இது பொருத்தமற்றதாகத் தோன்றுகிறதே” என்றார்.

ईश्वर उवाच —

मूलाधारे विधिग्रन्थिः तत्र वाताशयः स्मृतः ।
हृदंबुजे हरिग्रन्थिस्तत्र पित्ताशयः स्मृतः ॥ ७७ ॥
कण्ठदेशे हरग्रन्थिस्तत्र श्लेष्माशयः स्मृतः ।
मूलकन्दात्समुद्भूता नाड्यो बहुविधाः स्मृताः ॥
तन्मध्ये त्रीणि च श्रेष्ठाः ब्रह्मविष्णुशिवात्मिकाः ।
तन्मध्ये चोत्तमा नाडी सुषुम्ना सूक्ष्मरूपिणी ॥ ७९ ॥

---

*அதற்குப் பரமன் அளித்த பதில் வருமாறு :—*

*மூலாதாரத்தில் ப்ரம்மக்ரந்தியும் அதில் வாதாசயமும் இருக்கிறது.*

*ஹ்ருதய கமலத்தில் விஷ்ணுக்ரந்தியும் அதில் பித்தாசயமும் இருக்கிறது.*

*கழுத்தில் ருத்ரக்ரந்தியும் அதில் கபாசயமும் இருக்கிறது.*

*சரீரத்திலுள்ள நாடிகள் எல்லாம் மூல கந்தத்திலிருந்து உண்டாகின்றன. அந்த நாடிகள் பலவிதமானவை. அவைகளில் மூன்று நாடிகள் முக்கியமானவை. அம்மூன்று நாடிகளும் ப்ரம்ம, விஷ்ணு, சிவஸ்வரூபமானவைகள். அந்த மூன்று நாடிகளிலும் அதி ஸூக்ஷ்மமான நாடிக்கு 'ஸுஷும்னை' (சுழிமுனை) என்று பெயர். அந்த 'ஸுஷும்னா' நாடியானது மிகவும் உத்தமமானது. உத்தமமான அந்த 'ஸுஷும்னா'*

वाताशयाद्विनिर्गत्य पित्तस्थानमुपेत्य च ।
पित्ताशयाद्विनिर्गत्य श्लेष्मस्थानमुपेत्य च ॥ ८० ॥

श्लेष्माशयाद्विनिर्गत्य पश्चिमं मार्गमाश्रिता ।
सहस्रारं ततः प्राप्य चाधोमार्गं प्रविश्य च ॥ ८१ ॥

फालदेशे द्विधा भूत्वा द्वौ कर्णौ च समाश्रिते ।
कर्णदेशाद्विनिर्गत्य नाड्यौ भ्रूमध्यमाश्रिते ॥ ८२ ॥

भ्रुवोर्मध्यादधोदेशे नासिकापार्श्वयोस्तथा ।
निर्गत्य कण्ठमापन्ने ते नाड्यौ द्विप्रकारके ॥ ८३ ॥

चतुर्भूत्वाथ ते नाड्यौ बाहुमूले समाश्रिते ।
निर्गत्य बाहुमूलाभ्यां मणिबन्धान्तमेव च ॥ ८४ ॥

---

நாடி வாதாசயத்திலிருந்து கிளம்பி பித்தாசயத்தை அடைந்து, பித்தாசயத்திலிருந்து கிளம்பி கபாசயத்தை அடைகிறது. கபாசயத்திலிருந்து கிளம்பி பின்புற மார்க்கமாக சிரஸ்ஸிலுள்ள ஸஹஸ்ராரத்தை அடைந்து அங்கிருந்து கீழ்நோக்கி வந்து நெற்றியில் இரண்டாகப் பிரிந்து இரண்டு காதுகளையும் போய்ச் சேருகிறது. காதுகளிலிருந்து கிளம்பி ப்ரூமத்தியத்தை அடைகின்றன. பிறகு அவ்விரண்டு நாடிகளும் ப்ரூமத்தியிலிருந்து கிளம்பி அதன் கீழேயுள்ள நாசியின் இருபக்கங்களையும் அடைகின்றன. அங்கிருந்து கிளம்பி அவ்விரு நாடிகளும் கழுத்தை அடைகின்றன. பிறகு அந்த

हस्तयोर्मणिबन्धौ च प्राप्य नाडीद्वयं तथा ।
वातादिकस्य संज्ञां च लब्ध्वा ह्यंगुळमात्रतः ॥

रोगारोग्यैककृदभूच्छृणु पार्वति मद्वचः ।
पुनर्द्वे च ह्यधोदेशाद्विनिर्गत्य च पार्श्वयोः ॥ ८६ ॥

मार्गं प्राप्य कटेर्देशादूगुल्फपर्यन्तमागते ।
गुल्फस्थाने तु विश्रम्य जाते रोगप्रदर्शने ॥ ८७ ॥

मणिबन्धस्य मूले तु नाडीस्फुरणमुच्यते ।
एका नाडी त्रिधा भिन्ना वातपित्तकफात्मिका ॥ ८८ ॥

---

இரண்டு நாடிகளும் நான்காகப் பிரிந்து பக்கத்திற்கு இரண்டு வீதம் பாஹு மூலத்தை (புஜத்தின் உச்சியை) அடைகின்றன. அங்கிருந்து கிளம்பிப் பக்கத்துக்கு ஒன்ருக இரண்டு நாடிகள் இரண்டு கைகளின் வழியாக மணிக்கட்டுவரை செல்லுகின்றன. அங்கு அந்த நாடிகள் வாதம், பித்தம், கபம் என்ற பெயரை அடைந்து ஓர் விரலகல அளவுள்ளவைகளாய் வியாதியையும் ஆரோக்கியத்தையும் தெரிவிக்கின்றன. மற்ற இரண்டு நாடிகளும் விலாப்புறங்களின் வழியே இடுப்பில் வந்து சேர்ந்து கணுக்கால்வரை செல்லுகின்றன. கணுக்காலில் தங்கி வியாதிகளை அறிவிக்கின்றன.

இனி மணிக்கட்டுகளின் அடியில் நாடியின் துடிப்புக் கூறப்படுகிறது. ஒரே நாடியானது வாதம், பித்தம், கபம்

आद्यांगुले वातनाडी पित्तनाडी द्वितीयगा ।
तृतीया कफनाडी स्यादेवं नाडी त्रिधा मता ॥ ८९ ॥

कुपितो यदि चाशयेऽति वायुः कुपितं वा यदि चाशयेऽति पित्तम् ।
कुपितो यदि चाशये कफः स्यादिह नाड्यां कुपिता भवन्ति दोषाः ॥ ९० ॥

आशये शमिता दोषा नाड्यां च शमितास्तथा ।
आशये वक्रगा दोषा नाड्यां वक्रा भवन्ति च ॥ ९१ ॥

---

என மூன்றுவிதமாக இருக்கிறது. முதல் விரலில் வாத நாடி, இரண்டாவது விரலில் பித்தநாடி, மூன்றாவது விரலில் கபநாடி, என நாடி மூன்று விதம் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

வாதாசயத்தில் வாதமும், பித்தாசயத்தில் பித்தமும், கபாசயத்தில் கபமும் ப்ரகோபத்தையடைந்தால் (அதிகரித்தால்) அவைகள் கையிலுள்ள நாடியிலும் ப்ரகோபமடைகின்றன. வாதம் முதலியவைகள் அவைகளின் ஆசயங்களில் சமனமடைந்தால் நாடியிலும் சமனமடைகின்றன. அவைகள் ஆசயங்களில் மாறுபாடடைந்தால் நாடிகளும் மாறுபாடடைகின்றன.

ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கும் கொடிகளின் தொகுதியில் ஒரு கொடி அசைத்தால் எல்லாக்

लतासंघचलन्यायात्सर्वत्रापि चलाभवत् ।
इति ज्ञात्वा नाडिमूलं चिकित्सामाचरेद्भिषक् ॥२९२॥

॥ इति नाडीविज्ञानीये द्वादशः पटलः ॥

॥ नाडीचक्रं संपूर्णम् ॥

---

கொடிகளும் அசைவதுபோல் சரீர நாடிகள் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமுடையவைகளாயிருப்பதால் நாடிகளின் சலனமானது சரீரம் முழுமையும் வியாபித்திருக்கிறது.

இவ்விதம் நாடிகளின் தத்துவத்தை அறிந்துகொண்டு வைத்தியன் சிகிச்சை செய்யவேண்டும்.

பன்னிரண்டாம் படலம் முற்றிற்று.

நாடீ சக்கரம் முற்றுப்பெற்றது.